Registered as a News paper

# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை:6 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 7 சனிக்கிழமை(23-8-1997) SANJEAVY- Regenerative Tamil Weekly சிகரம்:12

## ஐந்து நாகபாம்புகள் இணைந்து காட்சி!

### சாவகச்சேரி ஆலயத்தில்!!

தென்மராட்சி, ஒக.23

சாவகச்சேரி வாரிவனநாத புராதன தான் தோன்றி சிவன் ஆலயத்தின் பழைமையான இத்தி மரத்தில் ஐந்து நாகபாம்புகள் ஒன்றிணைந்து மக்களுக்குக் காட்சி தருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் இக்காட்சியைக் காண்பதற்காக தினசரி பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஆலயத்தில் கூடிவருகின்றனர்.

இந்த ஐந்து பாம்புகளும் ஒருகிளையில் காட்சி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்துக்கு அனல்மின் நிலையம்!

யாழ்ப்பாணம், ஒக. 23

குடாநாட்டின் சகல பிரதேச மக்களுக்கும் மின்சார விநியோகத்தை வழங்கும் நோக்குடன் 30 மெகா வாட் வலுவுள்ள டீஸல் அனல் மின் நிலையம் ஒன்றை காங்கேசன்துறையில் நிறுவ நடடிக்கை எடுக்கப்படுகிறது.

மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் வி. ராஜேந்திரன் மேற்கண்ட தகவலை சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

தற்சமயம் பொருத்தப்பட்டுள்ள ஜெனரேட்டர்கள் மூலமாக இதுவரை 7 ஆயி

(6ஆம் பக்கம் பார்க்க)

# புளியங்குளத்தைப் படைகள் கைப்பற்றியதாக அறிவிப்பு!

## கடும் சண்டை தொடர்கிறது

கொழும்பு, ஒகஸ்ட் 23

'வெற்றி உறுதி' நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஸ்ரீலங்கா அரசுத் துருப்புகள் நேற்று முன்தினம் மாலை புளியங்குளம் சந்தியிலிருந்து சுமார் இருநூறு யார் தொலைவில் உள்ள புளியங்குளம் ரயில் நிலையத்தைக் கைப்பற்றியதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று அறிவித்தன.

அப்பகுதியில் கடும் சண்டை தொடர்வதாகவும் அறிவிக்கப்பட்டது.

வவுனியாவில் இருந்தும், வெலிஓயாவிலிருந்தும் கடந்த மே 13 ஆம் திகதி 'உண்மை வெற்றி' இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து இரு முனைகளிலும் முன்னேறிய படையணிகள் இரண்டும் புளியங்குளத்தில் இணைவதற்கு முன்னர் திட்டமிட்டிருந்தும் -

புலிகளின் கடும் எதிர்ப்பால் அது வாய்க்காமல் போகவே, புளியங்குளத்துக்கு தெற்கே மூன்று மைல் தொலைவில் உள்ள ஒரு பகுதியில் அவை இணைந்ததும் - தெரிந்தவையே.

அப்பகுதியிலிருந்து கடந்த செவ்வாயன்று ''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கையின் மூன்றாவது கட்டத்தை ஆரம்பித்து, வடக்கு நோக்கி இரு முனைகளிலும் முன்னேறிய படையணிகளின் ஓரணியே தற்போது புளியங்குளம் ரயில் நிலையப்பகுதியைக் கைப்பற்றியிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

கண்டி வீதிக்கு சமாந்தரமாகச் செல்லும் ரயில் பாதையில் -- கண்டி வீதியிலிருந்து சுமார் இருநூறு மீற்றர் தூரத்தில் புளியங்குளம் ரயில் நிலையம் உள்ளது.

ரயில் நிலையத்துக்கு திரும்பும் கண்டி வீதிப் பகுதியில் இருந்து வடக்கு நோக்கி சுமார் இருநூறு மீற்றர் தொலைவில் புளியங்குளம் சந்தி அமைந்துள்ளது.

யுத்த களப் பிரதேசத்தில் இரவு நேரத்திலும் பல முனைகளிலும் புலிகளும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் சேவைக்கு கிரேக்க நாட்டுக் கப்பல்!

கொழும்பு, ஒக. 23

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் சேவையில் ஈடுபடுத்தப்படக் கூடிய கிரேக்க கப்பல் ஒன்றை கப்பல் கூட்டுத் தாபனம் இனம் கண்டுள்ளதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலையில் இருந்து புறப்படும் கப்பல் கரையில் இருந்து 50 மைல் தூரத்திலும், 25 மைல் வேகத்திலும் செல்லக் கூடியதாக இருக்க வேண்டும் என்று இது தொடர்பாக அத்தியாவசிய சேவைகள் நாயகத்தால் பிரசுரிக்கப்பட்ட கேள்விப்படிவத்தில் கேட்கப்பட்டிருந்தது.

இந்த நிபந்தனைகளுக்கு ஏற்ற வகையில் சேவையாற்றக் கூடிய கிரேக்க கப்பல் ஒன்றை கப்பல் கூட்டுத் தாப

(6ஆம் பக்கம் பார்க்க)

## கொரியக் கப்பலை புலிகள் விடுவிப்பர்!

யாழ்ப்பாணம், ஒக. 23

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடித்துவிட்டு கொழும்பு திரும்பிய சமயம் இடைவழியில் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்ட கொரியக் கப்பலை விடுவிக்க விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து -

முல்லைத்தீவில் இருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொடியுடன் திருகோணமலைக்கு அக்கப்பலை எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு யாழ். அலுவலக அதிகாரி செல்வி ஆன் சஞ்சீவிக்கு தெரிவித்தார்.

இக் கப்பலின் நிறுவனத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நியமனம்

கொழும்பு, ஒக. 23

வடக்கு--கிழக்கு மாகாணத்துக்கான உணவு மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான அத்தியாவசிய சேவைகள் ஆணையாளராக சோமபால குணதீர ஜனாதிபதியால் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவராகவும் அவர் தொடர்ந்து பணிபுரிவார்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளராக இதுவரை பதவி வகித்த எம். என். ஜுனைத் அண்மையில்நடந்த அமைச்சரவை மாற்றத்தை அடுத்து புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுச் செயலாளராக நியமிக்கப்பட்டதால் அந்தப் பதவி வெற்றிடமாக இருந்து வந்தது.

### பிந்திய செய்தி

## திருமலையிலிருந்து இன்று கப்பல்!

திருகோணமலை, ஒக. 23

திருகோணமலையில் இருந்து ''தராகி'' கப்பல் 290 பயணிகளுடன் இன்று காங்கேசன்துறை நோக்கிப் புறப்படுவதாக திருகோணமலை பிரதேச செயலர் வி. வேலும் மயிலும் தெரிவித்தார்.

அதேநேரம் - திருமலை - காங்கேசன் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிப்பது தொடர்பான மாநாடு நாளை மறுதினம் கொழும்பில் நடைபெறும் என்றும் அவர் சொன்னார். (உ-3)

## புலமைப் பரிசில் முடிவுகள் 'அவுட்!'

கொழும்பு, ஒக. 23

யாழ். குடாநாட்டில் 1996 இல் நடைபெற்ற 1995 ஆம் ஆண்டுக்கான — விசேட புலமைப்பரிசில் பரீட்சையின் முடிவுகள் கொழும்பில் வெளியாகியுள்ளன.

அனேகமாக இன்று அப்பரீட்சை முடிவுகள் யாழ்ப்பாணத்தில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பரீட்சையில் குடாநாட்டில் முதல் பத்து இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரமும் அவர்கள் பெற்ற புள்ளிகளும் வருமாறு:-

★ எஸ். லக்மன் (இராமநாதன் கல்லூரி) - 182

★ பி. செந்தில் (தம்பசிட்டி எம். எம். பி. எஸ்.) - 182

★ பி. கேசவன் (நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை ம. வி.) - 178

★ ஜெயந்தன் கஜானன் (சென். ஜோன்ஸ்) -177

★ கௌசல்யா (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை) 176

★ ரி. கார்த்திகா (உடுப்பிட்டி மகளிர்) — 176

★ ரி. கீர்த்திகா (உடுவில் மகளிர்) — 175

★ ஆர் அகல்யா (சுண்டுக்குளி மகளிர்) - 174

★ ரி. துளசி (காரைநகர் வலந்தலை தெற்கு அ. மி. த. க.)- 174

★ பி. நிமலச்சந்திரன்

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதி, மக்கிக் கிடங்கடி பழைய பார்( BAR) இரண்டறைகளுடன், கடைக்கட்டடமும், நிலப்பரப்பு ஒன்றும் குளி 2.68ம் பயிர்வகைகளும், உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: L. மோகன் மாஸ்டர், சங்கரப்பிள்ளை வீதி, மக்கிக்கிடங்கடி, ஆனைக்கோட்டை. [49136]

பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஆண்டு 3 முதல் O/L வரை ஆவணி மாதப் பயிற்சிகள் எம்மிடம் பெறலாம். பரீட்சைப்பகுதி, BOND Institutes, யாழ்ப்பாணம். [49114]

1 ஸ்ரீ A 35 பெற்றோல் கார் தொடர்ச்சியாக ஒருவரின் பாவிப்பிலுள்ளது. விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr. என். வாமதேவன்71-A, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். [49137]

பனைமரத்தால் அமைக்கப்பெற்ற கொட்டிலும், பனைமரச் சிலாகைகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- மு.காங்கேசு, ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலை. [49123]

## மலிவு விற்பனை

ஊர்காவற்றுறை சண்முக வித்தியாலயத்துக்கு அருகில் 10 பரப்பு காணி மலிவு விற்பனைக்குஉண்டு. தொடர்பு: வே. த. காசிநாதன் 3ஆம் கட்டை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். [49158]

## மரம்

சர்க்கரை வேம்பு, வேம்பு, பலா, கரிசலாங்கண்ணி. மில்க்வைற்சோப், சலவைப் பவுடர் வெற்றுறைகள்10-க்கு அல்லது ரூபா 10/- வேப்பம் பிண்ணாக்கு, யோகாசனப்புத்தகமும், படமும் ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்- மில்க்வைற். [சி/1365]

## திருமண சேவை

சகல மதம், வெளிநாடு, உத்தியோகம், தொழிசார் மணமக்கள் தேர்வுக்கு சேவை நோக்குடைய நம்பகமான எமது சேவையை நாடலாம். 'சேவை நம்பகம், விவாகசேவை, வைமன் வீதி, நல்லூர். [49166]

## வகுப்பு

ஆங்கிலம் ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரை வீட்டிற்கு வந்து கற்பிற்கப்படும். பாடத்தில் குறைவானவர்களுக்கு ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். ஆசிரியர் தொடர்பு: மே/பா. 647, 'உதயன்' பணிமனை யாழ்ப்பாணம். [49109]

## ஓர்கன் வகுப்பு

ஓர்கன், கிற்றார், புல்லாங்குழல் ஆகிய வகுப்புகள் எல்லா நாள்களிலும் 2 மணியிலிருந்து நடைபெறுகின்றன. முகவரி: கரவீணா. கற்பகப்பிள்ளையார் கோயிலடி 23, குறோசற்வீதி, சுண்டுக்குளி (கல்வி வலயம் Iஇன் அருகாமையில். [48864]

## தவறிவிட்டது

க. தவேந்திரன் என்பவருடைய மண்நிற கைப்பை மூக்குக்கண்ணாடி மற்றும் சில பொருள்களுடன் நாவலர் வீதியில் வைமன் வீதிக்கு அருகாமையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். க. தவேந்திரன், சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கம் (I.C.R.C), NO. 120, கோயில் வீதி. (சன்மானம் வழங்கப்படும்). (49170)

## தேவை

5 அந்தர் தராசு, இரும்புப் பெட்டி என்பன உடன் தேவை. தொடர்பு: இல. 109, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (49134)

ஒருநாள் தொடக்கம் 10 நாளுடைய புறோயிலர் இன கோழிக் குஞ்சு உடன் தேவை. நியாயமான விலை தரப்படும். தொடர்பு: NO. 101, இலுப்பையடிச் சந்தி அருகாமை, பலாலி றோட், யாழ்ப்பாணம். (49152)

## ஆண்டு 6– O /L

கணிதம், ஆங்கிலத்தில் உயர்ந்த பெறுபேறுடைய வாரம் 5 மணித்தியாலம். ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும். தொடர்பு: ஆசிரியர், 85, சிவன் கோயிலடி மேற்கு வீதி, திருநெல்வேலி. (49150)

## மணமகள் தேவை

குருகுலம், திருவாதிரை நட்சத்திரம் 3– ஆம் பாதம், அரசாங்க உத்தியோகம் பார்க்கும் 31 வயதுடைய மணமகனுக்கு 28 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும் சாதகம், படம் என்பவற்றை அனுப்பவும் பொருத்தமற்றவை திருப்பி அனுப்பி வைக்கப்படும். தொடர்பு: மே/ பா, 649, உதயன் யாழ்ப்பாணம். (49138)

## மணப்பெண் தேவை

யாழ். இந்துகௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கடக லக்கினம், சித்திரை நட்சித்திரமுடைய 35 வயது சட்டத்தரணி தற்போது கனடாவில் வசிப்பவரும், இலங்கையில் தொழில் புரிய விரும்பும் மணமகனுக்கு M. B. B. S மணமகள்தேவை. தொடர்பு: அ. குமாரவேலு, 132/1, கச்சேரி – நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (49153)


# பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்

★ ஐஸ்கிறீம் ★ குளிர்பானம் ★ கேக்வகை
★ பிஸ்கட் ★ இனிப்பு ★ பீடா
ஆகியவை தயாரிப்பதற்கு வேண்டிய சகல விதமான மூலப்பொருள்களும்,

★ ஊதுபத்தி ★ சாம்பிராணி வாசனைத் திரவியம் ஆயுர்வேத மருந்துகள் தயாரிக்கும் மூலிகை வகைகள்

★ குங்குமம் ★ குங்குமப்பூ ★ எண்ணெய்
★ நெய் ★ சாப்பாட்டு இரசாயனப் பொருள்கள்

★ பிஸ்கட் ★ சொக்கிளேட் ★ டொபி
வகைகளுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்:

## பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்

109, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(49147)


# மானிப்பாய் கோவில்பற்று பல நோக்குக் கூட்டறவுச் சங்கம்

சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள கீழ்க்குறிப்பிடப்படும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. இலிகிதர்:** குறியீட்டு இல. 302:14

(நிரந்தரம்) சுற்றுநிருப இல: **165/88** இன் படி இல. **302:16**

தகைமைகள்:

க. பொ. த. (சாதாரணதரத்தில்) 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம், தமிழ் இரண்டிலும் திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களிலான சித்தியுடன், கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணம்) அல்லது கணக்கியலுடன் தொடர்பான பயிற்சி நெறியில் சித்தியும்.

வயது: **18 – 35** வரை

சம்பளம்:

**700 - 15×10 - 20 × 5 - 950**

(இதோடு சங்கத்தினால் வழங்கப்படும் சகல படிகளும் வழங்கப்படும்)

கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களுக்கும், சங்க எல்லைப்பரப்பில் வதிவோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

**2. காவலாளி** (சமயோசிதம்)

தகைமைகள்:

8 ஆம் வகுப்புச் சித்தியுடன் தேகஆரோக்கியமும், இத்துறையில் அனுபவமும்.

வேதனம்:

கடமையில் ஈடுபடும் நாளொன்றுக்கு ரூ. **80** மட்டும் வழங்கப்படும்.

வயது: **18 - 45** வரை

சங்க எல்லைப்பரப்பில் வதிவோரிடம் மட்டும் விண்ணப்பம் கோரப்படுகிறது.

மேற் குறிப்பிட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ரூபா 5 செலுத்தி சங்கத்தினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்பத்திரத்தை பூரணப்படுத்தி **19-09-1997** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக ''தலைவர், மானிப்பாய் கோவில் பற்று பல நோ. கூ. சங்கம், மானிப்பாய்'' என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்

23. 08. 97

(சி/1360)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 22 – 07 – 1922

உதிர்வு: 24 – 07 – 1997

## தாமோதரம்பிள்ளை குணசிங்கம்

(ஓய்வு பெற்ற நேரக்காப்பாளர், இ. போ. ச., யாழ்ப்பாணம்)

(வெற்றிலைக்கடை உரிமையாளர், 54, சந்தைஉட்புறம், சாவகச்சேரி)

தீராத கவலைக்குள் ஆழ்த்தி விட்டீரே ஐயா
மாறாத வேதனை தான் நம்மை வாட்டி வதைக்கிறது
ஆறாத துன்பங்கள் உம் நினைவு எம் மனதில்
வேராய் நிலை ஊன்றிவிட்டது வேறுகதி இல்லை எமக்கு.

எமது துயரில் பங்கு கொண்ட அனைத்து இதயங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் 23 – 08 - 97 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்விலும், மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கற்குழி லேன்,
3 ஆம் ஒழுங்கை,
சாவகச்சேரி.

(49156)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு: 30 – 08 – 1961

உதிர்வு: 26 – 07 – 1997

## திருமதி சத்தீஸ்வரி கனகரத்தினம்

(கைதடி கிழக்கு)

எங்கள் குடும்பத்தலைவியே! நீங்கள் எங்கள் மேல் செலுத்திய அணைகடந்த அன்பு, இடையில் ஏற்பட்ட உங்கள் எதிர்பாராத இழப்பு எம்மால் என்றுமே மறக்க முடியாதவை. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம். எமது தெய்வத்தின் இன்னுயிர் பிரிவுகேட்டு எமது துயரில் பங்கு கொண்டு உதவிபுரிந்த, அனுதாபச் செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

நாளை 24-08-97 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

– சி. கனகரத்தினம் குடும்பத்தினர்

கதிர்வேலவன் அரிசி ஆலை,
கை தடி கிழக்கு,
கைதடி.

(49145)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வன்னி யுத்தம் புதிய கட்டத்தில்!

வன்னி யுத்தம் தற்போது புதியதொரு கட்டத்தை அடைந்திருக்கின்றது.

வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கி - கிளிநொச்சி வரை - பாதுகாப்பான தரைவழிப் பாதை ஒன்றைத் திறப்பதற்காக 'உண்மை வெற்றி' படை நடவடிக்கையை ஆரம்பித்த அரசுப்படைகள், கடந்த 103 நாள்களில் - அதன் மூன்றில் ஒரு பகுதி வரை முன்னேறி- சுமார் இருபது கிலோ மீற்றர் பிரதேசத்தில் சுமார் இருபதாயிரம் துருப்புகளை பரப்பி வைத்துக் கொண்டு- அடுத்த கட்டம் குறித்து சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றது.

இந்த மூன்றரை மாத காலத்தில் படையினர் முன்னேற முயலும் போது யுத்த முனையில் சிறிதளவு எதிர்ப்பைக் காட்டி விட்டுப் பின்வாங்குவதும் -

பின்னர் பெருத்த எடுப்பில் திடீரென - அதிரடியாக - ஊடறுப்புத் தாக்குதல் ஒன்றை நடத்தி படையினருக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்துவதும் -

என்று 'ஒளித்துப் பிடித்து வந்த' புலிகள் கூட, தமது தந்திரோபாயத்தில் சிறிது மாற்றம் செய்திருப்பதாகத் தெரிகின்றது.

இதுவரை தங்களை கெரில்லாப் படையணிகள் போல் செயற்படுத்தி வந்த புலிகள், இப்போது அதில் சற்று வித்தியாசமான போக்கைக் கடைப் பிடிக்கத் தொடங்கியிருக்கின்றார்கள்.

'உண்மை வெற்றி' நடவடிக்கைக்கு எதிராக கெரில்லாப்பாணி ஊடறுப்புகளைச் செய்து வந்த புலிகள் -

இவ்வாரம் படையினர் புளியங்குளம் நோக்கி நகர முயன்ற சமயம் பின்வாங்காமல் நேருக்கு நேர் நின்று மோதி, படைகள் தமது பிரதேசத்தை விஸ்தரிக்க விடாமல் முறியடிக்கும் மரபு வழிப் போர் முறையைக் கடைப்பிடிப்பதாக யுத்த களச் செய்திகள் தெரிவிக்கின்றன.

என்றாலும் அரசுடன் நிரந்தரப் படையணி போல நேரடிச் சமர்களில் - மரபு வழிப் போர் முறையில் - ஈடுபடக் கூடிய ஆள்பலமோ, கனரக படைக்கலப் பலமோ, காயமுற்ற துருப்புக்களுக்கு மருத்துவ வசதி வழங்குவதற்கானபலமோ புலிகளுக்கு இல்லை என்பது கண்கூடு.

எனினும் ஓரளவு மரபு வழிச் சமரில் ஈடுபடக் கூடிய - கெரில்லாப் படையணிகளில் இருந்து வித்தியாசப்படக் கூடிய - சிறப்புப் படையணிகளை புலிகள் உருவாக்கி விசேட பயிற்சியளித்துக் களமுனையில் இறக்கியிருக்கின்றார்கள் என்று தகவல்.

இந்த சிறப்புப் படையணிக்கு விசேட சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளன.

தாண்டிக்குளம் ஊடறுப்புத் தாக்குதல், ஓமந்தை - பெரியமடு ஊடறுப்புத் தாக்குதல், ஓமந்தை - இறம்பைக்குளம் ஊடறுப்புத் தாக்குதல் என 'உண்மை வெற்றி' துருப்புக்களுக்கு எதிரான மூன்று ஊடறுப்புத் தாக்குதல்களிலும் புலிகளின் விசேட படையணியைச் சேர்ந்த - நூற்றுக்கும் மேற்பட்ட போராளிகள் களப்பலியானதாகத் தெரிகின்றது.

இந்தப் படையணிகளே புளியங்குளம் நோக்கி முன்னேற முயலும் படையணிகளை முன்னேறவிடாது. நேருக்கு நேர் நின்று மோதி வருவதாகக் கூறப்படுகின்றது.

'உண்மை வெற்றி' துருப்புகளின் மூன்றாம் கட்ட நடவடிக்கை- புளியங்குளத்தைக் கைப்பற்றுவதற்கான முயற்சி — இரண்டொரு தினங்களுக்கு முன்னரே ஆரம்பமாகின. யுத்த களத்தில் இருந்து விரிவான தகவல்கள் இன்னும் எட்டப்படாவிடினும்புலிகளின் எதிர்ப்பு மிகக் கடுமையாக இருக்கின்றது என்பதை மட்டும் ஓரளவுக்கு அறிய முடிகிறது. படையினரின் சில டாங்கிகளை அவர்கள் நாசம் செய்துள்ளனர்; பல ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளனர்; படையினருக்கு பலத்த உயிர், படுகாய இழப்புகளை அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இது மட்டுமல்லாமல் –

மரபுவழிச் சமரில் இரண்டு படையணிகள் ஓர் எல்லையில் நின்று நேருக்கு நேர் மோதும் போது ஒன்றின் விமானங்களுக்கு எதிராக மற்றையது பயன்படுத்தும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் யுத்த முனையில் புலிகள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

விமான எதிர்ப்பு ஏவுகணைகளைப் புலிகள் பயன்படுத்தினார்கள் என்ற தகவல் அரசுத் தரப்பினரால் மட்டுமே வெளியிடப்பட்டது. புலிகளோ, சுயாதீன செய்தி வட்டாரங்களோ அதனை ஊர்ஜிதப்படுத்தவில்லை.

இதற்கு முன்னர் ஸ்ரீலங்கா விமானப் படை விமானங்களுக்கு எதிராக சோவியத் தயாரிப்பு ''சாம்'ஏவுகணைகளையே புலிகள் இடைக்கிடை பயன்படுத்தியதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த நிலையில் மிகக் குறிப்பாக அமெரிக்கத் தயாரிப்பு ''ஸ்ரிங்கர்'' (Stinger) வகை ஏவுகணையை புலிகள் பயன்படுத்தினர் என்று பெயர் குறிப்பிட்டு — ஸ்ரீலங்கா அரசுத் தரப்பு செய்திகளை வெளியிட்டிருப்பது சில சந்தேகங்களைக் கிளப்பியிருக்கின்றது.

சில நாள்களுக்கு முன்னர் தான் வவுனிக்குளத்தில் கிறிஸ்தவ தேவாலயத்திலும், வன்னியின் புது விளாங்குளம் சிவன் கோயிலிலும் தஞ்சம் புகுந்திருந்த அப்பாவி அகதிகள் மீது ஸ்ரீலங்கா விமானப் படையின் கிபிர் விமானங்கள் நடத்திய கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சில் ஒன்பது அகதிகள் பலியானார்கள்; பலர் படுகாயமடைந்தனர். உயிரிழந்த மூவரின் சடலங்கள் அடையாளம் காணப்பட முடியாதளவுக்கு சிதறிப் போயின.

இவ்வாறு விமானக்குண்டு வீச்சில் அப்பாவிகள் கொல்லப்படுவதைக் குறிப்பிட்டு -

அமெரிக்க இயந்திரங்கள் பொருத்தப்பட்ட இத்தகைய 'கிபிர்' குண்டு வீச்சு விமானங்களை அமெரிக்க அனுசரணையுடனேயே இஸ்ரேலிடமிருந்து ஸ்ரீலங்காப்படைகள் கொள்வனவு செய்தன என்று சுட்டிக் காட்டி -

எனவே ஸ்ரீலங்காப் படைகளுக்கு ஆயுதங்களை விற்பதற்கு உதவ வேண்டாம் என அமெரிக்காவை புலிகள் இரண்டொரு தினங்களுக்கு முன்னர்தான் பகிரங்கமாகக்

## பாசுபதன்

கோரியிருந்தனர்.

அந்தக் கோரிக்கை வெளியான கையோடு, அமெரிக்கத் தயாரிப்பு விமான எதிர்ப்பு ஏவுகணையை புலிகள் பயன்படுத்தினர் என்ற செய்தியை அரசுத் தரப்பு வெளியிட்டிருக்கின்றது.

நிச்சயமாக புலிகளுக்கு அமெரிக்காவிமான எதிர்ப்பு ஏவுகணைகளை விற்றிருக்க மாட்டாது என்பது ஊகிக்கக்கூடிய விடயமாகும்.

இத்தகைய அறிவிப்பு மூலம்–

அமெரிக்கத் தயாரிப்பு ஏவுகணையை – அமெரிக்காவின் அனுமதியின்றி - வேறு கள்ள வழிகளில் புலிகள் கொள்வனவு செய்து எமது விமானங்களுக்கு எதிராகப் பயன்படுத்துகின்றார்கள் என்று வெளிப்படுத்த அரசுத் தரப்பு முயன்றிருக்கலாம்.

அதன் மூலம் -

அமெரிக்காவுக்கும் புலி

( 5 ஆம் பக்கம் பார்க்க)


'வெற்றி உறுதி' நடவடிக்கையில் முன்னோக்கிச் செல்லும் படையினரின் டாங்கி ஒன்று.

## 'ஸ்ரிங்கர்' ஏவுகணை

அமெரிக்க இராணுவமும் கடற்படையும் பயன்படுத்தும் கையடக்கமான - பிரதான - விமான எதிர்ப்பு ஏவுகணைகளே 'ஸ்ரிங்கர்' (Stinger).

சுமார் 1. 52 மீற்றர் நீளமும் 15. 8 கிலோ எடையும் கொண்ட இந்த ஏவுகணையை ஆர் ஒருவர் தோளில் வைத்து ஏவமுடியும்.

ஸ்ரிங்கர் விமான எதிர்ப்பு (FIM 92 A) ரக ஏவுகணைகள் விமானங்கள் வெளியிடும் செஞ்சுவாலையை கலைத்துச் செல்வதன் மூலம் விமானங்களைத் தாக்கக் கூடியவை.

விமானங்கள் வெளியிடுவது போன்ற போலி செஞ்சுவாலைகளைக் கக்கும் குண்டுகளை ஒரே நேரத்தில் வானில் தள்ளி வெடிக்க வைப்பதன் மூலம் இத்தகைய ஏவுகணைகளின் இலக்குகளை திசை திருப்பும் வசதியை 'கிபிர்' விமானங்கள் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

# 'ஈழம்-3' யுத்தத்தில் படையின் இழப்பு: புலிகள் தரப்பு வெளியிடும் விவரம்

1995 ஏப்ரல் 19 ஆம் திகதி மூன்றாம் கட்ட ஈழப் போர் ஆரம்பமாகி இரண்டே கால் ஆண்டு கழிந்த நிலையில், இந்த இரண்டே கால் ஆண்டில் அரசுத் தரப்புக்கு ஏற்பட்ட இழப்புக்களை புலிகள் பட்டியலிட்டுள்ளனர்.

அரச படைகளுடனான கடந்த காலப் போர்களை விட கடந்த ஒருவருடப் போரில் படைத்தரப்புக்கு பலத்த இழப்புக்களைத் தாங்கள் ஏற்படுத்தியுள்ளதாகப் புலிகள் கூறியுள்ளனர்.

புலிகள் இயக்கத்தின் உத்தியோகபூர்வ பத்திரிகையான ''விடுதலைப் புலிகள்'' இதழில் வெளியிடப்பட்டுள்ள அப்பட்டியலின் விவரங்கள் வருமாறு :-

மூன்றாம் கட்டப் போர் ஆரம்பித்து சரியாக ஒரு வருட காலத்தில் (1995 ஏப்ரல் - 1996 ஏப்ரல்)யாழ். குடாநாட்டை படைகள் ஆக்கிரமித்தன. குடா நாடு கைப்பற்றப்பட்ட பின்னர் தற்போது வரை 3 ஆயிரத்து 800 பேரை படையினர் பலி கொடுத்துள்ளனர்.

'ஓயாத அலைகள்' நடவடிக்கையில் 1400 படையினரும், 'சத்ஜய' வுடனான எதிர்ச் சமரில் சுமார் 650 படையினரும்,கிழக்கில் புளுக்குணாவ முகாம் தகர்ப்பில் 650 படையினரும் பரந்தன் - ஆனையிறவு மீதான பெரும் சமரில் முந்நூறு படையினரும், வவுணதீவு முகாம் தகர்ப்பில் 150 படையினரும், தற்போதைய 'வெற்றி உறுதி' படை நடவடிக்கைக்கு எதிரான சமரில் சுமார் ஆயிரம் படையினரும் பலியாகியுள்ளனர்.

இது தவிர, வடக்கிலும் கிழக்கிலும் நடந்த பல்வேறு பதுங்கித் தாக்குதல் மற்றும் கண்ணிவெடிச் சம்பவங்களில் 250க்கு மேற்பட்ட

(5 ஆம் பக்கம் பார்க்க)


1. புலிகளின் சிறப்புப் படையணி ஆண் உறுப்பினர்களும் பெண் உறுப்பினர்களும். 2. புலிகளின் தளபதிகளில் ஒருவரான கருணா வன்னித் தாக்குதல் ஒன்றுக்கான திட்டத்தை விளக்குகின்றார் 3. றொக்கட் லோஞ்சர்களுடன் ஊடறுப்புத் தாக்குதலுக்குச் செல்லும் புலிகளின் சிறப்புப் படையணி உறுப்பினர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாறி மாறி சேற்றைவாரிப் பூசுவது தெற்கு அரசியலில் இனி அரங்கேறும்!

அரசாங்கத்தைப் பொறுத்தவரை இவ்வாரம் யுத்த களத்தில் ஏற்பட்டபின்னடைவுகள் ஒருபுறம் இருக்க, மறுபுறத்தில் அரசியற் களத்தில் முக்கிய சில தளர்வுகளை அது சந்திக்க வேண்டி ஏற்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

அவற்றில் முதலாவது சிறிசேன கூரே கைது மற்றும் தடுப்புக் காவலுக்கு எதிராக உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு.

சிறிசேன கூரேயை ஏன், எதற்காக கைது செய்தார்கள்? அவரை விடுவிக்கும்படி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதால் அரசின் நோக்கத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதா? – என்ற கேள்விகளுக்கான விடைகள் ஒருபுறத்தில் இருக்க–

மறுபுறத்தில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் யாதேனும் ஒரு நபரைக் கைது செய்து தடுத்து வைத்திருப்பது தொடர்பாக அரசுக்கு (அல்லது அரசின் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு) இருப்பதாக அரசு இதுவரை காலமும் கருதி வந்த அதிகாரம், இத் தீர்ப்பின் மூலம் கேள்விக் குறியாகியிருப்பது அரசைப் பொறுத்தவரை அதற்கு நேரடியாக - பேரடியாக - பேரிடியாக - அமைந்துள்ளது எனலாம்.

பயங்கரவாதிகளுடன் தொடர்பு பட்டிருந்தார் என்றோ, பயங்கரவாதச் செயலில் ஈடுபட்டார் என்றோ அல்லது நாட்டின் இறைமைக்கு குந்தகம் விளைவிப்பவராக இருந்தார் என்றோ யார் மீதும் மொட்டையாகச் சந்தேகம் அல்லது குற்றம் ஒன்றைச் சுமத்தி, அந்தச் சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்து, தடுத்து வைத்திருக்கும்படி உத்தரவிடும் அதிகாரம் அவசர காலச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு உள்ளது என்றே அரசுத் தரப்பும், பாதுகாப்பு உயர் வட்டாரங்களும், பொலீஸாரும் இதுவரை கருதி வந்தனர்.

அதாவது தாம் கைது செய்யும் எந்த நபரையும்– விரிவான, ஆதாரம் கொண்ட தகவல் ஏதும் இல்லாமலும் கூட – தாம் விரும்பினால் ஒரு தடுப்புக்காவல் உத்தரவுப் பத்திரம் மூலம் தடுத்து வைத்திருக்க முடியும் என அரசுத்தரப்பு இதுவரை கருதி வந்தது.

இலங்கையின் வடக்கு – கிழக்கு உட்பட நாட்டின் எப்பாகத்திலும் கைது செய்யப்படும் தமிழர்களைத் தொடர்ந்து தடுத்து வைப்பதற்கான தடுப்புக் காவல் உத்தரவுகளில் வழக்கமாக இப்படி மொட்டைக் குற்றச்சாட்டுக்களை – அடிப்படை ஏதுமின்றி – எழுந்தமானமாகக் குறிப்பிடுவதே இதுவரை இடம்பெற்று வந்துள்ளது; இடம்பெற்று வருகிறது.

‘சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி’ என்ற மாதிரி–

சும்மா இருந்த சிறிசேன கூரேயை வெறும் மொட்டைக் குற்றச்சாட்டைக் குறிப்பிட்டு, கைது செய்து, தடுப்புக்காவலில் வைத்ததன் மூலம் – அவ்வாறு செய்வது சட்ட விரோதமானது என்ற திட்டவட்டமான முடிவை - கண்டிப்பான பணிப்புரையை - அரசுக்கு எதிரான உத்தரவை – எதிர்காலத்தில் ஏனைய நீதிமன்றங்களுக்கு வழிகாட்டுதலாக இருக்கக் கூடிய தீர்ப்பை- நாட்டின் அதியுயர் நியாயாதிக்கமுடைய நீதிமன்றமான உயர் நீதிமன்றம் வெளியிடுவதற்கு அரசே வழி சமைத்துக் கொடுத்து விட்டது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஒருவர் கைது செய்யப்படுவதற்கோ அல்லது அச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் ஒருவர் தடுத்து வைக்கப்படுவதற்கோ விசேடமான காரணங்களை பொலீஸாரோ அல்லது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரோ சுட்டிக் காட்ட தேவையில்லை என்று அரசுத்தரப்பில் கூறப்பட்ட வாதத்தை அடியோடு ஏற்க முடியாது எனக்கூறி நிராகரித்து விட்டது உயர் நீதிமன்றம்.

## உள்ளும் புறமும்

குறுமுனி

‘‘குறிப்பாக சுட்டிக் காட்டக்கூடிய குற்றம் எதனையும் செய்யாதவரை கைது செய்து தடுப்புக்காவலில் வைக்கலாம் என்பதை எம்மால் ஏற்க முடியாது. அது போலவே கைது செய்யப்படுபவருக்கு தாம் எந்தக் குறிப்பிட்ட குற்றத்துக்காகக் கைது செய்யப்படுகின்றோம் என்பதும் தெளிவாக — திட்டவட்டமாக - தெரியப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என நீதிமன்றம் கருதுகின்றது’’ — எனவும் நீதியரசர்கள் தமது தீர்ப்பில் தெரிவித்திருக்கின்றார்கள்.

இத்தீர்ப்பு சிறிசேன கூரேக்கு மட்டுமல்லாமல், தற்போது அவசரகாலச்சட்டத்தின் கீழ் வகை தொகையின்றி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பல நூற்றுக்கணக்கான தமிழர்களுக்கும், எதிர் காலத்தில் அவசர காலச் சட்டத்தின்



சிறிசேன கூரே

கீழ் கைது செய்யப்படக் கூடியோருக்கும் சட்ட ரீதியில் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

கைது செய்யப்பட்ட சமயம் கலங்கிய கண்களோடு வீட்டை விட்டுப் புறப்பட்ட கூரே, விடுதலையான சமயம் மிகுந்த மகிழ்வுடன் வீடு திரும்பினார்.

நீதிமன்றத் தீர்ப்பு, உடனடியாக ஒரு பெரும் அரசியல் சக்தியாக மீண்டும் அவர் உருவெடுப்பதற்கான நல்ல அத்திவாரத்தை அவருக்கு வழங்கியுள்ளது என்று கூறப்பட்டாலும் —

அரசியலில் அவர் உடனடியாக நாட்டம் கொள்ள மாட்டார் என்பதையே விடுதலையான அன்று [illegible] யில் அவர் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டி கோடிட்டுக் காட்டுகின்றது.

தமது பிரேமதாஸா மன்றம் மூலம் மக்களுக்கு சமூகப் பணி ஆற்றவே தாம் விரும்புவதாகவும்

அரசும், தமது முன்னைய கட்சியான ஐ. தே. கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவும் இது தொடர்பான தமது செயற்பாடுகளை, திட்டங்களை தவறாகப் புரிந்து கொண்டு விட்டனர் என்றும்—

சிறிசேன கூரே அப்பேட்டியில் கூறியிருக்கின்றார்.

### சந்திக்கு வந்த பாண்

சிறிசேன கூரே விவகாரத்தை அடுத்து அரசுக்கு தளர்வை ஏற்படுத்திய மற்றைய விடயம், அரசு பதவியேற்றதன் மூன்றாம் ஆண்டு பூர்த்தியை ஒட்டி பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. க. தென்னிலங்கை எங்கும் பரவலாக நடத்திய எதிர்ப்பு இயக்கம் தான்.

எதிர்பார்த்ததைவிட அதிக வரவேற்பு இந்த இயக்கத்துக்குக் கிடைத்தமை அரசை அதிர வைத்துள்ளது.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் பாணின் விலையை 3. 50 சதமாகக் குறைப்போம் என்று கூறிய இந்த அரசினரின் காலத்தில் பாணின் விலை எட்டு ரூபாவை எட்டியிருப்பதை ஆட்சேபித்து — அரசின் மூன்றாவது ஆண்டு பூர்த்தி தினத்தில் — தெற்கில் சந்திக்குச் சந்தி பாணை வைத்து, அதற்கு மேல் மூன்று மெழுகு திரிகளை நிறுத்தி, பற்ற வைத்து, ஊதி அணைத்ததன் மூலம் அரசின் மூன்றாம் ஆண்டுப் பிறந்த தினத்தை எதிர்க்கட்சிகள் குதூகலமாகக் (?) கொண்டாடின; கேக்குக்குப் பதிலாக பாணை வெட்டி மகிழ்ந்தார்கள்.

அரசுக்கு எதிரான தமது ஆட்சேபப் போக்கைத் தீவிரப் படுத்தாமல் ஒரு மெதுவான போக்கையே (soft Pedeling) எதிர்க்கட்சித் தலைவரும் ஐ. தே. கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இதுவரை கடைப்பிடித்து வந்தார்.

ஐ. தே. கட்சியின் கடந்த 17 வருட ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பல ஊழல் சம்பவங்கள் தொடர்பான ‘‘பிடி’’ தற்போதைய அரசின் கைகளில் சிக்கியுள்ளது என்றும் —

தற்போதைய அரசுக்கு எதிரான தீவிரப் போக்கை ஐ. தே. கட்சி மக்கள் மத்தியில் எடுத்துச் சென்றால், பழைய ஊழல் மற்றும் பாதாள உலகச் சம்பவங்களைக் கிளறி ஐ. தே. கட்சி ‘முதலைகளை’ சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்று அரசுத் தரப்பு சில சமிக்ஞைகளை ஐ. தே. க. தலைவர்களுக்குக் காட்டியிருந்ததாகவும் —

முன்னர் செய்திகள் அடிபட்டிருந்தன.

எனினும் ஐ. தே. கட்சி ஆட்சிக் காலத்தில் ஊழல் புரிந்த பெரும் ‘முதலைகள்’ [illegible] யமானதாக இல்லை என்றும் சில வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

ஆனாலும் ரணிலின் சொந்தத் தொகுதியான பியகமவில் உள்ள பட்டலந்தையில் 1989 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் பாதுகாப்புப் பிரிவின் உதவியுடன் இயங்கியதாகக் கூறப்படும்

(ஐந்தாம் பக்கம் பார்க்க)

## அதிரடி அரங்கு

**யாழ்.** கல்வித் திணைக்களத்தில் நடந்த ‘புதை பொருள் ஆராய்ச்சி’ பற்றிய தகவல் இது.

இந்தப் புதை பொருளைத் தேடிக் கண்டுபிடித்த நமது புதிய கல்விப் பணிப்பாளரது கெட்டித்தனம் பாராட்டுக்குரியது.

1996 ஏப்ரலுக்கு முன்னர் குடாநாட்டில் பல பகுதிகளை விட்டு மக்கள் அடிக்கடி இடம் பெயர்ந்ததும், அப்பகுதிகளைச் சேர்ந்த பாடசாலைகள் கூட எந்தப் பொருளையும் அங்கிருந்து எடுக்காமல் விட்டு விட்டு ஓடிப்போய், புதிய இடத்தில் கொட்டில்கள் அமைத்து இயங்கியதும் எமக்குத் தெரிந்தவையே.

1995 ஒக்ரோபரில் வலிகாமம் பாடசாலைகள் அனைத்துமே இவ்வாறு இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சியில் இயங்கியதும் எமக்குத் தெரிந்தது தான்.

இத்தகைய இடம் பெயர்வுக் காலகட்டத்தில் பதவியிலிருந்த பாடசாலை அதிபர்கள் பின்னர் ஓய்வு பெறும்போது, முன்னர் பாடசாலை இருந்த இடத்தில் உள்ள பாடசாலைச் சொத்துக்களை தனக்குப்பின் வந்த அதிபரிடம் பட்டியலிட்டு ஒப்படைக்காத காரணத்தால் முன்னவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்காத நிலை ஏற்பட்டது.

இதனால் இன்னும் பல அதிபர்கள் முழு ஓய்வூதியம் பெற முடியாத நிலையில் அந்தரிக்கின்றனர். இத்தகைய சிலஅதிபர்கள் ஓய்வூதியம்பெறாமல் இறந்தும் போய்விட்டனர்.

ஆனால் இத்தகைய நெருக்கடி நிலைகளைப் புரிந்து கொண்டு கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளர் 1993 ஜனவரி 26 ஆம் திகதி யாழ். கல்விப் பணிப்பாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருக்கின்றார்.

அக்கடிதத்தில் ‘‘உங்கள் பிரதேசத்தில் தற்போது நிலவும் சூழ்நிலை, சொத்துப் பட்டியலை மதிப்பீடு செய்வதற்கு உகந்ததாக இல்லாததால், நீங்கள் ஓய்வூதியத்தை வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்கலாம்’’ என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது.

ஆனால் கல்வித் திணைக்களத்தில் அப்போதிருந்த ‘பெருச்சாளி’ ஒன்று இந்தக் கடிதத்தை ‘புதைத்து’ வைத்து பல அதிபர்கள் மற்றும் அதிகாரிகளின் வயிற்றில் அடிக்க வழிசெய்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

கல்வித் திணைக்கள வேலைகளுக்கு இடையில் புதைந்து கிடந்த இந்தக் கடிதத்தைக் கண்டு பிடித்த பணிப்பாளரைப் பாராட்டும் அதேவேளை, இதே போன்ற பல கடிதங்களை அவர் தேடிப்பிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்பதையும் ஒரு தடவை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

‘‘வீணாக பழைய மாணவர் சங்க விவகாரங்களில் தலையிட்டு, செவ்வனே இயங்கிக் கொண்டிருக்கும் அச்சங்கங்களைக் குழப்ப வேண்டாம்’’ - என்று ஆலோசனை தெரிவித்து வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எழுதிய கடிதமும் அவற்றில் ஒன்றாகும்.

★ ★ ★ ★

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை, மாணவர்களின் உயர்கல்வியை மட்டுமன்றி வாழ்க்கையையும் நிர்ணயிக்கும் ஒன்று. அந்தப் பரீட்சை இப்போது குடாநாட்டில் 72 பரீட்சை நிலையங்களில் நடைபெற்று வருகிறது.

குடாநாட்டு மாணவர்களுக்குள்ள கல்வி வசதிகள் கடந்த பல வருடங்களாகத் தேய்ந்து போனமை பழைய சங்கதி. அவ்வாறிருந்தும் குப்பி விளக்கில் படித்தேனும் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற ஆவலுடன், ஆர்வத்துடன் பல மாணவர்கள் இம்முறையும் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தின் பெயர் பெற்ற பிரபல கல்லூரி ஒன்றில் நூற்றுக் கணக்கான பாடசாலை, தனியார் பரீட்சார்த்திகள் தோற்றும் பரீட்சை நிலையங்கள் இயங்குகின்றன.

அங்கே பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்க, அருகில் உள்ள விளையாட்டு மைதானத்தில் ஒலி பெருக்கி பொருத்தி பாலர் விளையாட்டுப் போட்டி இரண்டு நாள்கள் தொடர்ந்து தடல்புடலாக, அமர்க்களமாக நடைபெற்றது. போட்டி நிகழ்வுகளின் விமர்சனம், இரைச்சல்களுடன் பெருங்குரலில் வந்து பரீட்சை எழுதிய தமது சிந்தனையைக் கலைத்து பெரிதும் பாதிப்பை உண்டாக்கியதாக பரீட்சார்த்திகள் குறைப்படுகிறார்கள்; கோபமுற்றுள்ளார்கள்.

பாலர்களின் விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டதற்கு நாம் எதிர்ப்பல்ல; பரீட்சை நடைபெறுவது தெரிந்தும் விளையாட்டு மைதானத்தில் நிகழ்ச்சிகள் நடத்த அனுமதி வழங்கியவர்கள் பரீட்சையின் முக்கியத்துவத்தை மறந்து போனதையே கண்டிக்கிறோம் - என்றனர் மாணவர்கள்.

இந்த முக்கிய பரீட்சைக்கு மாணவர்கள் மூன்று தடவைகள் மட்டுமே தோற்ற முடியும் என்பது தெரிந்தும் பொறுப்புள்ள அதிகாரிகள் இப்படி அசதியாக நடந்துகொண்டது ஏனோ?

— மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறி மாறி சேற்றை வாரிப்....

(நான்காம் பக்கத் தொடர்)
பாதாள உலகக் கும்பலின் வதை முகாம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளில் ரணிலின் பெயர் பலமாக அடிபட்டு வந்தது.

என்றாலும் ஆணைக்குழு முன் ரணிலை நிறுத்தி, அவருக்கு எதிராக — பகிரங்கமாக—சேற்றை வாரி இறைக்கும் திட்டம் ஏதும் இருந்தற்கான அறிகுறிகள் எதுவும் இதுவரை தெரிந்திருக்கவில்லை.

ஆனால் ரணில் அரசுக்கு எதிரான தமது கட்சியின் எதிர்ப்பியக்கத்தை தீவிரமாக்கி, நாடு முழுவதிலும் ஒரே சமயத்தில் 150 கூட்டங்களை நடத்தப் போவதாக அறிவித்த கையோடு—

பட்டலந்தை ஆணைக்குழு முன் ஆஜராகும்படி அவருக்கும் மற்றும் சில முன்னணி ஐ. தே. க. தலைவர்களுக்கும் எதிராக, 'நோட்டீஸ்' அனுப்பப்பட்டிருக்கிறது.

செப்ரெம்பர் 3, 4, 5 ஆம் திகதிகளில் ஆஜராகும்படி ரணில் பணிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஐ. தே. க. அமைச்சர்கள் ஜோன் அமரதுங்க, ஜோன் மைக்கல் பெரேரா ஆகியோரை செப்ரெம்பர் 26, 27 ஆம் திகதிகளில் ஆஜராகும்படி கேட்கப்பட்டிருக்கின்றது.

எனவே பொது மேடைகளிலும் ஆணைக்குழு விசாரணைகளிலும் அரசு - எதிர்க்கட்சித் தலைவர்களிடையே சேற்றைவாரி இறைக்கும் போர் சூடு பிடிக்கப்போகின்றது! பத்திரிகைகளுக்குத் தான் கொண்டாட்டம் போங்கள்!

நாடாளுமன்றத்தில்

அரசுக்கு இவ்வாரம் அவப்பெயரை வாங்கித் தந்த மற்றைய நிகழ்ச்சிகளில் ஒன்று இவ்வாரம் நாடாளுமன்றத்தில் இடம் பெற்றது.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் சாதாரணமாக சபை அலுவல்கள் நடைபெறுவதற்கு இருபது உறுப்பினர்களாவது இருக்க வேண்டும். அப்படி இல்லாத சமயத்தில் சபையில் 'கோரம்' இல்லை என்பதை அறிவிக்கும் மணியை ஒலிக்குமாறு சபை ஊழியர்களுக்கு சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் உறுப்பினர் உத்தரவிடுவார். இந்த மணி சுமார் ஐந்துநிமிட நேரம் ஒலிக்கும். அதற்கிடையில் நாடாளுமன்றக் கட்டட வளாகத்தில் உள்ள தங்கள் தங்கள் அலுவலக அறைகளிலோ, தங்கள் கட்சியின் அலுவலக அறையிலோ தங்கியிருந்து வேறு அலுவல்களில் மூழ்கியிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குள் விரைந்து வந்து விடுவார்கள். உரிய எண்ணிக்கை உறுப்பினர்கள் சபைக்குள் வந்து 'கோரம்' காணும் என்ற நிலைமை ஏற்பட்டதும் சபை அலுவல்கள் தொடரும்.

'கோரம்' மணி ஐந்து நிமிடமாக ஒலித்தும் சபைக்கு உரியளவு எண்ணிக்கை உறுப்பினர்கள் வந்து சேராவிடில் சபையை ஒத்திவைப்பதைத் தவிர சபாநாயகருக்கு வேறு வழியே இல்லை.

கடந்த பத்தாண்டு காலத்தில் கோரம் இல்லாமல் போன நிலைமை ஏற்பட்டிருக்கின்றது; ஆனால் கோரம் மணி அடித்ததும் உறுப்பினர்கள் விரைந்து வந்து தொடர்ந்து சபை செயற்படுவதற்கு வழி செய்து விடுவார்கள். சபை ஒத்திவைக்கப்படுவதில்லை.

ஆனால் கடந்த புதன் கிழமை காலை சபாநாயகர் கே. பி. இரத்தினாயக்கா தலைமையில் சபை கூடியதும்-

மக்களின்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு தவறிவிட்டதாகத் தெரிவித்து- அரசின் மூன்றாவது ஆண்டு பூர்த்தியை ஒட்டி- சபையிலிருந்து ஐ. தே. கட்சி உறுப்பினர்கள் கூண்டோடு வெளிநடப்புச் செய்தனர்.

அப்போது அரசுத் தரப்பின் 106 எம்.பிக்களில் ஏழு அமைச்சர்கள் மற்றும் சபாநாயகர் உட்பட 18 பேர் மட்டுமே சபையில் பிரசன்னமாயிருந்தனர் இதனால் 'கோரம்' மணி அடிக்கப்பட்டது. சுமார் ஐந்து நிமிட நேரம் மணி தொடர்ந்தது. ஆனால் பலனில்லை.

அப்போது ஐ. தே. கட்சி எம். பியான அஸ்வர் சபைக்குள் நுழைந்து ''கோரமில்லாமல் மணி அடித்து ஐந்து நிமிடம் கடந்து விட்டது. ஏன் காத்திருக்கின்றீர்கள்? சபையை ஒத்திவைப்பதுதானே ஒரே வழி!'' என்று சபாநாயகருக்கு நினைப்பூட்டினார்.

வேறு வழியின்றி, கடந்த பத்து ஆண்டு காலத்தில் முதல் தடவையாக கோரமின்றி சபை ஒத்திவைக்கப்பட்டது.

இது குறித்து கருத்து வெளியிட்ட ரணில் -

''அரசு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை காற்றில் பறக்க விட்டுவிட்டது. அதை ஆட்சேபித்தே நாம் வெளிநடப்புச் செய்தோம்.

''சபையில் தனது இருபது எம்.பிக்களையாவது சமுகமளிக்க வைத்திருக்க முடியாத இந்த அரசா நாட்டை செவ்வனே ஆட்சி செய்யப் போகின்றது?

''கடந்த மூன்று ஆண்டுகளில் அரசுத் தரப்பு நடாளுமன்ற உறுப்பினர்களை விட நாடாளுமன்ற ஊழியர்கள் சிறப்பாகச் செயற்பட்டுள்ளார்கள். எனவே சபையை ஒத்திவைக்கச் செய்ததன் மூலம் அவர்களுக்கு நாம் ஒருநாள் லீவு வாங்கிக் கொடுத்திருக்கின்றோம்''— என்றார்.

★

## வன்னி யுத்தம்...

(மூன்றாம் பக்கத் தொடர்)
களுக்கும் இடையில் கசப்புணர்வை மேலும் தீவிரமடையச் செய்யவும் -

புலிகளின் கோரிக்கையையும் மீறி, விமான எதிர்ப்பு ஏவுகணைகளை முறியடிக்கக் கூடிய தொழில் நுட்பத்திறன் கொண்ட விமானங்களை அமெரிக்காவின் அனுசரணையுடன் பெறவும் -

ஸ்ரீலங்காத் தரப்பு முயன்றிருக்கக் கூடும் என சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எது, எப்படி என்றாலும்-

யாழ். குடா நாட்டைக் கைப்பற்றுவதற்கான 'ரிவிரச' இராணுவ நடவடிக்கையின் மூன்று கட்டங்களின் போதும்-

கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கான இரண்டு கட்ட நடவடிக்கைகளின் பாதும் -

தற்போது வன்னியில் மேற்கொள்ளப்படும் 'உண்மை வெற்றி' நடவடிக்கையின் முதல் இரண்டு கட்டங்களின் போதும் -

தாம் பயன்படுத்தாத விமான எதிர்ப்பு ஏவுகணைகளை 'உண்மை வெற்றி' நடவடிக்கைகளின் மூன்றாம் கட்டத்தின் போது புலிகள் பயன்படுத்தினார்களா என்பது அடுத்த சில தினங்களில் ஓரளவிற்கு ஊர்ஜிதப்படுத்தக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

★

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 23

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதி, ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் கான கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா தினமும் மாலை 5. 15 மணிக்கு நிகழ்த்திவரும் கந்த புராணம் தொடர் இசைச் சொற்பொழிவில் இன்று 'தாரகன் வதம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். (உ-5)

## ஈழம்-3...

(மூன்றாம் பக்கத் தொடர்)
படையினர் வரை பலியாகியுள்ளனர்.

புலிகள் இயக்கத்துக்கும் ஸ்ரீலங்காப் படையினருக்கும் இடையேயான எந்தவொரு ஒரு வருடப் போரை எடுத்தாலும் அவை எல்லாவற்றையும் விட 1996 - 1997 ஆம் ஆண்டுப் போரிலேயே படையினர் சந்தித்த ஆள் இழப்பு அதிகமாகும். ஆள் இழப்பு மட்டு மல்ல. 'ரிவிரச' வின் பின்னர் நடந்த ஒரு வருடப் போரில் அரசுப் படைகள் சந்தித்த படைக்கல இழப்பு பாரியதாகும்.

படைக்கல இழப்பு

விமானங்கள், ஹெலிகள் உட்பட 14 வான் கலங்களை விமானப்படை இக்காலத்தில் இழந்துள்ளது.

இந்த இழப்புக்கு பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் இந்தப் போராண்டிலேயே அவை அழிந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கடற்படை நான்கு கடற்கலங்களை இழந்துள்ளது.

அத்துடன் 16 டாங்கிகளையும் ('சத்ஜய' நடவடிக்கையில்-4, பரந்தனில்- 2, தற்போதைய உண்மை வெற்றி நடவடிக்கையில்- 10) மற்றும் 16 ஆட்லறிகளையும் (ஆனையிறவில் -9, நொச்சிமோட்டையில்- 3, முல்லைத்தீவில் - 2, புளுக்குணாவையில் - 1, ஓமந்தையில் - 1) இந்தப் பேராண்டில் படையினர் இழந்தனர். இதில் முல்லைத்தீவிலும், புளுக்குணாவிலும், ஓமந்தையிலும் ஆட்லறிகளை புலிகள் கைப்பற்றினர்.

ஸ்ரீலங்காப் படையினர் படைக்கல சக்தியை இழந்துள்ளபோது, புலிகள் மூன்று 120 எம். எம், ஆட்லறிகளையும், ஒரு 81 எம். எம். ஆட்லறியையும் கைப்பற்றியுள்ளதுடன், 120 எம். எம். மோட்டார்களையும், அதற்கான ஷெல்களையும் கைப்பற்றியுள்ளனர். தமது படைக்கலச் சக்தியைப் பெருக்கியுள்ளனர்.

இதேவேளை ஆள்பல உயர்விலோ, ஆயுதத் தளபாட உயர்விலோ படைத் தரப்பினர் பெரிதாக எதையும் பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் புலிகள் இயக்கம் ஆள்பல அதிகரிப்பில் மேன்மை கண்டுள்ளது. படையினரிடமிருந்து ஆயுத வளங்களைக் கைப்பற்றுவதிலும் சாதனை படைத்துள்ளது.

போர்த்திறனிலும் புலிகள் அபார வளர்ச்சி பெற்றுள்ளனர். தலைவர் பிரபாகரனின் நுட்பமான திட்டமிடலும், தாக்குதல் தந்திரோபாய ஆலோசனைகளும், பயிற்சிக்கான அறிவுரைகளும் தான் இந்தப் போர்த்திறன் வளர்ச்சிக்குப் பிரதான காரணிகளாகும்.

அத்துடன் குடாநாட்டைப் படையினர் கைப்பற்றிய பின்னர் புலிகள் இயக்கத்தின் மரபு வழிப்போர்ப் பலம் அதிகரித்துள்ளது. ஆட்லறி உபயோகமும் 120 மி. மீற்றர் மோட்டார்களின் பயன்பாட்டையும் புலிகள் இயக்கம் அதிகரித்தமை முக்கியமானதாகும்.

-இவ்வாறு 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை மேலும் தெரிவித்தது.

★


## யாழ். மாவட்டத் தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச்சங்கம்

(மட்டுப்படுத்தப்பட்டது)

## பொதுக் கூட்ட அறிவித்தல்

இச்சங்கப் பணிமனையில் 27-08-97 ஆம் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெற இருப்பதால் இச்சங்கத்தின் பங்குதாரர்கள் தவறாது சமுகம் அளிக்கவும்.

அன்றைய தினம் சங்கத்தின் பதிவும் துணைவிதிகள் பற்றியும்

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ். சண்முகநாதன் அவர்கள் உரையாற்றுவார்கள்.

நன்றி

சி. வேதாரணியம், தலைவர்.

எஸ். எஸ். மரியநாயகம், செயலாளர்.

209, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

(49171)



## கண்ணீர் அஞ்சலி

### துரையப்பா வசந்தகுமார்

எமது சக முதன்மை ஆசிரியர்

### திருமதி மேரிதிரேஸ் வசந்தகுமார்

அவர்களின் கணவர் து. வசந்தகுமார் அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**முதன்மை ஆசிரியர்கள்.**
**யாழ். கல்வி வலயம் - 1**

[49180]



**BOSCO INSTITUTE**

25, றக்கா வீதி.

**SPOKEN ENGLISH With GRAMMAR By BRITTO**

ஆரம்பம்: **01 - 09 - 97**
4—5 p.m.

**A / L 99**

குறியீட்டு அளவையியல்
By
திரு. பத்மராஜ்

ஆரம்பம்: **25 - 08 - 97**
MON. WED. 4-5

(49174)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை முன்னாள் ஆசிரியரும், தற்போது ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றுபவருமாகிய திருமதி மேரி திரேஸ் வசந்தகுமார் அவர்களின் அன்புக் கணவர்

### அமரர் துரையப்பா வசந்தகுமார்

அவர்களின் மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**யாழ் புங்குடுதீவு மகாவித்தியாலயம்**

(49184)



## மரண அறிவித்தல்

### ஜெயராசா ஜெயவீரசிங்கம்

(ஜெயா)

அச்சுநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜெயராசா ஜெயவீரசிங்கம் (ஜெயா) நேற்று (22-08-97) காலமானார்.

இவர் ஜெயராசா - பொன்மணி தம்பதிகளின் அன்பு மகனும், விலிசியா றீனி அவர்களின் அன்புக் கணவரும், அஸ்வின் லியோ, மேரிக்குயின், மேரிறணா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி யோகராசா மலர், காராளசிங்கம், திருமதி அன்ரன் யோசவ் சுபோதினி, கிறேசியன், காலஞ்சென்ற செலஸ்ரீன் சுரேந்திரா திரவியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. திருமதி பீற்றர் இராசரத்தினம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-08-97) சனிக்கிழமை நடைபெற்று காலை 10-30 மணிக்கு (புதிய நேரம்) புனித சூசையப்பர் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
றீனி (மனைவி)

சங்கானை வீதி,
அச்சுவேலி.

(49188)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

புகைப்படப் பிரியர்களுக்கு...
ஒரு நற்செய்தி!

உங்களது புகைப்படங்களைப் பெறுவதிலுள்ள தாமதத்தைத் தவிர்த்துக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்:

**சுனில் ஆர்ட்ஸ்**
172, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/1343)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி தையல்நாயகி சிதம்பரநாதர்

கைதடி கிழக்கைச் சேர்ந்த திருமதி தையல்நாயகி சிதம்பரநாதர் 20 - 08 - 97 இல் தனது இல்லத்தில் சிவபதம் அடைந்தார்.

இவர் இ. சிதம்பரநாதர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், செல்வஸ்கந்தநாதன், அமிர்தகணநாதன் (Pope & Co - கணக்காளர், கொழும்பு), திருமதி லீலா சண்முகலிங்கம் ஆகியோரின் தாயாரும், க. சண்முகலிங்கம் (கூட்டுறவு ஆணையாளர், வடக்கு - கிழக்கு), இராசலட்சுமி, சுபத்திராதேவி, உதயனன் (கணக்காளர், லண்டன்), உதயகுமார் (டாக்டர், லண்டன்), நந்தகுமார், நந்தினி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், கணேசலிங்கம் ஆகியோரின் சகோதரியும், திருமதி கமலாச்சி சுந்தரலிங்கத்தின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கைதடியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று அவரது பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊத்தல் மயானத்திற்கு 24 - 08 - 97 ஞாயிறு காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
இ. சிதம்பரநாதர்
(கணவன்)

உடையார் வளவு,
கைதடி கிழக்கு,
கைதடி.

(49181)

## திருமதி இளையகுட்டி இளையபிள்ளை

கீரிமலையைச் சேர்ந்த திருமதி இளையகுட்டி இளையபிள்ளை 14-8-97 இல் புதுக்குடியிருப்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இளையகுட்டியின் அன்பு மனைவியும், நரசிங்கம், வயிரமுத்து (இராசா), மனோரஞ்சிதன், வேவி, செல்வமணி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார். இவரது ஈமக் கிரியைகள் 14-8-97 இல் புதுக்குடியிருப்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
இ. நரசிங்கம்
(மகன்) - கீரிமலை

தற்போதைய முகவரி;
சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

(49176)

## இராமலிங்கம் பரமநாதன்

இராமலிங்கம் பரமநாதன் அவர்கள் 20. 8. 97 இல் கொழும்பில் காலமானார். இவர் யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த கைலாயநாயகியின் அன்புக் கணவரும், கமலினி, நளினி, மாலினியின் அன்புத்தந்தையும். மோகன், பராபரன், காலஞ்சென்ற நவரத்தினராசாவின் அன்பு மாமனாரும், மங்கையர்க்கரசி செல்வத்துரை, காலஞ்சென்ற பூலோகநாயகி, குஞ்சிதபாதம், செல்வரட்ணம், ரட்ணதுரை, சின்னத்தம்பி, காலஞ்சென்ற செல்வத்துரை ஆகியோரின் மைத்துனரும், திருமதி சின்னத்தம்பி, சிவமலர், சறோஜினியின் சகோதரரும், நவநீதனின் அருமைப் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 24. 08. 97 ஞாயிற்றுக்கிழமை 28, Mews Street, Colombo - 2 இல் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஜெ. கலாரஜனி

66/2, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(49167)

## இளையதம்பி ஆசீர்வாதம்

திருகோணமலை நீதிமன்ற வீதியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி ஆசீர்வாதம் (முன்னாள் கணக்காளர், ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபை) 22-8-97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இளையதம்பி - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற திரு. திருமதி ஜோண்பிலிப் தம்பதிகளின் மருமகனும், மாகிறேட் (இளைப்பாறிய ஆசிரியை, புனித மரியாள் வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், மங்கலிக்கா, சந்திரிக்கா, றமேஷ் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், லோறன்ஸ் ஜீவாவின் மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23-8-97) சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நல்லடக்கத்திற்காக அர்ச். கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
திருமதி மாகிறேட் ஆசீர்வாதம்
(மனைவி)

854, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(49187)

## இன்று

யாழ்ப்பாணம், ஒக. 23

கைதடி கிழக்கு சனசமூக நிலையமும், இந்து வாலிபர் சங்கமும், பாலர் பாடசாலையும் இணைந்து நடத்தும் மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு கைதடி கிழக்கு வீரமாகாளி அம்மன் கோயில் முன்றலில் நடைபெறவுள்ளது. (ஐ-30)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 23

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவிருந்த அருட்தந்தை பேர்க்மன்ஸின் ''ஆரோக்கிய மழை (சமாதானத் தொனி) ஐக்கிய ஆராதனை நிகழ்ச்சி ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

னம் இனங்கண்டுள்ளது.

300 பயணிகள் செல்லக்கூடிய இக்கப்பலுக்குக் கட்டணமாக நாள் ஒன்றுக்கு ஏழாயிரத்து 500 அமெரிக்க டொலர் செலுத்துமாறு அந்தக் கப்பலின் நிறுவனம் கேட்டிருப்பதாகவும்--

அத்துடன் இக்கப்பலை கிரேக்க நாட்டில் இருந்து இலங்கைக்குக் கொண்டுவர மேலதிகமாக 3 ஆயிரம் அமெரிக்க டொலர் கோரப்பட்டிருப்பதாகவும் -- தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## யாழ்ப்...

(முதலாம் பக்கத் தொடர்)

ரம் வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் 3 ஆயிரம் வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது உள்ள ஜெனரேட்டர்கள் மூலமாக முழுமையாக குடாநாட்டு மக்களுக்கு மின்சாரம் வழங்க முடியாத நிலையுள்ளதால் மாற்று ஏற்பாடாக டீஸல் அனல்மின் நிலையம் ஒன்றை அமைக்க திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நிறுவனத்தால் கொழும்பில் தற்சமயம் அமைக்கப்பட்டுள்ள அனல் மின் நிலையத்தை காங்கேசன்துறையில் அமைக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் குத்தகைக் காலம் அடுத்த மாதம் முடிவடைகிறது.

அதன் பின்னர் காங்கேசன்துறையில் இந்த நிலையத்தை அமைத்து, அதில் உற்பத்தியாகும் மின்சாரத்தை மின்சார சபை கொள்வனவு செய்து சுன்னாகம் மின் நிலையம் ஊடாக பொதுமக்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக காங்கேசன்துறையில் இருந்து சுன்னாகம் வரையான பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த உயர்வலுவுடைய இணைப்புக்களைத் திருத்தியமைக்க படை அதிகாரிகளுடன் தற்சமயம் பேச்சு நடத்தி வருகிறோம். பேச்சுக்களின் பின்னர் வேலைகள் ஆரம்பிக்கப்படும். இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (உ-3)

## ஐந்து நாக...

(முதலாம் பக்கத் தொடர்)

தரும் அதேவேளையில் வேறு மூன்று பாம்புகள் இவைகளுக்கு பாதுகாப்பாக மூன்று கிளைகளில் இருப்பதையும் காணமுடிகிறது.

நூறு வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த இக் கோயிலின் சிவன், அம்பாள் விக்கிரகங்கள் இந்த இத்தி மரத்தின் கீழே ஆரம்பகாலத்தில் தோன்றியதாகவும் இவ்விரு விக்கிரகங்களையும் யாழ். பல்கலைக் கழக வரலாற்றுப் பகுதியினர் ஆய்வு செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-117)

# வடக்கில் வியாழனன்று இடம்பெற்ற மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக. 23

குடாநாட்டில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

★ பிற்பகல் 1.50 மணியளவில் சுன்னாகத்தில் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

பின்னர் அப்பகுதியில் தேடுதல் மேற்கொண்ட படையினர் ரி.56 ரக துப்பாக்கி-1, அதற்குரிய ரவைகள் - 23, மகஸின் - 1, கைக்குண்டு - 1 ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

★ பிற்பகல் 5.30 மணியளவில் அளவெட்டிப் பகுதியில் வீதி ரோந்தை முடித்துக் கொண்டு திரும்பிக் கொண்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் கைக்குண்டை வீசினார். அக் கைக்குண்டு வெடித்ததால் ஒரு படைச் சிப்பாய் காயமடைந்தார்.

★ பிற்பகல் 1.15 மணியளவில் யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் சுற்றி வளைத்துத் தேடுதலை மேற்கொண்ட படையினர் கைவிடப்பட்ட வீடொன்றில் இருந்து 40 மி. மீ. கிறனைட் லோஞ்சருக்கான 6 குண்டுகளைக் கைப்பற்றினர்.

## ஆஸ்பத்திரி பொறுப்பேற்பு

அநுராதபுரத்தில் உள்ள பிரபல தனியார் வைத்தியசாலை ஒன்றை நேற்று இராணுவத்தினர் பொறுப்பேற்றுள்ளனர்.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் காயமடையும் படையினருக்கு சிகிச்சை அளிக்க வசதியாகவே இந்த நடவடிக்கை எனத் தெரிவிக்கப்பட்டது.

## சமய சந்நிதிகளில்

நல்லை ஆதீனத்தில் ''குமார சம்பவம்'' என்னும் தலைப்பில் நடைபெற்று வரும் தொடர் சமயச் சொற்பொழிவில் இன்று பிற்பகல் 3 மணிக்கு ''சிவன் பார்வதி திருமண இரகசியம்'' என்னும் பொருளில் பண்டிதர் மு. கந்தையா சொற்பொழிவாற்றுவார். (ஐ-30)

★ ★ ★

காரைநகர் களபூமி திக்கரை முருகன் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை கார்த்திகை உற்சவம் இடம்பெறவுள்ளது. (ஐ-30)

## தொலைத்தொடர்பு சேவை பாதிப்பு

யாழ்ப்பாணம் ஒக. 23

யாழ். நகர தொலைத் தொடர்புப்பிரிவில் இன்று காலை மேற்கொள்ளப்படவுள்ள திருத்த வேலைகாரணமாக இன்று காலை யாழ்ப்பாணத்திற்கான சர்வதேச தொலைத் தொடர்பு நிலையத்தின் சேவைகள் பாதிக்கப்படும் என்றும்-

நண்பகலுக்குப் பின்னர் சேவை வழமைக்குத்திரும்பும் என்றும்- அந்நிலைய அதிகாரி தெரிவித்தார். (உ-3)

## கொரிய...

(முதலாம் பக்கத் தொடர்)

தால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று அது குறித்து புலிகளுடன் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தி வந்தோம். மனிதாபிமானமான அடிப்படையில் அக்கப்பலை விடுவிக்க அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

''அதைத் தொடர்ந்து எமது அமைப்புப் பிரதிநிதிகள் முல்லைத்தீவுக்கு சென்று கப்பலைப் பார்வையிடவிருக்கின்றனர்.

''அதன்பின்பு அக்கப்பல் எமது கொடியுடன் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு கப்பல் நிறுவனத்திடம்ஒப்படைக்கப்படும்.

''இந்தச் செயற்பாடு விரைவில் மேற்கொள்ளப்படும் -'' என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ-3)

## புலமைப்...

(முதலாம் பக்கத் தொடர்)

மானிப்பாய் மெமோறியல் - 173

சென் ஜோன் பொஸ்கோ பாடசாலையைச் சேர்ந்த எஸ். ஜனகன் 172 புள்ளிகளையும்--

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த பி. ஹரிகரன் 171 புள்ளிகளையும்--

பெற்று அந்தந்தப் பாடசாலைகளில் முதல் இடங்களைப் பெற்றுள்ளனர்.

முக்கிய பாடசாலைகளில் இப்பரீட்சைகளில் தேறிய மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு:-

முதலில் வன்னியில் இருந்து பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவரின் எண்ணிக்கையும், அடுத்து குடாநாட்டில் இருந்து பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவரின் எண்ணிக்கையும் குறிப்பிடப்பட்டுள்ளன.

★ சென். ஜோன் பொஸ்கோ-- 30+17=101

★ யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை--27+25=52

★ உடுவில் மகளிர்கல்லூரி --19+31=50

★ சாவகச்சேரி இந்து --00+26=26

★ யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை— 11+28=39

★ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை— 11+26=37

★ சுண்டுக்குளி மகளிர்— 8+18=26

★ சென் ஜோன்ஸ் 8+15=23

★ யாழ்ப்பாணக் கல்லூரி — 15 (குடாநாட்டில் மட்டும்)

★ வடமராட்சி இந்து 13

★ நெல்லியடி மெ.மி.த. கலவன் பாடசாலை 13

யாழ்.கல்விப் பணிப்பாளர்கள் இருவரும் அண்மையில் கொழும்பு சென்றிருந்த சமயம் இப்பரீட்சை முடிவுகளை வெளியிடுமாறு பரீட்சைத் திணைக்களத்தை வலியுறுத்திக் கேட்டிருந்தனர்.

## புளியங்குளத்...

(முதலாம் பக்கத் தொடர்)

படையினரும் கடுமையாக மோதிவருவதாகவும் -

கடந்த செவ்வாயன்று ஆரம்பிக்கப்பட்ட மூன்றாம் கட்ட படை நடவடிக்கையின் பின், படையினரின் ஐந்து டாங்கிகளை புலிகள் அழித்துவிட்டனர் என்றும் சில செய்திகள் தெரிவித்தன.

கடும் சண்டை காரணமாக இரு தரப்பிலும் பேரிழப்பு ஏற்பட்டுள்ளது. இழப்புக்கள் குறித்து ஒன்றுக்கொன்று முரணான எண்ணிக்கைகளை இரு தரப்பும் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றன.

சண்டையின் உக்கிரத்தைப் பார்க்கும் போது வடக்கிற்கு தரைவழிப் பாதையைத் திறப்பதற்கான நடவடிக்கை அடுத்த வருடமும் தொடரும் போல் தெரிகின்றது என இராணுவ விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டார். (உ-3-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23-08-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
சஞ்சிகை
23 - 08 - 1997 சனிக்கிழமை

ராகம்ஸ் பட்டுச் சோலை
திருமணம் மற்றும் எல்லா வைபவங்களுக்குமான முகூர்த்தப்பட்டுப் புடைவைகளுக்கு நாடவேண்டிய இடம்.
ராகம்ஸ் பட்டுச்சோலை,
24, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(49111)

## கருத்துக் கலசம்

### ஆடைக் கலாசாரம்

யாழ்ப்பாணத்தில் பெண்கள் இப்போது அணியும் ஆடைகள் குறித்துப் பல வட்டாரங்களில் பெரும் அதிருப்தி நிலவுவதை அவதானிக்க முடிகிறது. சிலர் கவலை தெரிவித்துப் பத்திரிகைக்கு கடிதங்களும் எழுதியுள்ளார்கள்.

தீவுப் பகுதியைச் சேர்ந்த அன்பர் ஒருவர் — அவர் ஒரு சமாதான நீதிவான் — எழுதிய கடிதம் அவற்றுக்கு ஒரு மாதிரி. சேர். பொன். இராமநாதன் துரை நிறுவிய மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் மாணவிகள் அணியும் சீருடை போன்று சேர். வைத்திலிங்கம் துரைசாமி வித்தியாலய மாணவிகளும் சீருடை அணியக் கூடாதா என்று அவர் வினா எழுப்பியுள்ளார்.

விசாரித்துப் பார்த்ததில் இராமநாதன் பெண்கள் கல்லூரியில் முழுப் பாவடை, மேற்சட்டை, தாவணியும் மேல் வகுப்பில் சேலையுமே நீண்ட காலமாகச் சீருடைகளாக இருந்தன. ஆனால் ஒரு சில வருடங்களுக்கு முன்னர், வசதி குறைந்த மாணவிகளின் வசதி கருதி, ஏனைய பாடசாலைச் சீருடைகள் போலவே அரை நீளச் சட்டை சீருடையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பழைய சீருடையை மனதில் வைத்துத் தான் சமாதான நீதிவான் கவலைப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

மாணவிகள் ஒரு புறமிருக்க, வயதான, திருமணமான பெண்கள் அணியும் உடைகள் எமது கலாசாரத்தைக் குழி தோண்டிப் புதைப்பதாக இன்னொரு மூத்தவர் விசனப்பட்டார்.

திருமணமான பெண்கள் கூட அரைக் ''கவுணுடன்'' ஆலயங்களுக்கு வழிபட வருவது எங்கள் ஆடைக் கலாசாரம் எந்தளவுக்கு சீரழிந்து வருகிறது என்பதனை எடுத்துக் காட்டுவதாக வெதும்பினார் தாவடியைச் சேர்ந்த அவர்.

யாழ்ப்பாணத்துப் பெண்கள் மட்டும் என்ன, ஆண்களும் ஆடை அலங்காரத்தில் தமிழர் கலாசாரத்தை மறந்து போகிறார்கள் என்பதே உண்மை.

ஆடையும் அலங்காரமும் ஒவ்வொருவரது சுயவிருப்பம். அது அவரவருக்கு உள்ள தனி மனித உரிமை; சுதந்திரமும் கூட. உண்மை தான்.

ஆனால் —

நாம் வாழும் பிரதேசத்தின் பண்பாடுகள், கலாசாரங்களைத் ''தொலைத்து'' விட்டு, நாகரீக மோகத்தில் மூழ்கிச் சீரழிவது ஏற்புடையதல்ல. சிக்கனம், சௌகரியம் கருதி சில மாற்றங்களைச் சீரணிக்கலாம். ஆனால் எங்கள் சொந்தக் குறியீட்டை விற்று விட்டால் கலாசாரத் தனித்துவம், பாரம்பரியம், சுதேசியம் எல்லாம் என்னாவது?

நாமிங்கு தமிழரென வாழ்வதன் அர்த்தம் எதுவோ...? சிந்தித்துச் செயற்பட வேண்டிய, திருந்த வேண்டிய விவகாரம் இது!

# ஏசு தேர்ந்த சிஷ்யர்கள்

சமயம்

செடியில் அரும்பாயிருப்பவை பூத்து மலர்ந்ததும் வண்டுகள் தாமாக வந்து சேருகின்றன. மரம் பழுத்தால் வௌவால்கள் தாமே வந்துசேருகின்றன. இயற்கையின் இயல்பு இத்தகையது. இக்கோட்பாடு பரமார்த்திக வாழ்வுக்கும் பொருந்துகிறது. சான்றோர் ஒருவர் முற்றிலும் ஆத்மபரிபாகம் அடைந்து விட்டால் அவரிடமிருந்து அருள்விருந்தை ஏற்றுக் கொள்வதற்கு மாந்தர் பலர் வந்து கூடுகின்றனர். அப்பெருமகனைப்பற்றி விளம்பரம் ஒன்றும் யாரும் செய்யவேண்டியதில்லை. காந்தத்தினிடம் ஊசி கவரப்படுவது போன்று பரிபக்குவம் அடைந்துள்ள ஞானியினிடத்தில் அருள்தாசம் எடுத்திருப்பவர்கள் தாமாகப் போய்ச் சேருகின்றனர். பிறகு அவர்களுக்கிடையில் ஏற்படும் இணக்கம் தானாக வலுத்துக்கொண்டே போகிறது. குரு ஸ்தானத்தில் இருப்பவர் தம்மை ஒரு குரு என்று கருதித் தற்பெருமை கொள்ளுவதில்லை. சிஷ்யர்களாக வந்து குழுமுகிறவர்கள் தாய் தந்தையரின் சால்புகளையும், அதற்கெல்லாம் மேலே உள்ள கருணையையும் ஒருவிடத்தில் காண்கின்றனர். என்றும் மாறாத நல்லிணக்கம் அவர்களிடத்தில் இயல்பாக அமைந்து விடுகிறது. இது பரமார்த்திக வாழ்வைப்பற்றிய உண்மை.

## இணக்கம்

ஏசு கிறிஸ்துவுக்கும் அவருடைய சிஷ்யர்களுக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கம் இத்தகையது. சிஷ்யர்களைத் தேடி ஏசுநாதர் அலைந்து திரியவில்லை. தங்களை ஆட்கொள்ள வல்ல அண்ணல் யார் என்று அவர்கள் அவதிப்படவில்லை. தங்கள் கருமத்தில் கண்ணாய் அவர்கள் இருந்தார்கள். தமது பிதாவாகிய பரம்பொருளின் பணியில் ஈடுபட்டவராய் ஏசுநாதர் எங்கெங்கேயோ போய்க் கொண்டிருந்தார், தெய்வாதீனமாக குருவுக்கும் சிஷ்யர்களுக்கும் இடையில் தொடர்பு உண்டாகிறது. பழைய நண்பர்கள் நெடுநாளைக்குப் பிறகு ஒருவரையொருவர் சந்திப்பது போன்று அவர்கள் கூடுகிறார்கள்; உறவு கொண்டாடுகிறார்கள்; அந்த உறவை என்றென்றும் மாறாததாக உறுதிப்படுத்தி விடுகின்றனர்.

சிறுவர்கள் வீதியில் விளையாடிக்கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய விளையாட்டு முற்றுப் பெறுதற்கு முன்பே இரண்டொரு சிறுவர்களின் பெற்றோர் அவ்வழியே வருகின்றனர். உடனே சிறார் தம் விளையாட்டுக்களை நிறுத்திவிட்டுப் பெற்றோருடன் போய்விடுகின்றனர். இந்நிகழ்ச்சியில் வியப்பு ஒன்றுமில்லை. ஏசுக்கிறிஸ்துவினுடைய சிஷ்யர்களின் செயலும் இத்தகையதேயாம். தங்களை ஆட்கொள்ளுதற்கிருந்தவரை அவர்கள் கண்டார்கள்; அடையாளம் தெரிந்து கொண்டார்கள்; அவரைப் பின்தொடர்ந்து போய் விட்டார்கள்.

பலஸ்தீனா பிரதேசத்தில் பெரிய பெரிய குளங்கள் இருந்தன. வண்ணத்தை முன்னிட்டு அவைகள் கடல்கள் என்று அழைக்கப்பட்டன. மலைகளுக்கிடையே கரலிலீ கடல் என்பது ஒன்று இருந்தது. மலைச்சரிவுகள் அதன் கரைகளை வந்து தொட்டுக் கொண்டிருந்தன.

## தெய்வீகத் திருமேனி

அங்கே செம்படவர்கள் இருவர் வலைவீசி மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் உடன் பிறந்தவர்கள். மூத்தவன் பெயர் சீமோன் பேதுரு (Simon Peter). இளையவன் பெயர் அந்திரேயஸ் (Andrews). இவர்களுக்குச் சற்று எட்ட மற்றோர் இடத்தில்



யோவான் என்னும் யுவன் தனது வலையைப் பழுது பார்த்துக்கொண்டிருந்தான். அவனுக்கு மூத்தவன் யாகப்பர் (James) என்பவன் வெறுமனே உட்கார்ந்து கொண்டிருந்தான். சந்தடி ஒன்றும் இல்லாது அவர்களுடைய அலுவல்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. திடீரென்று சந்தடி ஒன்று அமைதியைக் கலைத்தது. யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டது. செம்படவர்கள் சத்தம் வந்த திக்கில் திரும்பிப் பார்த்தார்கள்.

அவர்கள் கண்ணெதிரில் தெய்வீகத் திருமேனி ஒன்று காட்சி கொடுத்தது. வளர்ந்த வடிவம்; கட்டழகின் உச்ச நிலை; அமைதியின் உறைவிடம்; அன்புக்குப் பிறப்பிடம். கடற்கரையில் பிரசன்னமாயினர் ஏசுக்கிறிஸ்து. அவர் பகர்வாராயினர்:-

''நீர்வாழும் மச்சத்தைப் பிடித்து நீங்கள் ஊர்வாழும் மாந்தர்க்கு உரிமையாக்குகிறீர்கள். ஊர்வாழும் மாந்தர்களுள் பலர் சீர்வாழ்வு இன்னதென்று அறியாதிருக்கிறார்கள் சீர்வாழ்வு வாழத் தெரிந்து கொள்பவர்கள் பேரானந்தத்தை உடையவர்களாகிய பரம்பொருளைச் சேர்வார்கள். மக்களுள் மேலோர் செய்யவேண்டிய செயல் அது. அந்த அரும் பணியில் உங்களை ஈடுபடுத்துகிறேன். அதன்பொருட்டு என்னைப் பின்பற்றிவாருங்கள்'' — என்றார்.

## பின்தொடர்ந்தனர்

செம்படவர்கள் நால்வரும் தங்கள் படகுகளையும் வலைகளையும் அப்படியப்படியே விட்டுவிட்டுத் தங்களை ஆட்கொண்டவர் பின் போய் விட்டனர். அந்த நால்வருள் யோவான் என்பவன் வயதில் மிகச்சிறியவன். ஏசுநாதருக்கு இனியமையப்போகும் சிஷ்யர்களுள்ளும் அவனே இளையவன். அன்போடு அவன் ஏசுநாதரை நேசித்தான். அவனுடைய இளமையையும் விசுவாசத்தையும் முன்னிட்டு ஏசுநாதரும் அவனிடத்துத் தனி அனுக்கிரகம் காட்டினார். வயதில் சிறியவர்களாயிருப்பவர்கள் ஒரு நல்ல காரியத்தில் இறங்கும் பொழுது அவர்களிடத்தில் பூரண அன்பும் அனுதாபமும் காட்டுவது மேலோர் இயல்பு. அப்பேரியல்புக்கு ஒப்ப ஏசுநாதர் தமது ஆயுள்காலம் முழுவதிலும் யோவானிடத்து மட்டில்லாத அன்பு கொண்டிருந்தார்.

சீமோன் பேதுரு என்பவன் ஏசுநாதரின் மகிமை முழுதையும் நன்கு அறிந்து கொண்டான். அவனுடைய நுண்ணறிவை ஏசுநாதரே பெரிதும் பாராட்டினார், அவர் பகர்ந்ததாவது; ''உன் காட்சிக்குப் புலப்படுவது மனிதனுடைய உடல் அமைப்பு அன்று. மனிதனுடைய ஆத்ம சொருபத்தையே நீ என்றும் காண்கின்றாய். கடவுளின் அருளுக்கு நீ பாத்திரமாயிருப்பதால் இத்தகைய ஞானக்காட்சி உனக்கு அமைந்திருக்கிறது. 'பேதுரு' என்னும் சொல் கற்பாறை என்று பொருள்படுகிறது. கற்பாறை போன்று நீ தளராத உள்ளம் படைத்தவன். நமது அருள் இயக்கம் என்னும் தேவாலயத்துக்கு உனது உறுதியான அறிவே அஸ்திவாரமாகும். உனது வாழ்வு போன்று உத்தமமான வாழ்வு வாழ்பவர்க்கு நரகப் பிராப்தி என்பது கிடையவே கிடையாது. எனது அனுக்கிரகம் என்றும் உனக்குரியது. இம்மையில் நீ அடைந்துள்ள பெருநிலையே மறுமையிலும் உனக்கு உண்டு. இம்மையில் எதுவும் உன்னை இன்னல் படுத்தாது என்றால் மறுமையிலும் உன்னை இன்னல் படுத்துதற்கு ஒன்றுமில்லை.''

## பேதுருவின் பெருமை

ஏசுக்கிறிஸ்து தேகவியோகமான பிறகு அவருடைய அருள் இயக்கத்தை வெவ்வேறு இடங்களில் பரப்புதற்குச் சென்றவர்களில் பேதுரு ஒருவர். நல்லாரை ஞான வாழ்க்கையில் நடத்துதல் அவருடைய முக்கியமான அலுவல் ஆயிற்று. அதற்காக ஸ்பரிச தீக்ஷை என்பது ஒன்று உண்டு. பேதுரு யார் தலையின் மீது கை வைத்து ஆசீர்வதித்தாரோ அவருக்கு ஆத்ம போதம் தலையெடுத்துவிடும். உலகப் பற்று அழிந்து பட்டுப்போய் தெய்வப்பற்று வந்துவிடும்.

இத்தகைய அதிசயத்தை சீமோன் என்ற கீழ்மகன் ஒருவன் கண்டான். அவன் பேதுருவிடம் வந்து நயமாக வேண்டிக் கொண்டான். ''உமக்கு வேண்டியளவு பணம் தருகிறேன். இப்படி மனிதனை மேலோன் ஆக்கும் ஆத்ம சக்தியை எனக்கும் கொடுத்தருளும்'' என்று அவன் விண்ணப்பித்தான். அதைக்கேட்ட பேதுரு அவனைப் பெரிதும் திரஸ்கரித்தார். ''அறிவுகெட்ட மானுடா! நீ பொருள் கொடுத்து அருளை வாங்கலாமென்று எண்ணுகிறாய். பொருள் பற்று உடையார்க்கு அருள் ஒரு நாளும் இல்லை. நீ படைத்துள்ள பொருள் பற்றை இப்பொழுதே விட்டுவிடு. கடவுளிடத்து வருந்தி விண்ணப்பித்துக் கொள். அவருடைய அருளுக்குப் பாத்திரமாகின்றவர்கள் பாக்கியவான்கள். அவருடைய அருளால் எது வேண்டுமானாலும் நிகழும்.'' இதைக் கேட்ட அக்கீழ்மகன் தன்னைத் திருத்தியமைத்துக் கொள்ள முயலுவதாக உறுதி கூறினான். தன்னை ஆசீர்வதிக்க வேண்டுமென்று பேதுருவை வேண்டிக் கொண்டான்

## ஆட்பட்ட மத்தேயு

வெவ்வேறு இடங்களில் உபதேசம் செய்து கொண்டு ஏசுநாதர் போய்க் கொண்டிருந்தார். ஓர் இடத்தில் மத்தேயு (Mathew) என்ற நாமம் படைத்திருந்த ஒரு மனிதனைப் பார்த்தார். அவன் அரசாங்கத்துக்காக வென்று மக்களிடம் வரி வசூல் பண்ணிக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் அவனுடைய மனபரிபாகம் ஏசுநாதருக்கு விளங்கிவிட்டது. ''மக்களுக்கு அருளை வழங்குவதற்குப் பதிலாக அவர்களிடமிருந்து நீஏன் பரமார்த்திக வாழ்வுக்குப் பயன்படாத பொருளை வசூல் செய்துகொண்டிருக்கின்றனை? அதனால் உனக்கும் நலன் இல்லை: அவர்களுக்கும் நலன் இல்லை. எழுந்து என்னுடன் வா. இறைவன் பணியில் உன்னை ஈடுபடுத்துகிறேன்'' என்றார் ஏசுநாதர். மத்தேயுவும் அப்

(XII ஆம் பக்கம் பார்க்க)

-சுவாமி சித்பவானந்தர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹூன்சென் படைகளின் தாக்குதலால்
# கம்போடிய நெருக்கடியில் திருப்பம்!

## றணரித்துடன் சமரசம் செய்யும் வாய்ப்புக்கள் முற்றாக இழப்பு

கம்போடியாவில் இரண்டாவது பிரதமர் ஹூன் சென்னுக்கு ஆதரவான அரச படைகள் கம்போடியாவின் வட பகுதியில் நிலை கொண்டுள்ள இளவரசர் நொரடோம் றணரித்துக்கு ஆதரவான படைகள் மீது இவ்வாரம் பெரும் தாக்குதல் நடத்தி உள்ளன.

றணரித் ஆதரவுப் படைகளின் கோட்டையாக, இருந்து வந்த ஓ'ஸ்மச் நகர கம்போடிய அரச படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளதாக செய்தி ஸ்தாபன அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

தாய்லாந்து எல்லைக்குச் சமீபமாக, கெமர்ரூச் படைகளின் கட்டுப்பாட்டில் நீண்ட காலம் இருந்து வந்த இந்தப் பகுதி மீது கம்போடிய அரச படைகள் மேற் கொண்ட தாக்குதல் காரணமாக 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கம்போடிய மக்கள் இடம் பெயர்ந்து, பாதுகாப்புத் தேடி தாய்லாந்து எல்லைக்குள் சென்றுள்ளனர்.

றணரித்தின் ஆதரவுப் படைகளுடன் இணைந்து ஹூன்சென்னின் அரச படைகளுக்கு எதிராகப் போராடப் போவதாக கெமர்ரூச் இயக்கம் அறிவித்திருந்தது. இதனை அடுத்து ஹூன்சென் தனது படைகளை கம்போடியாவின் வட பகுதிக்கு அனுப்பி இருந்தார்.

### சமரச முயற்சி சாத்தியம் இல்லை

கம்போடியாவில் தற்பொழுது ஏற்பட்டுள்ள ஆகப்பிந்திய நிலைமை கம்போடியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியை அறவே மழுங்கடித்து விட்டது.

றணரித்தின் இடத்துக்கு கம்போடியாவின் முதலாவது பிரதமராக உங்ஹொட் என்பவரை ஹூன்சென் நியமித்து தற்பொழுது சீனாவில் தங்கி உள்ள மன்னர் நொரடோம் சிஹானூக்கின் ஆசியையும் பெற்றுவிட்டார்.

வியட்நாம் ஆதரவாளரான ஹூன்சென்னால் ஜூலை 5 ஆம் திகதி நடத்தப்பட்ட திடீர் புரட்சி மூலம் பதவியில் இருந்து அகற்றப்பட்ட றணரித், தற்பொழுது தனது நிலைப்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்து உலக நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

'ஆசியான்' அமைப்பு இந்த விவகாரத்தில் தற்பொழுது தலையிடுவதில்லை என்று முடிவு செய்துள்ளது.

ஐ. நா. வினால் ஏற்படுத்தப்பட்ட ஓர் ஒழுங்குமுறைக்கு முரணாக ஹூன்சென் செயற்பட்டு வருவதாக அமெரிக்காவும் அதன் நேச நாடுகள் சிலவும் குற்றஞ்சாட்டி வருகின்றன.

அமெரிக்கா, ஜேர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகள் கம்போடியாவுக்கான உதவிகளை நிறுத்துவதாக அறிவித்துள்ளன.

எனினும் இந்த உதவி நிறுத்தம், இரத்தினக்கல்லும் மரவளமும் இருக்கும்வரை கம்போடியாவை பெரிதாகப் பாதிக்க மாட்டாது என்று நம்பப்படுகிறது.

மற்றொரு தென்கிழக்காசிய நாடான மியான்மரிலும் அமெரிக்கா இத்தகைய பொருளாதாரத்தடைகளை விதித்துள்ளது.

எனினும் மியான்மர் இராணுவ ஆட்சியாளர்களை இந்த தடைகள் மசியவைத்ததாகத் தெரியவில்லை.

கம்போடியாவின் முக்கிய வளங்களான இரத்தினக் கல்லும் மரவளமும் கம்போடியாவின் வட பகுதியிலேயே அதிகம்.

கெமர்ரூச் போராளிகள் நீண்டகாலம் தாக்குப்பிடிப்பதற்கு இந்த வளங்களே காரணம் என்று கூறப்படுகிறது.

தாய்லாந்தில் உள்ள இராணுவ உயர் அதிகாரிகளின் கம்பெனிகளுக்கு மரங்களையும் இரத்தினக்கற்களையும் விற்பது மூலம் கெமர்ரூச் போராளிகள் பெரும் பணத்தை சம்பாதித்து வந்தனர்.

**உலக உலா**
**என்.பி.சீலன்**

1980 க்குப் பின்னர் பொல் பொட் தவிர்ந்த கெமர்ருச் இயக்கத்தின் ஏனைய தலைவர்கள் இத்தகைய வியாபாரம் மூலம் வருமானம் பெறுவதிலேயே கவனம் செலுத்தி வந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

### பொல் பொட் இன்னும் காட்டுக்குள்

1975 — 79 ஆண்டு காலப் பகுதியில் கம்போடியாவில் 10 லட்சம் மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு காரணமாக இருந்தார் என்று கூறப்படும் கம்போடியாவின் முன்னாள் பிரதமர் பொல்பொட் இன்னும் போட்டி கெமர்ரூச் இயக்கத்தின் கைதியாகவே காட்டுக்குள் இருந்து வருகிறார்.

இவரை சர்வதேச நாடு ஒன்றில் தடுத்து வைத்து சர்வதேச நீதிமன்றம் ஒன்றில் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று கிளின்ரன் நிர்வாகம் கோரி வருகிறது.

கனடா, ஆஸ்திரேலியா, ஹோலந்து ஆகிய எந்த ஒரு நாட்டிலாவது விசாரணைக்கு உட்படுத்துவதில் அமெரிக்கா ஆர்வம் காட்டி வருகிறது.

ஆனால் கனடாவில் இத்தகைய நீதிமன்றம் இது வரை விசாரித்த நான்கு வழக்குகளில் எவராவது குற்றவாளியாகத் தண்டிக்கப்படவில்லை.

ஆஸ்திரேலியாவின் யுத்தக் குற்றவாளிகள் சட்டம் நாசிகளை மட்டும் கட்டுப்படுத்துகிறது.

மற்றும் ஐ. நா. யுத்தக் குற்றவாளிகள் நீதிமன்றம் முன்னாள் யூகோஸ்லாவியா, றுவாண்டா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்களை மட்டும் விசாரணை செய்து வருகிறது.

போட்டி கெமர்ரூச் போராளிகள் பொல்பொட் மீது காடு ஒன்றில் வைத்து விசாரணை நடத்தி ஆயுள் தண்டனை விதித்துள்ளனர்.

கடந்த ஜூலை 6 ஆம் திகதி கெமர்ரூச் இயக்கத்துக்கும் கம்போடிய அரசுக்கும் இடையில் நொம்பென்னில் சமாதான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாக இருந்தது. அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தால் பொல்பொட் கம்போடிய அரசிடம் ஒப்படைக்கப்பட்டு அவருக்கு எதிராக சர்வதேச நீதிமன்றம் ஒன்றில் விசாரணை நடத்த வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

### தகராற்றுக்கு கெமர்ருச்சும் காரணம்

பதவியில் இருந்து அகற்றப்பட்ட றணரித்துக்கும் ஹூன் சென்னுக்கும் இடையில் தகராறு ஏற்படுவதற்கு கெமர்ருச் இயக்கமும் ஒரு காரணம் ஆகும்.

ஹூன்சென் வியட் நாமுக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றில் சென்றிருந்தசமயம்கெமர்ரூச் படைகளின் ஆதரவுடன் றணரித் ஹூன்சென்னை ஓரம் கட்ட முயன்றார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

ஹூன்சென் அவசரமாக நாடு திருப்பி தனது நிலைமையைப் பலப்படுத்தினார்.

மிகவும் குறுகிய மணிநேர மோதலில் தலைநகர் நொம்பென்னில் இருந்து றணரித் ஆதரவுப் படைகளை வெளியேற்றுவதில் வெற்றி கண்டார்.

ஹூன்சென்னின் இந்த நடவடிக்கையின் போது பாரிஸ் சென்ற றணரித் இன்னும் நாடு திரும்பவில்லை.

தமது வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் முடிவடைய கம்போடியாவின் வட பகுதிக்குச் சென்று தமது ஆதரவுப் படைகளுடன் இணையப் போவதாக றணரித் அறிவித்துள்ளார்.

### மீண்டும் உள்நாட்டு யுத்த அபாயம்

தற்பொழுது கம்போடியாவில் தோன்றி உள்ள நிலைமை கம்போடியாவை மீண்டும் 1970 க்கு இட்டுச் சென்றுள்ளது.

அமெரிக்க ஆதரவுடன் லொன்நொல் என்பவர் 1970 ஆம் ஆண்டு கம்போடியாவில் ஆட்சியைக் கைப்பற்றினார்.

அப்பொழுது ஆட்சியில் இருந்தவர், தற்பொழுது கம்போடியாவில் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்ட நொரடோம் றணரித்தின் தந்தை நொரடோம் சிஹானூக்.

லொன்நொல் அரசுக்கு எதிராக அப்பொழுது சிஹானூக் ஆதரவுப் படைகளும் கெமர்ரூச் இயக்கமும் இணைந்து போரிட்டன. முதன்முதலாக கெமர்ரூச் இயக்கத்தின் பெயர் அப்பொழுதுதான் வெளி உலகுக்குத் தெரிய வந்தது.

லொன்நொலுக்கு எதிரான போராட்டத்தில் அப்பொழுது சிஹானூக் ஆதரவுப் படைகளுக்கும் கெமர்ரூச் இயக்கத்துக்கும் சீனாவின் ஆதரவு கிடைத்தது.

### அமெரிக்காவின் தவறு

1970 இல் சிஹானூக்கின் ஆட்சியைக் கவிழ்த்தது அமெரிக்கா செய்து பெரும் தவறு என்று தற்பொழுது கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

1975 இல் கெமர்ரூச் இயக்கம் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கும் 1979 இல் வியட்நாம் ஆதரவு ஹூன்சென் அரசு பதவி ஏற்பதற்கும் அடித்தளமிட்டது சிஹானூக் பதவி கவிழ்ப்புக்குப் பின்னர் இடம் பெற்ற தொடரான சம்பவங்களே.

1979 இல் ஏற்படுத்தப்பட்ட வியட்நாம் ஆதரவு ஹூன்சென் அரசுக்கு எதிராக கெமர்ரூச் படைகளும் றணரித் ஆதரவுப் படைகளும் இணைந்து போரிட்டன.

அமெரிக்காவின் ஆதரவு அப்பொழுது கெமர்ரூச் படைகளுக்கும் றணரித் ஆதரவுப் படைகளுக்கும் கிடைத்தன.

1991 ஆம் ஆண்டு பாரிஸில் கம்போடியா தொடர்பான ஐ. நா. ஏற்பாட்டிலான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் வரை இந்த உள்நாட்டுப் போர் தொடர்ந்தது.

பாரிஸ் ஒப்பந்தத்தின் பிரகாரமே 1993 இல் கம்போடியாவில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. இத்தேர்தலில் றணரித்தின் Funcinpec கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற்றது.

ஹூன்சென்னின் கம்போடிய மக்கள் கட்சி (C. P. P.) தோல்வியடைந்தது.

தோல்வி அடைந்த ஹூன்சென் ஐ. நா. வின் சமாதான ஏற்பாட்டைக் குழப்பும் நிலைமை உருவானபோது ஐ. நா. வின் சமரசத்தினால் முதலாவது பிரதமராக றணரித்தும் இரண்டாது பிரதமராக ஹூன்சென்னும் நியமிக்கப்பட்டு அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது.

1998 மே மாதம் மீண்டும் தேர்தலை நடத்துவது என்றும் அத்தேர்தலில் ஒரு பிரதமர் மட்டுமே இருப்பார் என்றும் அப்பொழுது இணக்கம் காணப்பட்டது.

1998 தேர்தலை எதிர் கொள்ளும் நிலையில் றணரித் இருக்கவில்லை என்றே அவ

(XII ஆம் பக்கம் பார்க்க)

---

கம்போடிய வரலாற்றில் பொல்பொட்டின் ஆட்சிக் காலம் ஒரு கறை படிந்த அத்தியாயமாகக் கருதப்படுகிறது.

1975 ஆம் ஆண்டு பொல்பொட்டின் எழுச்சிக் காலம் எனலாம்.

1979 இல் அவரது வீழ்ச்சி ஆரம்பமாகி தற்பொழுது தாய்லாந்து எல்லைக்குச் சமீபமாக உள்ள காடுஒன்றில் அவர் ஆயுள் சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார்.


பொல்பொட்

1996 இல் இயன் சாரியும் அவரது ஆதரவாளர்களும் பொல்பொட்டுடன் கருத்து முரண்பாடு கொண்டு வெளியேறிய போது கெமர்ரூச் இயக்கத்தில் உள் கட்சிப் போராட்டம் பற்றிய தகவல் முதல் தடவையாக வெளிவர ஆரம்பித்தது.

பொல்பொட்டின் நான்கு வருடகால ஆட்சிக் காலத்தில் இயன்சாரி உதவிப் பிரதமராகவும் வெளிநாட்டு அமைச்சராகவும் பதவி வகித்தார்.

---

கம்போடியாவில் அமெரிக்க ஆதரவு லொன்நொல் அரசுக்கெதிரான யுத்தத்தின்போது ஹூன்சென் கெமர்ரூச் இயக்கத்துடன் சேர்ந்து போராடியவர். யுத்தத்தின் போதே அவர் தனது வலது கண்ணை இழந்தார்.

1975 ஆம் ஆண்டு கம்போடியாவில் பொல் பொட் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் ஹூன்சென் ஓரங்கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.


ஹூன்சென்

பொல் பொட் ஆட்சியாளர்களினால் களையெடுப்புக்கு அவர் உள்ளாக இருந்த சமயம் தப்பி வியட்நாம் சென்றார்.

1979 ஆம் ஆண்டு வியட்நாம் படைகள் கம்போடியாவுக்குள் பிரவேசித்து பொல் பொட்டின் ஆட்சியைக் கவிழ்க்கும் வரை ஹூன்சென் வியட்நாமிலேயே தங்கி இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய காதலர் டோடியுடன் டயானா:

# ரூ.3 கோடிக்கு விலைபோன படம்!

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸை விவாகரத்துச் செய்த பின்னரும் பத்திரிகையாளரின் விடாத கண்காணிப்பிலும், 'கிசுகிசுக்களிலும்' தொடர்ந்து சிக்கி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பவர் டயானா.

அவர் இப்போது புதுச்சிக்கல் ஒன்றில் வகையாக மாட்டிக் கொண்டிருக்கின்றார்.

விவாகரத்துச்செய்த டயானாவுக்கு புதுப்புது காதலர்கள் தோன்றி வருவதாக மேற்கு நாட்டுப் பத்திரிகைகள் அவ்வப்போது பரபரப்பான செய்திகளை வெளியிடுவது வழக்கம்.

குதிரைப்பயிற்சி வீரர் ஜேம்ஸ் ஹெவிட், ஒலிவர் ஒரே, பாகிஸ்தான் நாட்டு அறுவைச் சிகிச்சை நிபுணர் அசந்த்கான் என இப்பட்டியலில் நீண்டு செல்கின்றது.

இந்தப் பட்டியலில் தற்போது புதிய நபர் ஒருவர் இடம்பிடித்துக் கொண்டிருக்கின்றார்.

எகிப்து நாட்டைச் சேர்ந்த பிரபல கோடீஸ்வரர் ஒருவரின் மகனும், அமெரிக்காவில் வாழ்பவருமான டோடி அல்பெய் (வயது 40) என்பவரே அவர். மிகப்பிரமாண்டமான செலவில் படங்களைத் தயாரிக்கும் தயாரிப்பாளர் இவர்.

இவரையே டயானா மறுமணம் செய்து கொள்ளப் போகின்றார் என்ற செய்திகளும் வெளியாகியுள்ளன.

டோடி பெய்யும் இளவரசி டயானாவும் தனியார் ஜெட் விமானம் ஒன்றின் மூலம் பிரான்ஸின் நீஸ் என்ற இடத்துக்குச் சென்றனர். டோடியின் தந்தைக்குச் சொந்தமான ஆடம்பரக் கப்பலில் உல்லாசமாகச் சுற்றுப்பயணம் செய்து அங்குள்ள சார்டினியா என்ற தீவில் பொழுதைக் கழித்தனர்.

அப்போது இளவரசி டயானா டோடி பெய்த்தை கட்டிப்பிடித்துக் கொண்டிருந்ததைத் தாம் படம் எடுத்ததாக இத்தாலி நாட்டுப் புகைப்படக்காரர் மரியோ பிரன்னா கூறுகின்றார்.

டயானாவின் இடுப்பை டோடி பெய்த்தின் கை வளைத்துப் பிடித்திருக்கும் இந்தப் படத்தை 'சண்டே மிரர்' பத்திரிகைக்கு மூன்று கோடி ரூபாவுக்கு (இலங்கைப் பணத்தில்) அவர் விற்றுவிட்டார்.

செய்தியுடன் புகைப்படத்தையும் சேர்த்து வெளியிட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது ''சண்டே மிரர்''.

சர்ச்சைக்குரியதும், அபூர்வமானதுமான அந்தப் புகைப்படம் வெளியான அன்று மேலும் 2 லட்சம் பிரதிகள் கூடுதலாக அச்சிடப்பட்டன. லண்டனில் அவை அனைத்துமே சில நிமிடங்களில் விற்றுத் தீர்ந்துவிட்டன.

புதிய காதலர் பற்றிய செய்தி குறித்து கருத்து வெளியிட டயானாவின் அலுவலகம் மறுத்துள்ளது.

டயானாவின் இந்தப் புதிய காதல் விவகாரம் குறித்து அவரது முன்னாள் கணவரும், இளவரசருமான சாள்ஸ் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

''டோடி பெய்த்துடன் காதல் கொண்டிருப்பது டயானாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தால் எனக்கும் அது சந்தோசமே'' என்று சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

பெய்த்தின் உறவு குறித்து இளவரசி டயானா எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை.

காதல் மன்னன் பெய்த்தின் பெயர் இதற்கு முன்னரும்பல அழகிகளுடன் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ★

## பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

## இந்த ஜோடிக்கு வயது 105

கின் நரீரா, ஜின் கானி இவர்கள் இருவரும் ஜப்பானின் டோக்கியோவைச் சேர்ந்தவர்கள்.

ஜப்பானில் மிகவும் வயது முதிர்ந்த இரட்டைப் பெண்மணிகளான இவர்கள் இம்மாத முற்பகுதியில் தங்கள் 105 ஆவது பிறந்த நாளை கோலாகலமாகக் கொண்டாடினர்.

கின் நரீரா என்றால் ஜப்பானிய மொழியில் ''தங்கம்'' என்று அர்த்தம். அதே போன்று ஜின் கானி என்பது 'வெள்ளி' என்ற அர்த்தமுடைய பெயர்.



தங்கமும், வெள்ளியுமான இந்த இரட்டைச் சகோதரிகள் பற்றிய தகவல் அவர்களது 90 ஆவது வயதிலேயே அம்பலமாகியது. அப்போது தான் இவர்கள் உலகத்தின் கண்களுக்குத் தெரியவந்தனர்.

அண்மையில் 105 ஆவது பிறந்த தினத்தை ஒட்டி இவர்களது படங்கள் ஜப்பானிலும், உலகின் பல நாடுகளிலும் தொலைக்காட்சிகளையும், சஞ்சிகைகளையும் அலங்கரித்தன.

## கோயிலில் எழுந்தருளும் பாரதியார்!

பாரதியின் திருவுருவச்சிலை முதன் முறையாக ஆலயம் ஒன்றில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது.

'பாரதியாழ்வார்' என்று நாமகரணம் சூட்டப்பட்டுள்ள — ஒன்றேகால் அடி உயரமுடைய — இந்தப் பஞ்சலோகச் சிலை சென்னை அடையாறு மத்திய கைலாஸ கோயிலில் கடந்த வாரம் — இந்திய சுதந்திரப் பொன்விழா தினத்தன்று ஒகஸ்ட் 15 ஆம் திகதி — காலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

காலை 8 மணிக்கு 'பாரதியாழ்வார்' சிலைக்கு அபிஷேகமும் மாலை 6 மணிக்கு கோயில் பிரகாரத்தில் சிலையுடன் திருவீதி உலாவும் இடம்பெற்றன.

முற்காலத்தில் தமிழுடன் சைவ — வைஷ்ணவ சமயங்களைப் பரப்பிய நாயன்மார்கள், ஆழ்வார்களுக்கு கோயில்களில் சிலைகள் வைக்கப்பட்டிருப்பதும், அவற்றுக்கு வழிபாடு நடைபெறுவதும் தெரிந்தவையே.

அந்த வரிசையிலேயே பாரதியாழ்வார் சிலையும் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படுவதாக ஆலய நிர்வாகிகள் கூறுகின்றனர்.

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர் ஒருவருக்கு கோயிலில் சிலை பிரதிஷ்டை செய்வது இதுவே முதல் தடவை.


சக்தியையும் கண்ணனையும் பல்வேறு கோணங்களில் போற்றிப் பாடியவர் பாரதி.

கோயிலில் அபிராமி சந்நிதியில் எதிர்ப்புறம் இருக்கும் கண்ணன் (பெருமாள்) சந்நிதியைப் பார்த்து கைகூப்பித் தொழுத வண்ணம் நிற்கும் பாரதியாழ்வார் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது.

''பாரதியை ஒரு சமய வட்டத்துக்குள் கொண்டு வருவது சரியா? 'பிரபஞ்சம் யாவும் ஒன்றே' என்ற பாரதியின் அத்வைத உணர்வுக்கு இவ்வாறு அவரின் சிலையைப் பிரதிஷ்டை செய்வது முரணாகாதா?'' — மேற்படி ஆலய நிர்வாகச் செயலாளரான எஸ். டி. சுவாமியிடம் இவ்வாறு கேள்வி எழுப்பியபோது அவர் கூறிய பதில் வருமாறு:-

''தமிழ் உணர்வுடன் தேச உணர்வு, சமூக மேம்பாடு, ஆன்மீக நெறி மற்றும் பல்வேறு முற்போக்கு விஷயங்களைப் பரப்பும் வகையில் பாரதி பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றில் பக்தி இலக்கியம் மேலோங்கி நிற்கிறது. குறிப்பாகக் கண்ணனையும், காளியையும் (சக்தியையும்) அவர் ஆழ்ந்து, அமிழ்ந்து, அனுபவித்துப் பாடியுள்ள பாடல்களில் இந்த பக்தி ரசம் ததும்புகின்றது.

''இவ்வாறு ஆழ்ந்து பாடுபவர்களையே பிறர் ஆழ்வார்கள் என்றழைத்தனர். அந்த ஆழ்வார் பட்டம் வைஷ்ணவ சம்பிரதாயத்தினருக்கு மட்டுமே தங்கிவிட்டது என்னவோ உண்மைதான். ஆனாலும் பாரதியின் ஆழ்ந்த பக்தி பரவசத்தினாலேயே அவரை நான் ஆழ்வாராகத் தரிசித்தேன்.



''நண்பர் ஒருவர் என்னுடன் பேசிய போது பாரதியார் தொழுகுலம் அல்லவா என்று கேட்டார். தொழுகுலம் என்பதற்கு பகவானைத் தொழுத — பக்தர்களால் தொழக்கூடிய — வகையினர் என்று பொருள். அப்போதுதான் எனக்கு இந்தப் பொறி தட்டியது. பாரதியாழ்வாரின் திருவுருவச் சிலையும் உருவானது.

''மத்திய கைலாஸ கோயிலில் எந்தச் சாதியினரும் தாங்களே இங்குள்ள சுவாமி சிலைகளுக்குப் பூஜை, அர்ச்சனை செய்யலாம். பெண்களும் இதேபோல் வழிபாடு நடத்தலாம். அத்துடன் அந்தச் சந்நிதியில் உள்ள தமிழ் அர்ச்சனை கசட்டுகளைப் போட்டு இந்த வழிபாட்டை நடத்தலாம். சாதி வேறுபாடின்மை, பெண் சமத்துவம், தமிழ் உணர்வு ஆகியவை ஒருங்கே குடிகொண்டுள்ள இந்தக் கோயிலில் பாரதியின் திருவுருவச்சிலை [illegible]
— என்றார் சுவாமி.

## 'தலிபான்' இயக்கத்துக்காகப் போரிட பாகிஸ்தான் சிறுவர்கள் கடத்தல்!

ஆப்கானிஸ்தானின் தலிபான் இயக்கத்தில் சேர்த்துப் போரிடுவதற்காக பாகிஸ்தானில் இருந்து பல நூற்றுக்கணக்கான சிறுவர் ஆப்கானிஸ்தானுக்குக் கடத்தப்பட்டிருக்கின்றார்கள் என்ற திடுக்கிடும் தகவல் தற்போது வெளியாகியிருக்கின்றது.

கராச்சி மதப்பள்ளிகளில் இருந்து இவ்வாறு ஆயிரத்து ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் காபூலுக்குக் கடத்தப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

இவ்வாறு கடத்தப்பட்ட 13 வயதுச் சிறுவன் ஒருவன் அண்மையில் மீட்கப்பட்டுள்ளான்.

அவன் வெளியிட்ட தகவல்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

கராச்சியில் உள்ள ஜமியா இஸ்லாமியப் பள்ளியில் இருந்து பழமைவாத இஸ்லாமிய மதகுரு ஒருவரால் இவ்வாறு பல சிறுவர்கள் ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றும்—

இத்தகைய மதகுருமாரே தலிபான் இயக்கத்துக்கு பாகிஸ்தான் 'பிள்ளைகளைப் பிடித்துத் தரும் ஏஜெண்டுகளாக' செயற்படுகின்றனர் என்றும்—

தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானில் தீவிரமடைந்துவரும் உள்நாட்டுப் போரில் அண்டைநாடான பாகிஸ்தானின் உதவியுடன் சண்டையிட்டு வரும் தலிபான் இயக்கத்தின் கை ஓங்கியிருப்பதும்—

தலைநகர் காபூலை அந்த இயக்கம் கைப்பற்றி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதும்—

'பெண்கள் கல்வி கற்கக் கூடாது, உத்தியோகம் பார்க்கக் கூடாது ஆண்கள் கட்டாயம் தாடிவளர்க்க வேண்டும்' —என்பது உட்பட பல கட்டுப்பாடுகளை தலிபான் இயக்கம் விதித்திருப்பதும்— தெரிந்தவையே.

## 'கொப்பி அடித்தவர்' கல்வி அமைச்சராவதா?

### கர்நாடகத்தில் கட்சிகள் ஆவேசம்

சட்டக்கல்லூரியில் மாணவராக இருந்த சமயம் பரீட்சையில் பார்த்து எழுதி ('கொப்பி அடித்து') வகையாக மாட்டிக் கொண்டு, 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டவர் உயர்கல்வி அமைச்சராக வரலாமா?

—இவ்வாறு கர்நாடக மாநில உயர் கல்வித்துறை அமைச்சர் சோமசேகரருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருக்கின்றன அந்த மாநில எதிர்க்கட்சிகள். இந்த விவகாரம் சட்டமேலவையிலும் எதிரொலித்துள்ளது. அமைச்சரை உடன் இராஜினாமாச் செய்யுமாறு அங்கு பல கட்சிகளும் சேர்ந்து வற்புறுத்தியுள்ளன.

கர்நாடகாவில் சமீபத்தில் கல்லூரி ஆசிரியர்கள், ஆண்டு இறுதித்தேர்வுப் பணிகளை புறக்கணிக்கப் போவதாக அச்சுறுத்தினர். அவர்களுக்கு எதிராக உயர் கல்வித்துறை அமைச்சர் சோமசேகர் கடும் நடவடிக்கைகளை எடுத்தார். இதை அடுத்து, சோமசேகர் மீது பரீட்சையின் போது கொப்பி அடித்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

''1970 ஆம் ஆண்டு சோமசேகர் சட்டக்கல்லூரி மாணவராக இருந்தபோது தேர்வு எழுதுகையில் 'கொப்பி' அடித்ததாக பிடிபட்டதற்கு ஆதாரம் உள்ளது'' என பெங்களூர் பல்கலைக்கழக துணை வேந்தர் என். ஆர். ஷெட்டி கூறியது இப்பிரச்சினையை பூதாகாரமாக்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியின் சொற் சிறப்பு

தமிழ் மொழிக்குள்ள சிறப்புக்களில் சொற் சிறப்பு என்பதும் ஒன்று. இச்சிறப்பு ஒரு தனித்தன்மை வாய்ந்தது. இதனைப் பிறமொழிகளிற் காண இயலாது.

தமிழ்ச் சொற்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 90,000 மட்டுமே. இதில் எந்தச் சொல்லும் ஏழெழுத்துக்கு உட்பட்டதே. தமிழில் 8 எழுத்துச் சொல்லைக் காண முடியாது. ஆங்கிலத்தில் 20 எழுத்துக்களுக்கு மேற்பட்ட சொற்கள் பலவற்றைக் காணலாம். 23 எழுத்துச் சொல்லும் உண்டு. அது ''எக்சாமெதலனெட் டெட்ராமைன்'' என்பது. தமிழில் இத்தொல்லை இல்லை.

6,7 எழுத்துள்ள சொற்களும் மிகச் சில. 5-எழுத்துள்ள சொற்களும் சிலவே. 4-எழுத்துள்ள சொற்கள் பல. 3,2-எழுத்துள்ள சொற்களே மிகப் பல. ஓரெழுத்து ஒரு சொல் என்பதும் தமிழில் உண்டு. அவை:-

★ ஆ — பசு
★ நா — நாக்கு
★ பை — சாக்கு
★ வா — வரவேற்றல்
★ போ — விரட்டுதல்
★ கை — ஓர் உறுப்பு
★ தா — கொடு
★ கோ — மன்னன்
★ தீ — நெருப்பு
★ மை — கருமை
★ வை — ஏவுதல்
★ ஈ — ஓர் உயிர்
★ பூ — மலர்
★ மா — குதிரை
★ தை — ஒரு மாதம்

என்பன. இவை எழுத்தின் சுருக்கத்தையும், சொல்லின் பெருக்கத்தையும், மொழியின் வளத்தையும் ஒருங்கே காட்டுவனவாம்.

பிற மொழிச் சொற்கள் உருவத்தை மட்டுமே காட்டுவன. தமிழ் மொழிச் சொற்கள் உருவத்தையும், பருவத்தையும் சேர்த்துக் காட்டக் கூடியன.

''பெண்'' என்பதற்கு ஆங்கிலேயர் ''வுமென்'' என்பர். வடமொழியினர் ''ஸ்திரீ'' என்பர். இவை இரண்டும் உருவத்தை மட்டுமே காட்டுகின்றன; பருவத்தைக் காட்டவில்லை. காட்ட வேண்டுமானால், ''யங்'' ''ஓல்டு'' என்பதையோ, ''பால்ய'', ''வயோதிக'' என்பதையோ சேர்த்துக் கூறியாக வேண்டும். இவை அம்மொழிகளின் சொற்சிறப்பைக் காட்டுவதாக இல்லை. தமிழிலுள்ள சொற்கள் உருவத்தோடு அதன் பருவத்தையும் காட்டுவதைக் கண்டு மகிழுங்கள்.

### பெண்

★ பேதை — 5 வயதுக்கும் கீழ்
★ பெதும்பை — 10 வயதுக்கும் கீழ்
★ மங்கை — 16 வயதுக்கும் கீழ்
★ மடந்தை — 25 வயதுக்கும் கீழ்
★ அரிவை — 30 வயதுக்கும் கீழ்
★ தெரிவை — 35 வயதுக்கும் கீழ்
★ பேரிளம்பெண் — 45 வயதுக்கும் கீழ்

### ஆண்

★ பாலன் — 7 வயதுக்கும் கீழ்
★ மீளி — 10 வயதுக்கும் கீழ்
★ மறவோன் — 14 வயதுக்கும் கீழ்
★ திறலோன் — 15 வயதுக்கும் கீழ்
★ காளை — 16 வயதுக்கும் கீழ்
★ விடலை — 30 வயதுக்கும் கீழ்
★ முதுமகன் — 30 வயதுக்கு மேல்

இவ்வாறு பன்னிருபாட்டியல் ஆண்களுக்கும் ஏழு பருவப் பெயர்களைத் தருகிறது. மேலும், ஆண்களின் பருவத்தைப் பின்வருமாறும் கொண்டு கூறலாம்.

### ஆண்

★ பிள்ளை — குழந்தைப் பருவம்
★ சிறுவன் — பாலப் பருவம்
★ பையன் — பள்ளிப் பருவம்
★ காளை — காதற் பருவம்
★ தலைவன் — குடும்பப் பருவம்
★ முதியோன் — தளர்ச்சிப் பருவம்
★ கிழவன் — மூப்புப் பருவம்

இவையனைத்திற்கும் ''மேன்'' என்ற ஆங்கிலச் சொல்லோ, ''புருஷன்'' என்ற வடமொழிச் சொல்லோ பொருந்துமா? என எண்ணிப் பாருங்கள். இவை அம்மொழிகளின் சொற்பஞ்சத்தையே காட்டுகின்றன.

ஆண் பெண் மட்டுமல்ல; ''பூ'' என்பதை எடுத்துக் கொள்ளுங்கள். ''ஃப்ளவர்'' என்பர் ஆங்கிலேயர்; ''புஷ்பம்'' என்பர் வடமொழியாளர். அவ்வளவுதான். உருவத்தையும் பருவத்தையும் சேர்த்துக்காட்ட அவர்களிடம் சொற்களில்லை. தமிழிற் பாருங்கள்.

★ அரும்பு — அரும்பும் நிலை
★ மொட்டு — மொக்குவிடு நிலை
★ முகை — முகிழ்க்கும் நிலை
★ மலர் — மலரும் நிலை
★ அலர் — மலர்ந்த நிலை
★ வீ — வாடும் நிலை
★ செம்மல் — வதங்கும் நிலை

எப்படி தமிழில் உள்ள சொற்களின் சிறப்பு! பூவை விட்டு இலையைத்தான் எடுங்கள். வடமொழியினர் இதைப் ''பத்திரம்'' என்பர். ஆங்கிலேயர் ''லீவ்ஸ்'' என்பர். இச்சொற்கள் இரண்டும் இலை என்ற உருவத்தையே காட்டுகின்றன. அதன் பருவத்தைக் காட்டவில்லை. தமிழ்ச் சொற்களோ உருவத்தையும் குறித்து, பருவத்தையும் காட்டி மகிழ்விக்கின்றன.

★ கொழுந்து — குழந்தைப் பருவம்
★ தளிர் — இளமைப் பருவம்
★ இலை — காதற் பருவம்
★ பழுப்பு — முதுமைப் பருவம்
★ சருகு — இறுதிப்பருவம்

தமிழிலுள்ள இச்சொற்களின் உருவம், பருவம் ஆகிய இரண்டையும் ஒருங்கே கண்டு களியுங்கள்.

இதிலும் ஆல், அரசு, அத்தி, மா, பலா, வாழை முதலியவைகளின் இலைகளுக்கு மட்டுமே ''இலை'' என்று பெயர்.

அகத்தி, பசலி முதலியவற்றின் இலை இலையாகாமல் ''கீரை'' எனப்பெயர் பெறும். மண்ணிலே படர்கின்ற கொடி வகை இலைகளுக்குப் ''பூண்டு'' என்று பெயர். அறுகு, கோரை முதலியவைகளின் இலைகள் ''புல்''லாகி விடும். நெல், வரகு முதலியவற்றின் இலைகள் ''தாள்'' என்றாகும்.

மலையிலே விளைகின்ற உசிலை முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் 'இலை' அல்ல; அவற்றின் பெயர் ''தழை''. சப்பாத்தி, தாழை இனங்களின் இலைகள் இலையாகா; அவற்றின் பெயர், ''மடல்''. கரும்பு, நாணல் முதலியவற்றின் இலைகள் இலையாகா; அவற்றின் பெயர் ''தோகை''. தென்னை, பனை, ஈந்து, கமுகு முதலியவைகளின் இலைகள் இலையெனப் பெயர் பெறா; அவற்றின் பெயர், ''ஓலை''. என்னே தமிழின் சொல்வளம்!

இவையனைத்திற்கும், ''லீவ்'' என்ற ஆங்கிலச் சொல்லோ, ''பத்திரம்'' என்ற வடமொழிச் சொல்லோ பொருந்துமா? எனப் பாருங்கள். அப்பொழுதுதான் தமிழ் மொழியின் சொல்வளம் நன்கு விளங்கும்.

## கி. ஆ. பெ. விஸ்வநாதம்

அரிசியைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் ''ரைஸ்'' என்பது. சோற்றைக் குறிக்கும் சொல்லும் ''ரைஸ்'' தான். இது ஆங்கில மொழியின் சொற்பஞ்சத்தையே காட்டுகிறது. இதனால், சோறு கேட்பவர்களுக்கு அரிசியும், அரிசி கேட்பவருக்குச் சோறும் கிடைத்து விடலாம்.

தமிழில் பல பொருள் குறிக்கும் ஒரு சொல் என்பதும் உண்டு, அவற்றுள் 'மா' என்பது ஒரு சொல். அது......அழகு, அளவு, அறிவு, ஆணி, இடித்த மா, இடை, கட்டு, கறுப்பு, மாமரம், குதிரை, சீலை, செல்வம், தாய், நிறம், பரி, பெருமை, மேன்மை, வண்டு, வயல், வலி, விலங்கு முதலியவற்றைக் குறிக்கும்.

அடுத்து தமிழில் ஒருபொருள் குறிக்கும் பல சொல் என்பதும் உண்டு. அவற்றுள் வேழம், களிறு, கரி, கைம்மா, நடைமலை, கைம்மலை, கறையடி, அறுகு, ஆம்பல், நந்தி, தும்பி, தூங்கல் எனும் இவையனைத்தும் யானையைக் குறிப்பன. இவை தமிழின் சொற்சிறப்பைக் காட்டுவனவாம்.

''இராம ஜெயம்'' என்பது வடமொழியிலுள்ள இரு சொற்களைக் கொண்ட ஒரு சொற்றொடர். இதன் பொருள் என்ன? ''ராம வெற்றி'' என்பதே. இது பொருளைத் தெளிவாக விளக்கவில்லை. ஏனெனில், இது வேற்றுமையுருபு இல்லாதது. தமிழில் வேற்றுமை உருபு கலப்பதால் அது பொருளை நன்கு விளக்கிக் காட்டுகிறது; எவ்விதமெனில்—

இராமனை வெற்றி, இராமனால் வெற்றி,
இராமனுக்கு வெற்றி, இராமனின் வெற்றி,
இராமனது வெற்றி, இராமனுடைய வெற்றி,
இராமனிடத்தில் வெற்றி, இராமனே வெற்றி.

என்ற எட்டும் வேற்றுமை உருபு கலந்தவை. இந்த எட்டில் ''இராம ஜெயம்'' என்பது எதைக் குறிக்கிறது? தமிழில் உள்ள சொற்சிறப்பைக் காட்ட இவை போதுமானவை.

★

## அமைதிக்கான எதிர்(பார்)ப்பு

இந்தப் பூமி ஏன்
புரள்கிறது?
சூரிய வெம்மை
சுடுவதால் தானாம்.
பாரிய இன்னல்
தருவதால் தானாம்.

மழை பார்த்து
மறுமொழி சொன்னது;
''வெம்மை அடக்க
வேளை வருவேனென......''

வேளை எப்போ
வருமெனக் கேட்க,
''நாளை கூட
நான் வரலாம்......''

''எப்படி......''
''காற்றைக் கிழித்து,
கன இடி முழங்கி,
கண்ணைப் பறித்து.
மின்னல் அடித்து......
கட்டாயம் வருவேன்
காத்திரு'' — என்றது.

காற்றைக் கிழித்து.
கன இடி முழங்கி,
கண்ணைப் பறித்து,
மின்னல் அடித்தது.
ஆனால்......
மழையைக் காணோம்;
மகிழ்வைக் காணோம்.

காத்திருந்து, காத்திருந்து
களைத்த பூமி,
வானத்தைப் பார்த்து
வழியொன்று கேட்டது

''வசந்தத்தின்
வழி பார்க்கும்
வரப்புண்டோ
இனி(தே) என் —
வாழ்விற்கு.........''

-மானியூர் ரட்ணேஸ்

## முடிவு

அன்புக் காதலி!
இரட்டைப் பின்னலால்
இதயத்தை
இணைத்தவளே!
கலைந்துபோன
கல்லூரிக் காதலாக
இருக்கக் கூடாது
என்பதே என் விருப்பம்.
புறக் கவர்ச்சி
பாடை வரை
கூட வராது.
இரு உள்ளங்கள்
இணைவது
'அதற்காக'
மட்டுமல்ல.
இறுதி வரை
இருவரிடமும்
மாறாதிருப்பது
மனம் ஒன்று தான்.
எனக்கு நீ
தாயாக,
தாரமாக,
தோழியாக;
சேயாக......
எல்லாமாகத் தேவை.
எனக்கேற்றவளாய்
உன்னை நீ
மாற்றிக்கொள்ளாவிடின்;
நாம் இருவரும்
பிரிவோம்!

- உடுவில் அரவிந்தன்

# தூக்கம் உன் கண்களைத் தழுவட்டுமே!

களைத்துச் சோரும் மனித உடலுக்கும் மனதுக்கும் புத்துணர்ச்சி தருவதற்குத் தூக்கம் மிக மிக அவசியமானதாகும்.

தூக்க விவகாரத்தைத் தூக்கி எறிந்துவிடாமல் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டியது அவசியமாகும்.

உடலையும் மனதையும் நல்ல ஆரோக்கியமானதாகப் பேணுவதற்குத் தூக்கம் கட்டாயமானதாகும்.

குழந்தைகளின் நித்திரை நேரம் மிக நீண்டது.

ஆனால் பெரியவர்களைப் பொறுத்தவரை குறைந்தது நான்கு மணிநேரமாவது (அதிக பட்சம் எட்டு மணி நேரம்) தூங்கவேண்டியது மிக மிகக் கட்டாயமானதாகும்.

இவ்வளவு நேர தூக்கத்தை — ஓய்வை — உடலுக்கும் மனதுக்கும் நாம் வழங்காவிட்டால் உடல் களைப்படையும்; செயல் திறம் குறையும்; அன்றாட வாழ்வு, சுக நிலைமை போன்றவை பாதிப்படையும்; மனச் சோர்வு ஏற்பட்டு மனநோயில் கூட அது போய் முடியலாம்.

### நீண்ட தூக்கம் ஆபத்து

என்றாலும்சாதாரணமாக வளர்ந்த ஒருவர் ஒன்பது மணி நேரத்துக்கு மேல் தூங்குவதும் தவறானதாகும்.

அவ்வாறு அதிக நேரம் தூங்கினால் அது நமது உடலில் பல்வேறு ஓமோன்களின் உற்பத்தியைப் பாதித்து, இறுதியில் உடல் நிலையையும் நெருக்கடிக்கு உள்ளாக்கிவிடும்.

சரி. தினசரி நான்கு மணி நேரமாவது நிம்மதியாகத் தூங்குவதற்கு வழி என்ன? அதற்குச் சில 'டிப்ஸ்' இதோ:-

★ சீரான தூக்கம் சட்டென வரவேண்டுமானால்

## தொகுப்பு: பிரியா

தினமும் குறிப்பிட்ட ஒரு நேரத்துக்கு தூங்கச் செல்வதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

எமது பிரதேசத்தில் இப்போது ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருப்பதால் எம்மில் பலரின் மாலை நேர நடவடிக்கைகள் வீட்டுக்குள்ளேயே அடங்கிப் போய்விடுகின்றன.

பலவீடுகளுக்கு மின்சார விநியோகம் இல்லை; மின்சார விநியோகம் இருக்கும் வீடுகளுக்கும் அநேகமாக இரவு பத்து மணியுடன் மின்சாரம் துண்டிக்கப்பட்டு விடுகின்றது.

இதனால் படிப்பது மற்றும் அத்தியாவசிய வீட்டு வேலைகள் தவிர — வேறு வேலை

(IX ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீருடை

இன்று மனம் எதிலும் ஒட்டிக்கொள்ளாமல் இருந்தது. அந்த ரம்மியமான சூழல் கூட என் மனதுக்கு இதமளிக்கவில்லை. ஏதோ குற்றம் இழைத்தவன் போல துயரம் கொண்டேன். என் செயல் தான்தோன்றித்தனமானது என்ற முடிவுக்கு வந்த பின் எதிலும் ஒட்டிக் கொள்ள முடியவில்லை. பேதலித்துப் போயிருந்தேன். அரை நாள் விடுகை பெற்று வீடு திரும்பவேண்டும் போல் தோன்றியது.

சக ஆசிரியர்களுடன் என்றும் நட்பைப் பேணி வரும் எனக்கு இன்று ஏனோ அவர்கள் பக்கமிருந்து ஒதுங்கி இருக்கவேண்டும் போலிருந்தது. ஏதும் பள்ளி அலுவல்களுடன் அணுகுவோரின் முகத்தைப் பார்த்து பதில் சொல்லிவிட்டு என்பாட்டில் அமைதி தேடினேன்.

இடைவேளை நேரம்!

ஆசிரியர் ஓய்வு அறைக்குப் போகாமல் அந்த வகுப்பிலேயே தங்கிவிட்டேன்.

மாணவர்கள் வகுப்பறையிலிருந்து விடுதலை பெற்று கூச்சலிட்டபடி அங்குமிங்கும் ஓடி ஒருவரையொருவர் சீண்டிக்கொண்டும், சண்டை பிடித்துக் கொண்டுமிருந்தனர். கையில் காசு உள்ளவர்கள் கன்ரீனைத் தேடிக் கம்பீரமாக நடப்பதும், மற்றவர்கள் ஏம்பலித்து நின்று அவர்களைப் பார்ப்பதும், சிலர் வகுப்புத் தோழர்களுடன் பகிர்ந்து வாயில் போட்டுக் கொள்வதும், கையில் பிடித்து தோழமை பாராட்டுவதுமாக — எல்லாமே பழகிப்போன காட்சிகள்தான்.

கடந்துபோன மாணவப் பருவத்து நினைவுகள் மீண்டெழ அதில் கரைந்துபோயிருந்தேன். அதையும் மீறி அந்நினைவுகளூடே இன்று நடந்த சம்பவம் துருத்திக் கொண்டு தலைகாட்டியது. உள்ளம் தகிப்பது போலவே வெளிச் சூழலும் வெம்மையை உகுத்தபடியிருந்தது. நல்ல காற்று வாங்கவேண்டும் போலிருந்தது. வெளியே வந்தேன்.

பாடசாலைச் சிறு வளவில் நான்கு பக்கமும் உயர நிற்கும் மாடிக் கட்டடங்கள். அவை காற்றின் வரவை உள்ளே அனுமதிப்பதில்லை என்ற கங்கணத்தில் நிமிர்ந்து நின்றன. நடுவில் காலைக் கூட்டம் கூடவும், மாணவர் ஓடியாடவுமென சிறு தளம் மட்டும் இருந்தது.

வெளியே வந்தபோது, அவனை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவன் நண்பர்களிடம் தன்னை இழந்து விளையாடிக்கொண்டிருந்தான் எனது பார்வை அவனில் நிலைகுத்தி நின்றது.

சற்று முன் அவனை வகுப்பில் நன்றாக அடித்துவிட்டேன். முன்பெல்லாம் எந்தக் கேள்விக்கும் வெடுக்கெனப் பதில் சொல்லிவிடும் அவனைத் தண்டித்துவிட்டேன். அதுவும் சற்றுக் கடுமையாக.

ஏரேமியன் இடம் பெயர்ந்து போய் வன்னியால் இங்கு வந்து இரு மாதங்கள் கூட ஆகவில்லை. இப்போ முற்றிலும் மாறிப் போயிருக்கிறான். முன்னர் போல அவனில்லை; பொய் பேசவும் துணிந்துவிட்டான் என்பதுதான் என் கோபமெல்லாம். எத்தனை நாள் அவன் பேசும் பொய்யை மன்னிப்பது? திரும்பத் திரும்ப அந்த வார்த்தைகளையே ஒப்புவிக்க இந்த வயதில் எப்படி முடிகிறது அவனுக்கு?

தன் போக்கில் பாடசாலைக்கு வருவதும், காதில் எதையும் வாங்கிக்கொள்ளாதவன் போலவுமிருக்கவும் விட்டான்.

அடியை வாங்கிக்கொண்டு தொண்டைக் குழியில் துக்கத்தையும் வெட்கத்தையும் வைத்துக்கொண்டு வெளியிட முடியாமல் அவஸ்தைப் பட்டது நினைவுக்கு வர அவன் மீது இரக்கம் ஏற்பட்டது.

அன்று வகுப்பில் ஏரேமியன் மட்டும் வழமைபோல அதே கோலத்தில் வந்திருந்தான் — வகுப்பினுள் பிரவேசித்த கணத்தில் என்றுமில்லாதவாறு கண்டிப்புடன் அவனைப் பார்த்தேன்.

சஞ்சீவி சிறுகதை

''...ஏரேமியன் ஏன் வெள்ளைச் சேட்டோடை வரேல்லை,, எத்தனை நாள் உமக்குச் சொல்லுறது'' சற்று அதட்டலான தொனியில் கேட்டேன்.

அதே வார்த்தைகளை ஒப்புவித்தபடி தயங்கி நின்றான் அவன்.

அவனைத் தண்டிக்க வேண்டும் போல மனம் கறுவிக்கொண்டது. மேசையில் கிடந்த தடியால் வீசி வீசி நன்றாக அடித்துவிட்டேன். போதாததற்கு மேசைமேல் ஏற்றியும் விட்டேன்.

அவனும் எல்லாப் பிள்ளைகளையும் பார்த்தபடி வெட்கத்தோடு மேசைமீது நின்றான்.

அவனது கிழிசல் விழுந்த கால் சட்டையிலும், நைந்து வெளிறிப்போன பச்சை நிறச் சேட்டிலும் தாறுமாறாக உருட்டித் தைக்கப்பட்டிருந்த தையல்கள், தழும்புகள் போல் துருத்தியபடி காட்சி தந்தன. அது எல்லாக் கண்களுக்கும் தெளிவாகத் தெரிந்தது. சக மாணவர்கள் ஒருவரை ஒருவர் கண்களால் பேசி நமட்டுச் சிரிப்பை உமிழ்ந்தார்கள்.

''அம்மா தையல் கடையிலை குடுத்திருக்கிறா சேர். அவங்கள் இன்னும் தைக்கேல்லையாம் சேர்...''

வழமையாக மனப்பாடம் பண்ணிக் கூறும் வார்த்தைகள் அவை. அந்தச் சமாதானம் இன்று எடுபடவில்லை என்பதும், எல்லாவற்றுக்கும் சேர்த்து அடி வாங்கிய அவமானம் வேறு தாளமுடியாமல் வெதும்பி நின்றான்.

அந்த வகுப்பில் எனக்கு சமூகக்கல்விப் பாடம். மனிதனின் அடிப்படைத் தேவைகள் — உடையும் உறையுளும் என்ற அலகு. பாடத்தை சிறு சிறு அலகாகப் பிரித்து விளங்க வைத்துவிட்டுக் கேள்விகள் கேட்டேன்.

மனிதருக்கு உடையின் அவசியம், நாம் அணியும் உடைகள், புடைவைகள் தயாரிக்கப் பயன்படும் நார் வகைகள், எமது நாட்டுக்குப் பொருத்தமான புடைவை வகை, மாணவர் சீருடை பற்றியெல்லாம் ஏன் எவை? எவ்வாறு? எனப்பாடத்தின் கருப்பொருளை சாராம்சப் படுத்திக் கேட்டேன்.

அவற்றுக்கெல்லாம் ஏரேமியனிடம் பதில் இருந்தது. ஆனால் அவன் வாய்மூடி மௌனியாக நின்றான்.

நாலாம் பாடம் முடிவடைந்ததைக் கோடி காட்டி மணி அடித்தது. ஏரேமியனுடன் பேசவேண்டும் போலிருந்தது. அவனை அருகில் அழைத்தேன்.

''ஏரேமியன்... அப்பா என்ன வேலை செய்கிறார்...?'' எனக்கேட்டேன்.

''...அப்பா... அப்பா... இல்லை சேர்...''

''...ஏன் ...? உம்மடை அப்பா எங்கை?...''

''...செத்துப் போனார்... இஞ்சையிருந்து இடம் பேந்து போய் நாச்சிக்குடாக் கடற்கரையிலை இருந்தனாங்கள். அங்கை 'கிபிர்' அடிச்சு அப்பாவும் தங்கச்சியும் செத்துப்போச்சினம்...''

இதைக் கூறும் போது அவன் முகத்தில் சோகம் படிந்திருந்தது.

',...அப்ப நீ ...?''

''...நான் அம்மாவோடை காட்டுக்கை விறகுவெட்டப் போன நேரம் நடந்தது...''

''...அம்மா இப்ப என்ன செய்யிறா...?''

''... அவ இப்ப கொட்டடிச் சந்தையிலை மீன்விக்கிறா''

அவன் மீது பரிவு ஏற்பட்டது காட்டிக் கொள்ளாமல் கேட்டேன்.

''பள்ளிக் கூடத்திலை தந்த சீருடை எங்கை?''

அவன் பதில்தரத் தயக்கம் காட்டுவது தெரிந்தது. தயங்கி நின்று என்னைப் பார்த்தான்.

'' ... ஏரேமியன் ... சேரிட்டை உண்மைசொல்லோணும் தெரியும் தானே...?''

உண்மையை அறியும் ஆவல் என்னிடம் தீவிரம் கொண்டது.

''... சேர் ... அதை அம்மா ஒருத்தருக்கும் சொல்லக் கூடாது எண்டவ சேர்...''

''நீ ... எனக்குப் பயப்பிடாமல் சொல்லு...''

''...சேர் ... அம்மா மீன் யாவாரக் காசிலை புதிசா எடுத்துத்தாரன் எண்டவ...''

**-மு. அநாதரட்சகன்-**

அவன் எதையோ மறைக்க முற்படுவது தெரிந்தது.

''அப்ப நாங்கள் தந்த சீருடை...''?

நீண்ட நேரம் மௌனித்துவிட்டு ''அதை அம்மா றோஸ்மேரி அக்கா வீட்டிலை வித்துப் போட்டா சேர் ... தம்பிக்கு மருந்துக்கு காசில்லை எண்டு...''

ஏரேமியன் பயத்தினால் அழுது கொண்டிருந்தான். நான் அவனைத் தேற்றுமாப்போல் நடந்து கொண்டேன்.

அந்த வேளையில் அவனது முகம் ஏழ்மையின் சோகங்கள், அவமானங்கள், அலைக்கழிப்புகளையெல்லாம் சுமந்து நிற்பதைத் துல்லியமாகக் காட்டியது.

அது என்னையும் பாதித்துவிட்டது. அவன்மேல் கோபம் கொள்வதற்கு காரணமற்றிருந்தேன். அவனுக்கு உதவவேண்டுமென மனதால் உந்தப்பட்டேன்.

வகுப்பில் அத்தனைபேர் முன்னிலையில் அவனது ஏழ்மையைப் பகிரங்கப்படுத்திய குற்ற உணர்வு என்னுள் விகசித்தது. என்னையே நன்றாக நொந்துகொண்டேன். அதற்குமேல் தொடர்ந்தும் பாடசாலையில் இருக்கவிரும்பாமல் அதிபரிடம் அரை நாள் விடுகை பெற்று வெளியே வந்தேன். ★

## நாளைக்காக....

எத்தனையோ ஆண்டின் பின்
எழ இருக்கும் மரணத்தின்
ஒத்திகைதான் உறக்கம் உணர் மைந்தா!
நீ நிலத்தில்
பிறந்த தினந்தொட்டுப்
பிணமாகும் நாள் வரைக்கும்
'இறப்பதற்கே பயிற்சி' இருக்குதெனில்......
நீ வாழ்வில்
சிறக்க முயற்சியெதுவுஞ் செய்யாமல்
நிதமொடுங்கி இருப்பது சரியாடா?
எதிர்காலம் புஷ்ப்பிக்க....
எருவிடவும் பஞ்சியோடா?
நாளைக்காய்...இன்றைக்கே
வரங்கேட்டல் உனது கடனாகும்;
துயர்வனத்தின்
வருங்காலம் வரவோர் வழிசெய்,
மண் உனைவாழ்த்தும்.

- அருணன்.

## நினைத்துப் பார்க்கிறேன்

நினைத்துப் பார்க்கிறேன்
நான் நினைத்துப் பார்க்கிறேன்.
என் நெஞ்சைவிட்டகலாத அந்தப் பிஞ்சுப் பருவமதை
நான் நினைத்துப் பார்க்கிறேன்,

எட்டாந்திருவிழாவில் அன்று எத்தனை நிகழ்ச்சிகள்!
ஆலயவளவெங்கும் அலங்கார தோரணங்கள்.
அங்கிங்கெனாதபடி மணிமாலைக் குஞ்சங்கள்.
பார்க்கும் இடமெங்கும் பகல்போல 'ரியூப்லைட்கள்'.
பக்கத்துக் கடைகளிலே பலகார தோசை மணம்.
முருகேசு அம்மானின் கைவண்ணச் சிகரங்கள்.
அதில் முடியிருந்து அடிவரை பலவர்ண மின்குமிழ்கள்.
வான்வெளியை அதிரவைக்கும் வாணவெடி வேடிக்கை.
எம்பெருமான் முன்றிலில்.

ஓர் 'றொட்டேற்றிங்' சுழல் மேடை;
பட்டாடை இடையுடுத்தி பசட்டாகச் செயின் அணிந்து
பகல்போன்ற மின்னொளியில்
பாஸ்கரன் குழலூத பசுபதி ஒத்தூத
பரந்தாமன் புதல்வர்கள் பண்ணோடு தவில் மீட்ட
எட்டுமுழ மேடையின்முன் எடுப்பாக நானிருந்து
விழிப்பாக ரசித்திருப்பேன்.
கொட்டாவி வீட்டாலும்
குறட்டை விட்டுத் தூங்கமாட்டேன்.
தப்பான தாளத்துக்குத் தலைமீது குட்டு வாங்கி
தம்பியவன் துடித்திடுவான், நங்கையர்கள்
நகைத்திடுவர்.
கச்சான் கோதுகளால் ஆளுக்காள் எறிபாடு.
கருத்துமோதல் முத்திவிட்டால் கடைசியில் கைகலப்பு.

''அடுத்த நிகழ்ச்சியாக இப்பொழுது சின்னமேளம்''
ஆறுமுகம் அண்ணன் அமர்க்களமாய் அறிவிப்பார்.
மிடுக்காகச் செருமிவிட்டு
எடுப்பான் மணியம் ஒரு பக்திகீதம்.
படுத்துக்கிடந்தவர்கள் பதறிப்போய் எழுந்திருப்பர்.
அடுத்தடுத்துப் பழையபாடல் அசத்தித் தீர்த்திடுவான்.
இளைஞர்கள் மத்தியில் திடீரென்றோர் விசில்மாரி.
குலுக்கி மினுக்கிக்கொண்டு குமரிகள் இரண்டு பேர்
குடுகுடு நடைநடந்து மேடையில் வந்து நிற்பர்.
தளுக்குப் புளுக்கென்று தாண்டவம் ஆடிடுவர்.
தில்லானா மோகனாம்பாள் திறம்பட ஒப்பிப்பர்.
கொஞ்சுஞ்சதங்கை காதில் கொஞ்சி விளையாடும்.
பார்வையாளர் மத்தியில் திடீரென்றோர் பரபரப்பு.
''கந்தையாப் பரியாரி வீட்டிலை கள்ளனாம்''
அட, திருவிழாப் பிராக்கிலை திருடர்கள் கைவரிசை.
பார்வையாளர் மத்தியில் மீண்டும் ஓர் பரபரப்பு
''கண்ணன் இசைக்குழுவின் கார் வந்து நிற்குதாம்.''

''அடுத்த நிகழ்ச்சியாக கண்ணன் இசைக்குழு''
ஆறுமுகம் அண்ணனின் அடுத்த அறிவிப்பு.
கிற்றாரிஸ்ட் அன்டனியின் கிணுகிணுப்புத்
துயிலெழுப்பும்.
ட்றம்மர் மகேந்திரனின் டமார அடி தூள் கிளப்பும்.
ஃபுளூட்டிஸ்ட் பூபாலின் பூபாளம் தாலாட்டும்.
கண்ணன் அண்ணனின் எக்கோடியன் எதிரொலிக்கும்.
றொபேட்டின் டோல்கி டொங் டொம்
இசையெழுப்பும்.
வடிவேலின் தபேலா அனைத்தையும் மிஞ்சி நிற்கும்.
அமுதன் அண்ணாமலையின் ஆனந்தக் குரலொலியில்
பழைய புதிய தமிழ்ப்பாடல் புல்லரிக்கும்; பொப் இசை
அணைகடந்த வெள்ளமென ஆர்ப்பரித்துப்
பாய்ந்தோடும்.
தற்காலக் கொம்பியூட்டர் நுட்பங்கள் எதுவுமற்ற
கற்கால வாத்தியங்கள்.
எனினும் கானமோ அமுதமழை.
ஐந்துமணியானாலும் அசையாது ரசித்திருப்பேன்.
அன்று துப்பாக்கி வேட்டில்லை; தூரவீச்சுக்
கணையில்லை;
சுதந்திரமாய் திரிவதற்கு தடைபோடும் சட்டமில்லை.
எனவே நான், ஐந்துமணியானாலும் அசையாது
ரசித்திருப்பேன்.
அடுத்தநாள் பள்ளிக்கு அரோகரா போட்டிடுவேன்.
இன்று ஊரடங்கிப் போய்விட்ட ஊரடங்கு வேளையில்
ஊருறங்கும் நடுநிசியில்
நான் நினைத்துப் பார்க்கிறேன்.
என் நெஞ்சைவிட்டகலாத அந்தப் பிஞ்சுப் பருவமதை
நான் நினைத்துப் பார்க்கிறேன்.........

- வதிரி மண் வாசன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தால் ஏற்படும் அழிவுகள் பலவிதம்.

சில அழிவுகள் யுத்த காலத்தில் மட்டும் — நேரடி யுத்தத்தின் விளைவால் — ஏற்படும்.

சில வகை அழிவுகள், யுத்தம் முடிவுற்ற பின்னரும் தொடர்ந்துகொண்டேயிருக்கும்.

யுத்தம் முடிவுற்ற பின்னரும் அழிவு — நாசம் — போன்றவற்றைத் தரும் மிகக் கொடிய சாதனங்களுள் முக்கியமானவை மிதிவெடிகள்.

யாரோ, எப்போதோ தயாரித்து, வேறு யாருக்காகவோ, வேறு எப்போதோ புதைத்த மிதிவெடி அதில் சம்பந்தப்படாத வேறு ஒருவருக்கு வேறு ஏதோ ஒரு காலத்தில் வினையாவதுதான் இதனால் ஏற்படும் பரிதாபமும்.

### மறைந்திருக்கும் முடமாக்கிகள்

மனித குலத்தை நாசம் செய்ய வைத்திருக்கும் இத்தகைய மிதிவெடிகளை 'மறைந்திருக்கும் முடமாக்கிகள்' என்று கூறுவது பொருத்தமானதாகும்.

ஆயுதப் போர் வெடிக்கும் இடமெல்லாம் இலகுவாகப் பயன்படுத்தப்பட்டு பேரழிவைத் தரும் எளிய சாதனமாகவும் இது திகழ்கின்றது.

இன்று உலகில் 64 நாடுகளில் 11 கோடி மிதி வெடிகள் புதைக்கப்பட்டிருக்கின்றன.

அதாவது 11 கோடி மக்களின் உயிர்களைப் பறிக்க அல்லது பாதங்களை முடமாக்க நிலத்துக்குக் கீழ் எந்நேரமும் கருவிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இது தவிர இன்னும் பத்துக்கோடி மிதிவெடிகள் உலகில் யுத்தம் நடைபெறும் நாடுகள், ஆயுதத் தயாரிப்பு நிறுவனங்கள், ஆயுத வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றின் கையிருப்பிலும் களஞ்சியங்களிலும் புதைக்கப்படுவதற்குத் தயாராகக் காத்திருக்கின்றன.

### வாராந்தம் 200 பேர் பலி

இந்த மிதிவெடிகளின் அனர்த்தத்தால் உலகில் வாராந்தம் 150 முதல் 200 பேர் முடமாகிக்கொண்டிருக்கின்றார்கள்; அல்லது உயிரிழந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதுதான் மிக வேதனையான விடயம்.

இவ்வாறு உயிரிழப்பவர்களில் முப்பது சதவீதத்தினர் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் என்பது மற்றொரு அதிர்ச்சித் தகவலாகும்.

மிதிவெடிகள் மிகவும் மூர்க்கமானவை; நீண்ட காலம் காத்திருந்திருந்து வஞ்சிக்கக் கூடியவை.

உலகில் ஏனைய யுத்த ஆயுதங்களுக்குச் செலவிடும் பணத்துடன் ஒப்பிடுகையில் மிதிவெடிகள் மிக மிகக் குறைந்த செலவில் தயாரிக்கப்படுபவை.

உள்ளூரிலே சுமார் 250 ரூபாவுக்குட்பட்ட செலவில் அவற்றைத் தயாரித்து விட முடியும். இவ்வாறு தயாரிப்புச் செலவு குறைவு என்பதால் தாராளமாகத் தயாரிக்கப்பட்டு யுத்தப் பிரதேசத்தில் வகைதொகையின்றி அவை விதைக்கப்படுகின்றன.


மிதிவெடிகளை எடுத்துச் செல்வதும், அவற்றை விதைப்பதும் வரையான பணி — சற்றுக் கவனம் இருந்தால் — மிக எளிதானது. இந்தப் பண்பும் மிதிவெடிகள் தாராளமாக விதைக்கப்படுவதற்கு உதவுகின்றன.

### சதா கணமும் தயார் நிலையில்!

அது தவிர, மிதிவெடிகள் ஒரு தடவை விதைக்கப்பட்டால் அவை இலகுவில் பழுதடைவதோ, செயலிழப்பதோ, பலவீனமடைவதோ இல்லை.

அதேசமயம், இரவு — பகல் என்று பாராமல் எந்நேரமும் — சதா கணமும் — அவை தமது மூர்க்கத்தைக் காட்டுவதற்குத் தயாராக மிக மிக விழிப்புடன் — உஷார் நிலையில் — காத்திருக்கின்றன; ஒரு கண உசுப்பலுடன் — பெரும்பாலும் எந்தத் தவறுமின்றி — உடனே மூர்க்கமாக வெடித்து — தனது பணியைச் (அழிவைச்) செய்வதற்கு அவை தயாராகக் காத்திருக்கின்றன.


## மிதிவெடிகளின் வகைகள்



மிதிவெடி



ஜொனி வெடி



புதைக்கப்பட்ட மிதிவெடி



புதைக்கப்பட்ட ஜொனி வெடி

யுத்தத்தில் ஈடுபடுவோர் மிதிவெடிகளை விரும்பிப் புதைப்பதற்கு இது மற்றோர் முக்கியமான காரணமாகும்.

தமது பாதுகாப்புக்காகவோ தமது பிரதேசத்தின் பாதுகாப்புச்காகவோ அல்லது எதிரிகளுக்கு இழப்பை ஏற்படுத்துவதற்காகவே மிதிவெடிகளை யுத்தத்தில் ஈடுபடுவோர் பரவலாக விதைக்கின்றார்கள்.

கொடிய யுத்தத்தின் நடுவே — சில, பல சமயங்களில் மிகமிக அவசரமாக — நெருக்கடிகளுக்கு மத்தியில் — அவை விதைக்கப்படுவதால், அவை புதைக்கப்படும் பிரதேசம், இடம் என்பன குறித்து அனேகமாக தரவு ஏதும் பதியப்படுவதில்லை; பேணப்படுவதில்லை.

இதுவே, மிதிவெடிகள் உலகில் பேரனர்த்தத்தை ஏற்படுத்த முக்கிய காரணமாகுகின்றன.

என்று புதைக்கப்பட்டு, உருமறைப்புச் செய்யப்படுகின்றதோ அன்று முதல் மிதிவெடிகள் கொடூரத்துடன் வஞ்சிக்க பார்த்திருக்கின்றன; நேரத்துக்குக் காத்திருக்கின்றன.

### யுத்தம் ஓய்ந்தாலும் மிதிவெடி ஓயாது

யுத்தங்களும் அவற்றுக்குக் காரணமான கருத்து வேறுபாடுகளும் தீர்க்கப்படலாம்; சமாதான ஒப்பந்தங்கள் உருவாகலாம்; யுத்தங்கள் தம்முடைய பாட்டிலே கைவிடப்படலாம்; ஓய்ந்து போகலாம். ஆனால் விதைக்கப்பட்ட மிதிவெடிகள் ஓய்ந்துபோய் விடுவதில்லை. அவற்றை சமாதான ஒப்பந்தங்கள் மூலம் செயலிழக்கச்செய்ய முடியாது. போர் ஓய்ந்த பின்னரும் — பல ஆண்டுகள் கழிந்த பின்னரும் — தனக்கு முடுக்கப்பட்ட அழிவு, நாச வேலையை அல்லது இலக்கைப் பூரணப்படுத்துவதற்கு அவை விழிப்புடன் காத்திருக்கின்றன.

### விதைப்பது இலகு அழிப்பது கஷ்டம்

மிதிவெடிகளை விதைப்பது சுலபம் என்று பார்த்தோம். ஆனால் அவை விதைக்கப்பட்டது பற்றி பூரண விவரம் (track) சரியாகப் பேணப்படாததால், அவற்றின் தேவை இல்லாமல் போகும்போது அவையனைத்தையும் தேடிக் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்வது இயலாமல் போகின்றது; அல்லது அது மிகவும் கஷ்டமான — செலவான — காரியமாகுகின்றது.

ஒவ்வொன்றும் சுமார் 250 ரூபாவுக்கும் உட்பட்ட தொகையில் தயாரிக்கப்பட்டு விதைக்கப்பட்ட மிதிவெடிகளை, போர் ஓய்ந்த பின்னர் தேடி அழிப்பதற்கு ஒவ்வொன்றுக்கும் 15 ஆயிரம் ரூபாமுதல்ஐம்பதாயிரம் ரூபாவரை செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது.

அது தவிர, புதைப்பதற்கு மிக இலகுவான மிதிவெடிகளை அகற்றுவது அல்லது செயலிழக்கச் செய்வது மிக ஆபத்தானதும் மிக அவதானத்துடனும் செய்ய வேண்டிய பணியாகுகின்றது.

யுத்தத்தில் ஈடுபடும் சாதாரண துருப்பினால் மிதிவெடிகளை மிக எளிதாக — பரந்த ஒரு பிரதேசத்தில் — விதைத்து விட முடியும். ஆனால் அவற்றைச் செயலிழக்கச் செய்வதற்கு நன்கு பயிற்சி பெற்ற — நிபுணத்துவம் மிக்க — வெடிப்பொருளைக் கையாளும் திறமை பெற்றவர் தேவைப்படுகின்றார். அத்தோடு அது உயிரைக் காவுகொள்ளக் கூடிய — 'கரணம் தப்பினால் மரணம்' போன்ற — ஒரு கஷ்டமான பணியும்கூட.

இக்காரணத்தினாலும் அதிக செலவு ஏற்படும் என்பதினாலுமே உலகில் அநேக இடங்களில் விதைக்கப்பட்ட மிதிவெடிகள் அகற்றப்படாமல் — அதற்குரிய முயற்சிகள் எடுக்கப்படாமல் — கைவிடப்பட்டிருக்கின்றன.

### வரலாறு

பண்டைய காலத்தில் ரோமானியர்கள் எதிரியின் குதிரைப் படைக்கு தொல்லையளிக்கும் விதத்தில் அவை செல்லக்கூடிய பாதைகளில் ஈட்டி போன்ற முனைகளையுடைய உலக கோளப் பந்துகளைப் புதைத்து வைத்தனர். இத்தகைய முயற்சியியே பின்னர் மிதிவெடித் தந்திரமாகப் பரிணமித்தது என்று கூறலாம்.

முதலாம் உலகப்போரின் போது இந்த முயற்சியில் வெடிவிசை சேர்க்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போரின்போதே இவை பரந்தளவில் பாவிக்கப்படத் தொடங்கின.

அவ்வேளை எகிப்தில் விதைக்கப்பட்ட வெடிப்பொருள்கள் இன்னமும் அகற்றப்படாது அப்பிரதேசங்கள் 'பிசாசின் வயல் களாக' இன்றும் விளங்கி, அழிவையும் அச்சத்தையும் தந்துகொண்டிருக்கின்றன.

### இங்கு நிலைமை

இன்று அவை எமது வாசலில் — முற்றத்தில் — சிறுவர்கள் விளையாடும் மைதானங்களில் — நெல் விளையும் வயல்களில் — எமது சமூகத்துக்கு அழிவைத் தருவதற்காக ஆயிரக்கணக்கில் காத்துக்கிடக்கின்றன.

எமது தாயகத்தின் எவ்வளவு பிரதேசம் தொடர்ந்து 'பிசாசின் வயல் களாக' பேணடப்படப் போகின்றன? இதைப்பற்றி நாம் எப்போது சிந்திக்கப் போகின்றோம்? மிதிவெடி அரக்கனிலிருந்து எமது நாடுகளின்வரிசையில் இலங்கையும் — முக்கியமாக உள்நாட்டுப் போரினால் உருக்குலைந்துள்ள வட கிழக்கு மாகாணமும் மிதி வெடிகளினால் பாதிக்கப்பட்டுள்ளன.

உலகில் பல நாடுகளிலும் பயன்படுத்தப்படும் கண்ணி வெடி வகைகளில் தனி மனிதனுக்கு எதிராகப் பாவிக்கப்படும் மிதிவெடிகளே மிக அதிகமானவை. இவை முன்னேற்றமடைந்த முதலாம் உலக நாடுகளால் உற்பத்தி செய்யப்பட்டு ஆயுத சந்தையில் இலங்கை போன்ற முன்னேற்றமடைந்து வரும்

ஜூலை ஆகிய மூன்று ...
களில் மட்டும் மிதி ...
சம்பவங்களினால் பா...
பட்டு 15 பேர் ...
போதனா வைத்திய...
யில் அனுமதிக்கப்பட்...
அவர்களில் 12 பேரி...
கள் முழங்காலுக்கு...
அகற்றப்பட்டன.
வருக்கு என்பு மு...
கூடிய காயங்கள் ...
டன; ஒருவரின் இட...
யின் பெரு விரல் ...
பட்டதுடன் ...கண்...
பாதிக்கப்பட்டன.

ஒரு தடவை போ...
வைத்தியசாலையில் ...
சிகிச்சை விடுதியில் ...

# மிதிவெ...

## புதைந்து கிடக்கும் மு...

சமூகத்தைக் காப்பாற்ற — திட்டமிடப்பட்ட — ஒருங்கமைக்கப்பட்ட என்ன கூட்டு முயற்சியை நாம் இதுவரை எடுத்திருக்கின்றோம்?

### பொதுமக்கள் பாதிப்பு

தற்போது ஆபிரிக்காவில் அங்கோலா, மொஸாம்பிக், சோமாலியா ஆகிய நாடுகள் மிதிவெடிகளினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.


ஆசியாவில் ஆப்கானிஸ்தான், கம்போடியா ஆகிய மூன்றாம் உலக நாடுகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. பின்னர் மூன்றாம் உலக நாடுகளில் எமது பிரதேசங்களில் உள்ளது போன்ற போர் முனைகளில் இவை கண்மூடித்தனமாக பாவிக்கப்படும்போது அவை பொது மக்களைப் பெரிதும் பாதிக்கின்றன.

இது மிகவும் கவலைக் குரியதும், கவனத்திற்குரியதுமான விடயமாகும். மிதிவெடியின் ஒவ்வொருவெடிப்பும் ஒரு தனி மனிதனதும் அவன் சார்ந்த சமுதாயத்தினதும், தேசத்தினதும் சாதாரண வாழ்விலும் வளர்ச்சியிலும் பெரும் பாதிப்புக்களையும் பின்னடைவுகளையும் ஏற்படுத்துகின்றன என்பது முக்கியமானதாகும்.

## வெடிக்கும் பொருள்கள்




அருள் ஷெல்




கைக்குண்டு



கடற்கண்ணி



மோட்டார் ஷெல்



ஆட்லறி ஷெல்

### டாக்டரின் ஆய்வு

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து தொடர்ந்து 26 மாதங்களுக்கு பலாலி இராணுவ ஆஸ்பத்திரி மற்றும் கொழும்பு, அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய ஆஸ்பத்திரிகளில் கண்ணிவெடியின் பாதிப்பினால் அனுமதிக்கப்பட்ட 213 பேரில் — டாக்டர் காமினிகுணதிலக என்பவர் செய்த ஆய்வுகளின்படி — அனுமதிக்கப் பட்டவர்களில் 191 பேர் (89 வீதமானோர்) தனிநபருக்கு எதிரான மிதிவெடியினால் பாதிக்கப்பட்டவர்களாவர். அவற்றில் 153 பேரின் (எண்பது வீதமானோரின்) கால்கள் வெடிப்பின் காரணமாக அகற்றப்பட்டன.

இதில் முக்கியமான விடயம் என்னவெனில் ஆய்வுக்குட்பட்டவர்களில் பெரும்பான்மையினர் வடக்கு — கிழக்குமாகாணத்தில் போர் முனையில் பாதிக்கப்பட்டவர்களாவர் என்பதும் —

அவர்களில் 80 வீதமானவர்களின் கால்கள் அகற்றப்பட்டு விட்டன என்பதுமாகும்.

### யாழ்ப்பாணத்தில்

அண்மைக் காலத்தில் — அதாவது வலிகாமம் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் — செய்தித் தாளில் வரும் செய்திகளை அவதானிப்பவர்கள் மிதி வெடியின் தாக்கம் பரவலாக எல்லா இடங்களிலும் ஏற்பட்டிருப்பதை அவதானித்திருப்பர்.


எனினும் யாழ்நகரம், நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய் ஆகிய பகுதிகளே கூடுதலாக பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த மே, ஜூன்,

வெடியினால் மட்...
களை இழந்த ஐ...
மேற்பட்டவர்கள் ...
தடுத்தகட்டில்களில்...
பராமரிக்கப்பட்டன...

இத்தரவுகள் எ...
யாழ். ஆஸ்பத்...
சிகிச்சை பெறவந்த...
மட்டும் பெறப்ப...
யாழ்.ஆஸ்பத்திரிக்...
வர்கள் என்தனை...
வெடியின் தாக்க...
அந்த இடத்திலே...
யானவர்கள் ...
பேர்?

இந்ததகவல்கள் ...
எவருக்கும் இன்னும்...
யாகத் தெரியாது...
றைப் பற்றி சிந்திப்...
யார்? இவை எல்...
களின் குறைவா...
ஈர்ப்புடன் மெதுவ...
துன்பியல் நாடக...
கேறியது போல மே...
கின்றன.



### கைவிடப்பட்... ரண்கள் பே... வெடிகள் அதி...

இந் நிலை இ...
தொடருமானால், ...
லாவில் கால்களை ...
பின்பு பிச்சைப் ...
துடன் நிற்பவ...
போல்கணிசமான ...
கையினர் எமது ...
லும் உருவாக்கப்ப...
என்பது மட்டும் ...

### தோற்றம்

மிதிவெடிகள் ச...
மாகப் பார்க்கும் ...
தீங்கற்ற — எளிமை...
டப்பி போன்ற —...
கக் காட்சி தருகின்...

அனேகமாக உ...
யில் அடக்கக் கூடி...
டமான — தட்...
தோற்றம் கொ...
அவை. உலோக ...
பிளாஸ்டிக் மூ...
மூடப்பட்டவையாக...
கும்.

உள்ளூரில் கி...
மூலப் பொருள் ...
கொண்டு பெட்டி...
வத்தில் மரமூடியுட...
இவை தயாரிக்...
வதுண்டு. 'ஜொ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...கிய மூன்றுமாதங்
...டும் மிதி வெடிச்
...ினால் பாதிக்கப்
... பேர் யாழ்.
... வைத்தியசாலை
...மதிக்கப்பட்டனர்.
... 12 பேரின் கால்
...ங்காலுக்குக் கீழ்
...ட்டன. இரு
...ன்பு முறிவுடன்
...யங்கள் ஏற்பட்
...ரின் இடது கை
... விரல் ... அகற்றப்
...ன் ... கண் களும்
...ட்டன.
...வை போதனா
...ாலையில் சத்திர
... விடுதியில் மிதி

வெடிகள்' இதற்கு உதாரணமாகும்.

## வெடிப்பின் வகையும் பாதிப்பும்

நிலத்திற்குக் கீழே மூடப்பட்டு அல்லது உருமறைப்புச் செய்யப்பட்டுக் காத்திருக்கும் இந்த மிதிவெடிகள், எங்கேயிருக்கின்றன அல்லது எப்படி இருக்கின்றன என்பது பொது மக்களுக்கு சாதாரணமாக தெரியாது.

ஆனால் அவை கால,நேர, பால், வயது வேறுபாடுகளின்றி எந்த இடத்திலும் கால்களை காவு கொள்கின்றன.

தகுந்த அமுக்கம் கொடுக்கப்படுகையில் வெடித்து கால்களை அல்லது உடலைப் பிய்த்து எறிந்து விடுகின்றன மிதி வெடிகள்.

அவைஏற்படுத்தும் பாதிப்புகளின் அடிப்படையின் அவற்றின் வெடிப்பை மூன்று வகைப்படுத்தலாம்.

1. நேரடியாக மிதித்தல்
2. அருகில் நிற்கையில் மற்றொருவரால் மிதிக்கப்படல்.
3. கையினால் ஆராயும் போது வெடித்தல்.

### 1.நேரடியாக மிதித்தல்

சாதாரணமாக நடந்து செல்லும் ஒருவர் நிலத்தில் புதையுண்டு காணப்படும் மிதிவெடியின் மீது தனது காலை வைக்கும்போது அதன்மீது தகுந்த அமுக்கம் பிரயோகிக்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து அது வெடித்து அவனது காலை பிய்த்து எறிகிறது. பொதுவாக இந்த வகையான வெடித்தல்களே கூடுதலாக அவதானிக்கப்பட்டுள்ளது.

தமது விவசாய நிலங்களில் வேலை செய்யும் விவசாயிகளும், விறகு பொறுக்கச் செல்பவர்களுமே கூடுதலாக இவ்வகையில் பாதிக்கப்படுகிறார்கள்.

அப்பிரதேசத்தில் மிதிவெடிகள் தொடர்ச்சியாகப்புதைக்கப்பட்டிருக்கப்படுமானால் பாதிக்கப்பட்டவர் மற்றைய காலை வைக்கும் வேளையில், அல்லது அவர் நிலத்தில் விழும் போது தொடராக இருக்கும் ஏனைய மிதிவெடிகள் வெடித்து மேலும் பாதிப்புக்களை ஏற்படுத்தாம்.

நேரடி அமுக்க வெடிப்பின்போது மிதிவெடிகள், வேறுபட்ட அளவுகளில் கால்களைப் பதம்பார்க்கின்றன. இது காலின் எந்தப் பகுதி மிதிவெடியுடன் தொடர்பாக இருந்தது என்பதிலும், மிதிவெடியின் உக்கிரத் தன்மையிலும் தங்கியுள்ளது.

பொதுவாக இவ்வகையான வெடித்தல்களின் போது கால்களில் மட்டுமன்றி ஜனன உறுப்பு, பிட்டம் போன்றவற்றிலும் கூட காயங்கள் ஏற்படுகின்றன.

1990 இல் டாக்டர் காமினி குலதிலக மிதிவெடிகளினால் கால் அகற்றப்பட்டவர்களில் செய்த ஆய்வுகளின்போது வெடிப்புகளினால் ஏற்பட்ட சேதம் குறித்து கிடைத்த புள்ளி விவரங்கள் வருமாறு:-

அ) விரல்கள் வெடித்துச் சிதறியோர் — 3.9 வீதத்தினர்

ஆ) நடுப்பாதத்துடன் வெடித்துச் சிதறியோர் — 22.3 வீதம்

இ) குதியுடன் வெடித்துச் சிதறியோர் — 15.7 வீதத்தினர்

ஈ) குதிக்கு மேலாக முழுப் பாதமும் துண்டாட வெடித்துச் சிதறியோர் — 58.1 வீதத்தினர்

### 2. அருகில்நிற்கையில் மிதிக்கப்படல்

அருகில் இடம்பெறும் வேறு தூண்டல்களால்அங்கு வெடிக்கும் மிதிவெடிக்கு சற்றுத் தள்ளி நிற்பவர் பாதிக்கப்படலாம்.

ஆடு, மாடுகள் போன்றவை மிதிவெடிகளை மிதிக்கும் போது —

அல்லது யாரேனும் மிதிவெடிகளைத் தூக்கி வீசும் போது —

அல்லது மிதிவெடிகள் உள்ள பகுதி மீது கற்கள் மற்றும் பொருள்களை தூக்கி வீசும் போது —

அவை வெடித்து அருகில் நிற்பவரின் உடலில் எழுந்தமானமாக காயங்களை ஏர்படுத்தலாம். பொதுவாக ஆடு, மாடு மேய்ப்பவர்கள் இவ்வகையில் பாதிக்கப்படுகின்றார்கள்.

### 3. கைகளால் ஆராயும்போது வெடித்தல்

விவரம் புரியாமல் சிறு பிள்ளைகள் — ஏன் சில சமயங்களில் — பெரியவர்களும் கூட — மிதிவெடிகளை கைகளில் வைத்து ஆராயும்போது அல்லது அவற்றை கற்களால் குத்தும்போது அவை வெடித்துச் சிதறுகின்றன. இத்த கையசந்தர்ப்பங்களில் முகத்திலும் நெஞ்சுப் புறத்திலும் சிதறல் காயங்கள் ஏற்படுவதுடன், கண்களும் காவு கொள்ளப்படுகின்றன.

கடந்த ஜூன்மாதம் யாழ் போதனா ஆஸ்பத்திரியில் புத்தூரைச் சேர்ந்த கல்லுடைக்கும் தொழிலாளி ஒருவர் மிதிவெடிச் சம்பவத்தின் பின்னர் அனுமதிக்கப்பட்டார். அவர் குந்தியிருந்து கொண்டு கற்களை சுற்றியலினால் உடைத்த சமயம் கல்லின் கீழிருந்த மிதிவெடி வெடித்து சிதறியது. இதனால் அவரது கைகளிலும், முகத்திலும் கண்களிலும் காயங்கள் ஏற்பட்டன. இவ்வாறான வெடிப்புகள் குறைந்த வீதத்தில் ஏற்பட்டாலும் அவையும் மிகப்பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

தேசத்தின் குடிமக்களை அங்கவீனமாக்கி சமூக சமநிலையைப் பாதிப்புற வைப்பதாலும்—

அத்தேசத்தின் விளை நிலங்கள் மற்றும் வள நிலங்களில் பரவிக்கிடந்து அந்த நிலங்களைச் சரிவரப் பயன்படுத்த முடியாதுஅச்சுறுத்தி வருவதாலும்—

மிதி வெடிகளுக்காகவும் அவற்றால் ஏற்படும் இழப்புக்களை நிவர்த்தி செய்வதற்கான உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் வெளிநாடுகளுக்குக் கொட்டிக் கொடுப்பதாலும்—

தனிநபரினதும் தேசத்தினதும் வளர்ச்சியில் மிதிவெடிகள் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்துகின்றன.

ஒரு தேசத்தின் உற்பத்தியில் அல்லது சேவைத் துறையில் பங்களித்த குடும்பத் தலைவன் ஒருவன் மிதிவெடியினால் முடமாக்கப் படும்போது தேசத்திற்கான அவனது உழைப்பு நிறுத்தப்படும் அதேவேளை நாட்டின் வளங்கள் அவனுடைய வைத்திப் பராமரிப்பிற்காகவும், புனர்வாழ்விற்காகவும் அவனை நோக்கித் திருப்பப்படுகின்றன.

தனி மனிதனைப் பொறுத்தவரை 'அங்கவீனம்' என்பது நிச்சயமாக அவனது ஆளுமைமை பாதிக்கின்றது; தன்னுடைய அன்றாட வாழ்வின் ஒவ்வொரு செயற்பாட்டுக்காகவும் அவனை இன்னொருவரிடம் சார்ந்திருக்கச் செய்கிறது; அவனது உற்பத்தித் திறனைக் குறைக்கிறது; உயர் பதவிகளிற்கான சந்தர்ப்பத்தை இழக்கச் செய்கிறது; அதே வேளை தனக்கு ஏற்பட்ட நிலைமையை எண்ணி எண்ணி அவனைச் சொல்லொணாத் துன்பத்தினுள் ஆழ்த்துகின்றது; தொடர்ந்த மன அழுத்தத்திற்கு அவனை உள்ளாக்குகிறது. இதனால் அவனது உள நிலை பாதிக்கப்படுகிறது.

அவனது குடும்பத்தைப் பொறுத்தவரை அவனால் கிடைத்த வருமானம் திடீரென இழக்கப்படுகின்றது; மறுபுறத்தில் அவனது வைத்திய மற்றும் பராமரிப்புத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மேலும் பணம் செலவிட வேண்டிய கட்டாய நிலை குடும்பத்திற்கு ஏற்படுகின்றது. தனது குடும்பத்திற்கே அவன் ஒரு சுமையாக மாறுகின்றான்.

மிதிவெடியின் பாதிப்புக்குள்ளானவர் ஒரு தாயாகவோ அல்லது சிறு பிள்ளையாகவோ இருப்பின் அதன் பாதிப்பு சமூகத்தில் நீண்ட நாள்களுக்குத் தொடர்வதாக இருக்கும்.

ஒரு சமூகத்தின் அடிப்படை அலகாக இருக்கும் — குடும்பத்தின் அச்சாணியாக இருக்கும் — ஒருதாய் பாதிக்கப்பட்டால் அந்த முழுக் குடும்பத்தின் சுக நிலையே பாதிக்கப்படுகிறது. அது அக்குடும்பத்தின் சிறு பிள்ளைகளின் உடல், உள வளர்ச்சியிலும் கல்வி வளர்ச்சியிலும் மறைமுகமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது.


-க. லிங்கநாதன்-
(மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்)

# ...வெடி!

## ... முடமாக்கி!!

...ால் மட்டும் கால்
...ழந்த ஐந்துக்கும்
...வர்கள் அடுத்
...ட்டில்களில் வைத்து
...கப்பட்டனர்.
...வுகள் எல்லாம்
...ஆஸ்பத்திரிக்கு
...பெறவந்தவர்களில்
... பெறப்பட்டவை.
...பத்திரிக்கே வராத
...ன்தனைபேர்? மிதி
... தாக்கத்தினால்
...டத்திலேயே பலி
...கள் எத்தனை

...கவல்கள் ஒன்றும்
... இன்னும்முழுமை
...தெரியாது. இவற்
...றி சிந்திப்பவர்கள்
...றவை எல்லாம் மக்
...குறைவான கவன
... மெதுவாக ஒரு
... நாடகம் அரங்
...போல போய் விடு



...ிடப்பட்ட பதுங்கு குழிகள், காவல
...ா போன்றவற்றுக்கு அருகே மிதி
...ள் அதிகம் காணப்படலாம்.


...லை இவ்வாறே
...ானால், அங்கோ
...ால்களை இழந்த
...ச்சைப் பாத்திரத்
... நிற்பவர்களைப்
...ிசமான எண்ணிக்
... எமது தேசத்தி
...ாக்கப்படுவார்கள்
...மட்டும் நிச்சயம்.

...தோற்றம்

...டிகள் சாதாரண
...ார்க்கும் போது
... — எளிமையான —
...ன்ற —பொருளா
... தருகின்றது.
...மாக உள்ளங்கை
...க்கக் கூடிய — வட்
... — தட்டையான
... கொண்டவை
...லோக அல்லது
... மூடிகளால்
...டவையாக இருக்

...ல் கிடைக்கும்
...ாருள்களைக்
... பெட்டியின் வடி
...ரமூடியுடன் கூட
...பாரிக்கப்படு
... 'ஜொனி மிதி


## மிதிவெடியால் காயமுற்றவருக்கு என்ன செய்ய வேண்டும்?




காலை உயர்த்தி வைத்து முடிக்கட்ட வேண்டும்.



காயமடைந்த பகுதிக்குச் சற்று மேல் நாடாவில் இறுக்குப் போடவும்.



தூக்குக் கட்டிலில் காயமடைந்தவரைப் படுக்க வைக்கவும்.




காயமடைந்தவரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவும்.

## வெடிப்பொருளை கண்டால் என்ன செய்ய வேண்டும்?



மிதிவெடியைக் காண்கிறான் ஆனால் தொட வில்லை.



கிளைஒன்றால் இடத்தை அடை யாளமிடுகிறான்.



உடனே திரும்பிச் செல்கிறான்.



அருகில் உள்ள படை முகாமுக்கு பெரியவருடன் செல்கிறான்.

மிதிவெடியால் சிறு பிள்ளைகள் பாதிக்கப்பட்டால், அவர்களின் உடல் வளர்ச்சியிலும் கல்வி வளர்ச்சியிலும் அது நேர

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறள் வெள்ளம்

பிறவிப் பெருங்கடல் என்றார் புலவர். இப் பிறவிதான் ஒரு பெருங் கடலா? இல்லை ஏழு அல்லது எழுபது பிறவிகள் வந்து கடலாகுமா?

காலத்தை ஓட்டவும், துயர் துன்பங்களோடு எதிர்நீச்சல் போடவும் நாம் படும் பாட்டைப் பார்த்தால் இந்த ஒரு தனிப் பிறவியே பெருங்கடல் ஆகிவிடாதா?

நோய் நொடி கண்டு படுக்கையில் வீழ்ந்து விட்டால் — சாமத்தில் உறக்கம் வராவிட்டால் — அவசர யுகத்தில் 5 நிமிடம் பஸ்தரிப்பில் நின்று விட்டால் — இப்படிப் பல தவிப்புக்களில் நேரம் போவது பெருங்கடலாய், துன்பக்கடலாய் வாழ்வினை வெறுக்க வைப்பதுண்டு.

இக் கடலை நீந்திக் கடந்தவர் — நிம்மதியாய் வாழ்ந்தவர் உண்டா? யார் நீந்துவர்? யார் நீந்தார்?

இறைவன் அடி - இயல்புகளை - சேர்ந்தார் நீந்துவர்; நீந்தார் சேராதார்.

தன். மனதை கட்டி வைத்து, புலன் அடக்கி, இறைவனின் இயல்புகளை ஆராய்ந்து, அவ்வழி நின்று, அவனை மனத்தே இருத்தி விட்டால் — அது கற்பனையோ — கற்சிலையோ — நிஜமோ எதுவானாலும் மனம் சலனமற்ற பாதைக்கு வந்துவிடும்.

நிஜமான இறை உணர்வும், மனச்சாட்சி உடைய வாழ்வும் ஓடம்போல் கைகொடுக்க வாழ்க்கைப் பிறவிதனை நிம்மதியாக நீந்திக் கரைசேரலாம்.

போட்டிக்கு கோவில்கட்டி — எடுப்புக்கு விழா எடுத்து— ஊரை ஏமாற்றி — மனத்தே ஆசைகளை நிறைத்தும் வளர்த்தும் சித்தத்தைச் சிதறடித்தால் பிறவிக் கடலில் தத்தளிப்பே தொடரும்!

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் — நீந்தார் இறைவன் அடிசேரா தார்.**

என்றார் வள்ளுவர்.

—0010

(கடவுள் வாழ்த்து)

- அம்பிகைபாகன்

# இந்த வார இராசி பலன்

## (23 - 08 - 1997 முதல் 29 - 08 - 1997 வரை)

| | | | |
|---|---|---|---|
| சனி | சந் | | |
| கே | இராசிச் சக்கரம் | | புத |
| வி | | | * சூ ரா |
| | | செ | வெ |

மாற்றம்:
மேடம்- சந்திரன்

இலங்கை, இந்திய அரசியலில் பேச்சு வார்த்தைகள் தலை தூக்கும். மேற்குலகத் தலையீடுகள் ஓரளவு மாற்றங்களைக் கொடுக்கும். மெல்ல மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் உருட்டிப் பாயும் என்பது போல செயற்பாடுகள் அரசியலில் ஏற்படும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

**மேடம்:** உங்களுக்கு துணிவே துணை. இந்த உலகில் எதற்கும் அஞ்சாது தெய்வ பக்தி கொண்டு செயற்படப் பழகிக்கொள்ளல் வேண்டும். விரோதிகள் எனப் பயப்பட வேண்டாம். வீட்டில் எதிர்பாலாருடன் அடிக்கடி அபிப்பிராயபேதம் ஏற்பட்டபடி இருக்கும். நாட்டில் பயம்— வீட்டில் பயம் என அஞ்சாது, செயற்படப்பழகிக்கொள்ளவும். உங்கள் துணிவே உங்களுக்குத் துணையாகும். வீட்டுச் செலவுகளைக் கட்டுப்படுத்தி வரவும். வயிறு. கண் ஆகியவற்றுடன் இரத்தத் தாக்கங்கள் சிலவேளை ஏற்பட இடம் உண்டு. நண்பர்களால் நஷ்ட, கஷ்டங்கள் ஏற்படத்தான் செய்யும் சமாளித்துக் கொள்ளுங்கள். உறவினரின் கலகலப்பு, கொண்டாட்டங்கள் இடைக்கிடை ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் நிதானமாகச் செயற்படவும்.

**இடபம்:** நீங்கள் ஓர் உழைப்பாளி. எதற்கும் போராடிப், போராடிப் பெறச் சிந்திப்பீர்களே ஒழிய மற்றவர்களின் பொருள்களை நியாயமற்ற முறையில் எடுத்துக் கொள்ள மாட்டீர்கள். ஆனால் உங்களின் சோம்பேறித்தனத்தால் இக்காலத்தில் சில இழப்புக்களை தற்காலிகமாகச் சந்திக்கச் செய்வீர்கள். தொழில் ஸ்தானத்தில் சிறப்பு உண்டு. புத்திரர்களின் அல்லது சகோதரர்களின் முன்னேற்றத்திற்காக அதிக பொருள்களைச் செலவு செய்வீர்கள். உங்கள் பலவீனத்தைச் சிலர் அறிந்து உங்களுக்கு கவலை தரும் செயற்பாடுகளைச் செய்வார்கள்.

**மிதுனம்:** உலகத்தின் கண்களுக்கு நல்ல மனிதர் தான்; இருப்பினும் என்ன செய்வது? வீட்டில் தொல்லைகள் அதிகம். பொறுப்புக்கள் தலைக்குமேல் வரும்— விதிதான் எனச் சமாளித்துக் கொள்ளல் வேண்டும். கஷ்டம் இல்லாமல் எதுவும் இல்லை. போராடிப் போராடி வாழ்ந்த எமக்கு சமாளிப்பது அவ்வளவு பெரிய காரியம் இல்லை.

## ஜோதிட சஞ்சீவி

தொழில் ஸ்தானத்தில் மதிப்புக் குறைவான செயற்பாடுகள் நடக்கத்தான் செய்யும். சிலருக்கு எதிர்பாலாருடன் வாக்கு வாதங்கள் தேடி ஓடிவரும். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். அடிக்கடி கோபத்தால் கெட்டவார்த்தைகள் பிரயோகிக்க வேண்டிவரலாம். புத்திரர் அல்லது சகோதரங்களின் கல்வி--சுகவீனங்களுக்காக அதிக பொருள் செலவுகள் செய்வீர்கள். பண வரவுகள் சுமாராக இருக்கும். மறைமுக விரோதிகளுடன் அவதானமாக இருக்கவும்.

**கடகம்:** நீங்கள் ஏன் அதிகம் யோசிக்கின்றீர்கள்? வயிற்றில் வலி, கைகால் தாக்கம், அலைச்சல், பயனற்ற செயற்பாடு, பொதுக்காரியங்களினால் அவமானங்கள் என்பன சர்வ சாதாரணமாகும். கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே என்று அடிக்கடி கூறும் நீங்கள் ஓரளவாவது உங்கள் வாழ்க்கையிலும்அதைக்கடைப் பிடிக்க வேண்டாமா? கஷ்ட நஷ்டங்கள் தேடிவரத்தான் செய்யும். இருப்பினும் உங்களால் எதையும் தாங்கிச் சமாளிக்க முடியும். குடும்பத்தினருக்கு சுபமங்களப் பேச்சுக்கள் வரும். தாமதமடைய விடாது செயற்படுத்தவும். வெளிநாட்டுச் செய்திகளால் பலன் இல்லை. பெரியவர்களைப் பகைக்காது விலகி நடக்கவும். ஏனெனில் அவர்களின் கோபம் — சாபம் — துப்பாக்கியிலும் வேகமானது என்பதை உங்களுக்கு சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

**சிங்கம்:** இரவு பகலாக யோசனை செய்து வீணாகக் குழம்பிக் கொள்ளாதீர்கள். தொழில் ஸ்தானத்தில் ஏற்படும் பொருள் நெருக்கடிகளால் யோசனை — பயம் ஏற்படலாம். அவதானமாக இருத்தல் வேண்டும். எதற்கும் பொறுப்பு நிற்பதிலிருந்து விலகிக் கொள்ளவும். அதனால் விலத்திக் கொள்ளலாம். நெருங்கிய உறவினர் ஒருவரின் இழப்பு அல்லது தொல்லைகளால் அடிக்கடி கவலைகள் கொடுக்கும். அரச உதவிகள் கிடைக்க சந்தர்ப்பங்கள் உண்டு. தொழில் அல்லது கல்வியால் சிறப்பும், இலாபமும் ஏற்படும். நண்பர்களை நம்பவேண்டாம். அடிக்கடி உடம்பில் களைப்புத் தோன்றும். சாப்பாட்டைக் கவனித்துக் கொள்ளவும். அல்லது வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். புத்திரர் அல்லது சகோதரர்களால் செலவுகள் அதிகரிக்கும்.

## மகாதேவா ஜோதிடம்

**கன்னி:** நீங்கள் எதற்கும் எதிர்நீச்சல் அடித்து வாழப் பழகிக் கொள்ளவும். தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்புக்களும், மறைமுகப் புகைச்சல்களும் இருக்கத்தான் செய்யும். நீங்கள் ஓடி, ஓடித்தேடினாலும் ஒன்றும் தேடி இக்காலத்தில் அதிகம் வராது. திடீர் வாகன சுகம் இருக்கும். எதிர்பாலாரால் நன்மைகள், உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும். புத்திரர் சிறப்பு அடைவர். சிலருக்கு புத்திரர் அல்லது சகோதரர்களுக்கு மாற்றங்களும் சுபமங்களப் பேச்சுக்களும் கொடுக்கும். இடம் மாற்றங்கள் அல்லது பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.


**துலாம்:** நீங்கள் காரணம் இல்லாமல் அடிக்கடி கோபிப்பதும், தடுமாறுவதுமாக இருப்பீர்கள் [illegible] போன்று இருக்கிறது. அயல

(X ஆம் பக்கம் பார்க்க)

2000 ஆம் வருஷத்தில் மேடம், இடபம் இராசிகளில் சனி, குரு, செவ்வாய் சேர்க்கைகளால் அழிவுகள் ஏற்படச் செய்யும். கடந்த இரு மகாயுக்தங்களால் உலகில் அழிவுகள் ஏற்பட்டது உண்மைதான். ஆயினும் உலகம் முழுவதும் அழிந்து விடவில்லை. இது போன்று உலகில் அழிவுகள் வர இடம் உண்டு. ஆனால் உலக காலச்சக்கரத்தில் - உலகம் முற்று முழுதாக அழியாது என்பது உண்மையாகும். எனவே தெய்வ நம்பிக்கையுடன் நாம் செயற்பட்டு வருவோம்.

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 12



சொற்சிலம்பம் இல. 12
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் : ..........................................................

விலாசம் : ..........................................................

..........................................................

———————— இங்கே வெட்டுக ————————

**முடிவு திகதி: 29 - 08 - 1997**

### இடமிருந்து வலம்

1. கங்கைக் கரைநாயகன். 3. சேனாதிபதி. 6. பின்னல்ல. 7. சினை. 8. குளிர்ச்சியைக் குறிப்பது. 9. அடங்காமல் திரிபவனைத் திட்டுவது இப்படி. 11. கலப்பை. 12. முருகன். 15. கூடுதல். 16. அறுபத்துநான்கு வகையுடையது. 17. மூன்று. 18. யாகம். 19. மானின் ஒருவகை. 21. பரமசிவன் துணைவி. 22. இவனுக்காக தனி சொர்க்கமே அமைத்தார்களாமே!

### மேலிருந்து கீழ்

1. ஒரு மலர். 2. பசுவின் குட்டி. 3. மரம். 4. உள்ளீடு இல்லாத நெல். 5. வலிமை. 7. சரஸ்வதி. 10. தேவையான தகைமை. 11. கேள்வி பிறப்பது இதனால். 13. தாரம் முதல் இழந்தது. 14. சிரசில் எழுதப்பட்டது. 15. ஆரம்பப் பாடம். 16. திருடன். 17. நாள் தோறும் மாறுவது. 18. நிலத்திலிருந்து சத்தை உறிஞ்சுவது. 20. தலைகீழானது; ஆனால் பிழையல்ல. 21. குழம்பு வடிவானது.

### சொற்சிலம்பம் இல. 10 - விடைகள்

**இடமிருந்து வலம்**

1. அபிமன்யு. 5. சாவி. 7. கன்னி. 8. கடுகதி. 9. தவம். 11. நன்றி. 12. பாம்பு. 14. சரி. 15. யோசனை. 17. பன்மை 18. வாளி. 19. தபசு. 21. யமன். 23. திண். 24. தொல்லை. 25. பா.

**மேலிருந்து கீழ்**

1. அகதி. 2. பின். 3. மனிதன் 4. யுகம். 5. சாகரம். 6. விதி. 10. வறியோன். 11. நரி. 12. பானை. 13. புரளி. 14. சந்ததி 16. சமையல். 17. பசு. 18. வான். 20. பண். 22. மலை.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு;-

★ முதலாம் பரிசு :- எஸ். சுகந்தன்,
அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

★ இரண்டாம் பரிசு :- செ. ஹெலன் கவிதா,
13/ 2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

★ மூன்றாம் பரிசு :- ஜொஹானன் அரியரட்ணம்,
16, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | | |
|---|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. | 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. | 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. | 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம். 11 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் ... நூலகம்

# நரியாரின் விவேகம்

ஒரு காட்டில் ஒரு யானை இறந்து கிடந்தது. அந்தப் பக்கமாக வந்த ஒரு நரி அதனைக் கண்டது. யானையின் இறைச்சியைத் தின்பதற்கு எண்ணி அதனருகில் சென்றது.

அப்போது அவ்வழியே சிங்கம் ஒன்று வந்து சேர்ந்தது. நரியைப் பார்த்து அது உறுமி அதட்டியது.

நரி வெகு பவ்வியமாக ''அரசே! தாங்கள் கொன்று போட்ட இந்த யானையை நான் காவல் காத்துக் கொண்டு இருந்தேன்.'' என்று கூறியது.

மிகுந்த அடக்க ஒடுக்கமாகப் பேசிய நரியைப் பார்த்த சிங்கத்துக்கு இரக்கம் பிறந்தது. ''நரியே, இது நான் கொன்ற யானை அல்ல. ஆகவே நீயே அதை எடுத்துக்கொள்!'' என்று பெரிய மனது பண்ணிக் கூறிவிட்டுச் சென்றது.

இவ்வாறுசாமர்த்தியமாக— சமாதானமாக — 'சாம' வழியைப் பயன்படுத்தி சிங்கத்தைச் சமாளித்தது நரி.

சிங்கம் அங்கிருந்து சென்றகையோடு புலி ஒன்று அங்கு வந்து சேர்ந்தது.

''நீ யார்? என்ன செய்து கொண்டிருக்கின்றாய்?'' — என்று அதிகாரம் பண்ணியது புலி.

தந்திரத்தால் புலியை வெல்ல எண்ணிய நரி, ''புலி மாமா, இதை ஒரு சிங்கம் கொன்று போட்டது. அந்தச் சிங்கம் இந்தப்பக்கத்தில்தான் எங்கோ ஒளிந்து கொண்டிருக்கின்றது. 'ஏதாவது புலி வந்தால் எனக்குச் சொல்' என்று அந்தச் சிங்கம் என்னிடம் கூறியிருக்கின்றது. ஏன் என்று அச்சிங்கத்திடம் கேட்டேன். 'முன் பொரு முறை இப்படித்தான் நான் யானை ஒன்றைக் கொன்று போட்டு விட்டு நீராடப் போயிருந்தபோது, ஒரு புலி வந்து அந்த யானையைக் கடித்து எச்சில் படுத்தி விட்டது. இப்போதும் அப்படி வரலாம். அந்தப் புலியை நான் தண்டிக்க வேண்டும். அதற்கு இன்று சந்தர்ப்பம் வாய்க்கலாம். புலி வந்தால் நீ ஊளையிட்டுக் குரல் எழுப்பு. நான் பாய்ந்து வந்து புலியை அமுக்குகின்றேன்' என்று சிங்கம் கூறிச்சென்று, இங்கு எங்கோ அருகில் உள்ள புதரில்தான் மறைந்திருக்க வேண்டும்.'' — என்று நரி புலியிடம் கூறியது.




அவ்வளவுதான். புலி தப்பித்தேன் பிழைத்தேன் என்று பாய்ந்து ஓடியது.

இவ்வாறு புலிக்கும் சிங்கத்துக்கும் இடையில்'பேத'த்தை — பகை உணர்ச்சியை— ஏற்படுத்தி, புலியை மாறுபடச் செய்து, அதனை ஓட்டியது நரி.

பின்னர் அங்கு ஒரு குரங்கு வந்தது. குரங்கைக் கண்டதும் நரி, ''வா, வா! இவ்வளவு பெரிய யானை இறந்து கிடக்கின்றது. தின்ன ஆளில்லையே என்றுதான் பார்த்துக்கொண்டிருந்தேன். இதன் உடலை வேண்டியளவு கிழித்துத் தேவையானதைத் தின்னு'' — என்று கூறியது.

குரங்கு சரி என்று கூறி, தனது கூர்மையான கை நகத்தால் யானையின் உடலைக் கிழித்தது.

அது கிழித்து முடிந்த சமயம் ''ஐயோ சிங்கம்! சிங்கம்!! அதோ வருகின்றது!'' — என நரி கூச்சலிட்டது. சிங்கம் என்றவுடன் பயத்தால் ஓட்டம் பிடித்தது குரங்கு.

'அப்பாடா! இந்த யானையின் தடித்த தோலைக் கிழிப்பது எப்படி என்று யோசித்துக் கொண்டிருந்தபோது குரங்கு வந்தது. 'தானம்' கொடுப்பது போலக்காட்டி, குரங்கை ஏமாற்றி யானையின் தடித்ததோலை கிழித்தாயிற்று. இனி தின்ன வேண்டியது தான்.' என்று நரி எண்ணியது.

அது யானையின் இறைச்சியைத் தின்னப்போன சமயம் மற்றொரு நரி அங்கு வந்து சேர்ந்தது.

பழைய நரி உடனே புதிய நரியின் மீது பாய்ந்து சண்டையிட்டு, கடித்து, அதனை விரட்டியது.

இவ்வாறு 'தண்டம்' செய்து அதனை ஓட்டிய பின்னர் அந்த யானை இறைச்சியை நரி தனக்கே சொந்தமாக வைத்திருந்து, நெடுநாள் வரைத் தின்று தனது பசியைத் தீர்த்துக் கொண்டது.

அறிவுடையவர்களும் நரியைப் போன்று எந்த விடயத்திலும் சாம, பேத, தான, தண்டம் என்ற நான்கு உபாயங்களையும் பயன்படுத்தி தங்கள் விருப்பத்தை முடித்துக் கொள்வார்கள். ★

# ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு!

## நீதிக்கதை

குமரன் கோழி ஒன்றை ஆசையோடு வளர்த்துவந்தான். அந்தக் கோழி தினசரி அடுத்த வீட்டு அம்புஜத்தின் சேவலோடு சேர்ந்து மேய்ந்துவிட்டு வரும். அதற்கு அரிசி போட்டுவிட்டுத்தான் அவன் சாப்பிடுவான். குமரன் கோழி மீது உயிரையே வைத்திருந்தான்.

ஒவ்வொரு நாளும் காலையில் கோழிக்குக் குமரன் அரிசி போட்டுத் தண்ணீரும் வைத்துவிட்டே பாடசாலை போவான். இப்படியிருக்கையில் ஒருநாள் திடீரென்று அந்தக் கோழியைக் காணவில்லை. மேயச் சென்ற கோழி வீடு திரும்பவில்லை.

குமரனுக்கு வேதனை தாங்கமுடியவில்லை. அடுத்த வீட்டுக்கு ஓடினான். ''அம்புஜம் அக்கா! அம்புஜம் அக்கா! என்னுடைய கோழியைக் காணவில்லை. நீங்கள் கண்டீர்களா?'' அவசரம் அவசரமாக விசாரித்தான். ''குமரன் தம்பியா, வா! வா!! கோழியா? காணவில்லையா? எங்கடை சேவலோடுதானே மேயிறது, எங்கே போயிருக்கும்?'' அம்புஜம் திருப்பி அவனையே கேட்டாள். குமரனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. வாடிய முகத்துடன் வீடு திரும்பினான் இரவு சாப்பிடவில்லை.

குமரனின் தாயார் ''டேய் குமரா! வா வந்து சாப்பிட்டுவிட்டுப் படு'' என்று அழைத்தாள். குமரனோ அசையவில்லை. ''என்னுடைய கோழியைக் காணவில்லை. நான் சாப்பிடமாட்டேன்'' என்று அடம்பிடித்தான். தாயார் எவ்வளவு கெஞ்சியும் குமரன் கேட்கவில்லை. அழுதுகொண்டே படுத்திருந்தான்.


மறுநாள் காலை கோழியைத் தேடிப் புறப்பட்டான். அப்போது எதிரே வந்தது அம்புஜத்தின் சேவல். அதைக் கண்டதும் குமரனுக்குக் கோபம் வந்தது. நாலைந்து கற்களை எடுத்து அந்தச் சேவலை அடித்து விரட்டினான். பாவம் சேவல். நடக்க முடியாமல் காலில் இரத்தம் வடிய வடிய தள்ளாடித் தள்ளாடிப் போனது.



காலில் நல்ல அடி. குமரனின் செய்கைக்காக அம்புஜம் மிகவும் கோபப்பட்டாள்; வேதனைப்பட்டாள்.

குமரனோ எதையும் பொருட்படுத்தாமல் தன் கோழியைத் தேடுவதிலேயே கண்ணாக இருந்தான். அன்று முழுவதும் தேடியும் கோழி அகப்படவில்லை. பொழுதுபடும் நேரம் வாசலில் பொன்னார் மாமி வந்து நின்றாள். ''குமரா! குமரா! இது உன்னுடைய கோழியா பார்?'' ஓடிச் சென்றான் குமரன். தன்னுடைய கோழியைக் கண்டதும் மகிழ்ச்சியால் துள்ளினான்.

''இது எப்படி உங்களிடம் வந்தது?'' என்று கேட்டான் குமரன். ''என்னவோ தெரியாது எங்கள் வீட்டுச் சேவலுடன் சோடி போட்



டுக்கொண்டு இன்று முழுக்க நின்றது, இந்தா பிடி நான் போறன்'' என்று கூறிவிட்டு மாமி போய்விட்டாள்.

தான் வீணாக அம்புஜம் வீட்டுச் சேவலை அடித்து விரட்டியதை எண்ணிக் கவலைப்பட்டான் குமரன். அது இரத்தம் வடியத் தள்ளாடிப் போனதை எண்ணி வருத்தமடைந்தான்.

''ஆத்திரக் காரனுக்குப் புத்திமட்டு'' என்று அடுத்த வீட்டு அம்புஜம் கூறுவது அவன் காதுகளில் விழுந்தது.

இனிக் கவலைப்பட்டு என்ன பயன்?

**-ஸ்ரீ. சத்தியா-**

இந்தக் கதையிலிருந்து என்ன அறிகின்றீர்கள்?

'ஆறுவது சினம்' என்ற ஔவையார் கூற்றுப் படி [illegible] விடுங்கள்! ★

# தூக்கம் உன்...

(IV ஆம் பக்கத் தொடர்)

களை —நாம் இரவில் செய்வதில்லை.

இக்காரணத்தினால் நம்மில் பலர் நேரத்துடன் தூங்கச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர்.

நேரத்துடனோ அல்லது நேரம் பிந்தியோ — எப்படியாயினும் ஒரே நேரத்துக்கு தூங்கச் செல்வதை வழக்கப்படுத்திக் கொண்டால் சீரான தூக்கத்துக்கு அது வழிகோலும்; ஒரு சீரான நேரத்தில் தூக்கத்தை விட்டு எழும்பும் பழக்கமும் தானாக எம்மில் தொற்றிக் கொள்ளும்,

## இரவுத் தூக்கமே எப்போதும் நல்லது

★ பகலை விட இரவுத் தூக்கம்தான் சிறந்தது. இதற்குக் காரணம் சுற்றுச் சூழல் ஆரவாரம் அடங்கியிருக்கும் நிலை தூக்கத்துக்கு மிகவும் உகந்தது என்பதேயாகும்.

ஒரு புறம் ரி.வி கதற, மறுபுறம் அறைக்குள் நூறு வாட்ஸ் மின்குமிழ் ஜெகஜோதியாக ஒளிவீச,குழந்தைகள் — பிள்ளைகள் கூடிக் குலாவி ஆரவாரம் பண்ண, இவற்றுக்கு நடுவில் இரவில் தூங்குவதும் —

சாதாரண நாள்களில் பகலில் தூங்குவதும் — ஒன்றுதான்.

எனவே இரவுத் தூக்கம் என்றாலும் அமைதியான — மிதமான ஒளி, ஆரவாரமற்ற — இடங்களைத் தேர்ந்தெடுத்து தூங்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

பத்திரிகை அலுவலகம், ஆஸ்பத்திரி போன்றவற்றில் இரவில் பணிபுரிவோருக்கு இந்த வாய்ப்புக் கிட்டாமல் போகலாம். ஆனால் அத்தகையோர் பகலில் அமைதியான — காற்றோட்டம் உள்ள — சந்தடி, குழப்பங்கள் அற்ற — இடத்தைத் தேர்ந்து நித்திரைக்குச்செல்ல வேண்டும். அந்தத் தூக்கத்துக்கும் பகலில் ஒரு திட்டவட்டமான — ஒரே சீரான — வசதியான நேரத்தை அவர்கள் தேர்ந்தெடுத்து அந்த நேரத்தில் தூங்குவதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

★ தூங்கப்போவதற்குச் சற்று முன்னர் அதிகமான — களைப்பை ஏற்படுத்துகின்ற — வேலைகளைச் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இத்தகைய வேலைகள் உங்கள் உடலை உஷார்ப்படுத்தி, சுறுசுறுப்பாக்கி விடுவதால் உடனடியாக உடல் தூக்கத்துக்கான ஒய்வு நிலைக்குச் செல்வதை அது தடைசெய்து விடுகின்றது.

## தூக்கத்தின் எதிரிகள்

★ தூக்கம் கெடுவதற்கு நமது மன எண்ணங்களும் காரணமாகி விடுவதுண்டு. அதிகமான மகிழ்ச்சி மற்றும் அதிகமான கவலை ஆகியன தூக்கத்தின் எதிரிகள்.

எனவே அப்படியான அதீத மனக்கவலை அல்லது மகிழ்ச்சி இருந்தால் அதைத் திசை திருப்ப வேண்டும்.

மனதுக்குப் பிடித்த படத்தை ரி.வியில் சற்று நேரம் பார்ப்பது, அடுத்த நாள் கடமைகளை ஒழுங்குபடுத்துவது, மனைவி அல்லது கணவன் அல்லது குழந்தைகளுடன் மனம் விட்டுப் பேசி மகிழ்வது, விருப்பமான புத்தகங்களை வாசிப்பது போன்றவை மனக்கவலையை அல்லது அதிக மகிழ்ச்சியை திசை திருப்பி மனச்சாந்தியை ஏற்படுத்தி, நல்ல தூக்கத்தைத் தரும்.

எதுவானாலும் இத்தகைய நேரங்களில் மன ஆரோக்கியத்தைத் தருகின்ற செயல்களை நாடுங்கள்; மன இறுக்கம் குறைந்து தூக்கம் தானாகவே வந்து உங்களைத் தழுவும்.

## உறங்கும் முறைகள்

★ மல்லாந்தோ குப்புறவோ படுத்துக் கொள்வதைவிட ஒருபுறமாகப் படுத்துக் கொள்வது தூக்கத்தை எளிதாக்கும். கரடுமுரடான படுக்கையை விட மென்மையான படுக்கை தசைகளுக்கு இசைந்து கொடுப்பதால் தூக்கத்துக்கு உதவுகின்றது.

கால நிலைக்கு ஏற்ற வகையில் — கோடை, மாரி, குளிர் காலங்களுக்கு பொருத்தமான விதத்தில் — படுக்கையை ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்.

நல்ல கோடை, வெயில் காலத்தில் றப்பர் மெத்தையில் படுத்துத் தூங்கவா முடியும்? அதே போல நல்ல குளிர் காலத்தில் வெறும் நிலத்தில் பாயை மட்டும் விரித்துப் படுக்கவா இயலும்?

அது மட்டுமல்லாமல் தூக்கத்திற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையைக் கையாளும் பண்பைக் கொண்டிருப்பர். சிலருக்கு இரண்டு தலையணை வைத்து — தலையை உயரமாக — பேணினால்தான் தூக்கமே வரும். மற்றும் சிலருக்கு காலைப் போர்த்துக் கொண்டு படுக்கப் போனால்தான் நித்திரை எட்டிப் பார்க்கும். இத்தகையோர் கூடியவரை தங்கள் பழக்கங்களை — அவை நல்லவை என்றாலும் கெட்டவை என்றாலும் —தொடர்வதே தூக்கம் குழம்பாமல் இருப்பதற்கு வழியாகும்.

★ தூக்கத்திற்கு குழப்பம் வெளியிலிருந்துதான் வர வேண்டும் என்பதல்ல, நமக்குள் இருந்தே வரலாம். இரவு எதுவுமே சாப்பிடாமல் படுக்கப்போனால் நடுநிசி நடுவே பசியே எம்மைத் தட்டி எழுப்பி வைத்துவிடும்.

நீரிழிவு நோயாளர் வயிறு நிறையச் சாப்பிடுவதில்லை. இவர்களுக்கு இப்பிரச்சினை அடிக்கடி ஏற்பட வாய்ப்பு உண்டு.

இது தவிர, நீரிழிவு நோயாளரும், இரவு உணவுக்குப் பின் மிதமாகத் தண்ணீரைக் குடிப்பவர்களும் தம்மையறியாமல் இடையில் நித்திரையை விட்டு எழும்ப வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இரவில் சிறுநீர் கழிப்பதற்கு அவரது உடல் தூண்டப்படுவதே இதற்குக் காரணம்.

எனவே இடை நடுவில் சிறுநீர் கழிக்கத் தூண்டும் நிலை ஏற்படாதவாறு இவர்கள் பார்த்துக் கொள்வதே நல்லது.

★ சீரான தூக்கம் வராதவர்கள் மாலையில் மிதமான உடற்பயிற்சியோ அல்லது யோகாசனப் பயிற்சியையோ நாடலாம்.

இரவு உணவுக்குப் பின்னர் ஓர் அரைமணி நேரம் காலாற நடப்பது தூக்கம் உங்களைத் தானாகத் தழுவுவதைத் தூண்டும்.

★ பாதித் தூக்கத்தில் விழிப்பவர்கள் ஜில்லென்று ஒரு தம்ளர் தண்ணீரை குடியுங்கள்; வீட்டுக்கு சற்று நடை பயிலுங்கள். தூக்கம் தானாக விழிகளைத் தழுவும்.

## போதையில் உறக்கம்

★ மது அருந்துவதன் மூலம் நன்றாகத் தூங்கலாம் என்ற கருத்து சிலரிடையே நிலவுகின்றது. மது அருந்துவதால் வருவது ஆழ்ந்த தூக்கமல்ல. அது ஒருவகை ஆழ்ந்த மயக்க நிலையே.

மது உடல் முழுவதும் பரவுவதனால் உடலின் இயல்பான தன்மை குறைந்து மூளை உட்பட சகல உடற்பகுதிகளும் மயக்க நிலையை எட்டுகின்றன. அப்போது கிடைப்பது சுகமான தூக்கமல்ல.

அத்தகைய தூக்கத்தால் உடல் புத்துணர்ச்சி, ஆரோக்கியம் போன்றவற்றைப் பெறாது. மாறாக களைப்பும் சோர்வுமே எஞ்சும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதிவெடி....

(VII ஆம் பக்கத் தொடர்)
டிப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் கூடுதலாக அவர்களது மனவளர்ச்சியில் நீண்டகால பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதனால் சமுதாயத்தில் ஆளுமையுடைய எதிர்காலத் தலைமுறை உருவாவது பாதிப்புறும்.

### மறுபுறத்தில்

எத்தனை பேருக்கு உணவளித்த வயல்கள், தோட்டக் காணிகள், எத்தனை பேருக்குவாழ்வளித்த வீடுகள், வீதிகள், கடைத் தெருக்கள், எத்தனை நோயாளரின் பிணி தீர்த்த மருத்துவமனைகள் — இவை எல்லாம் மிதிவெடிகளின் விதைப்புக்காரணமாக மனிதனின் பாவனைக்கு எட்டாதனவாக— அவனுக்கு அச்சம் ஊட்டும் பிரதேசங்களாக — மாற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மக்களின் வாழிடங்களுக்கூடாக நெளிந்து செல்லும் மண் அணைக்கு அருகில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவங்களினால் உப உணவுச் செய்கைக்காக பயன்பட்ட பல ஏக்கர் கணக்கான நிலங்கள் செய்கை பண்ணப்படாமல் கைவிடப்பட்டுள்ளன

அண்மையில் மல்லாகத்தில் மண் அணைக்கு அருகில் தனது தோட்டத்தை செப்பனிட்டுக் கொண்டிருந்த — 70 வயதுடைய — விவசாயி அங்கு ஏற்பட்ட மிதிவெடிச் சம்பவத்தில் தனது காலை இழந்த நிலையில் ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டார். அதன் பின்பு அந்தக்காணி பயிர் செய்யப்படாமல் கைவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தனி மனிதனினதும் தேசத்தினதும் பொருளாதாரம் மிதிவெடிகளினால் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

### புனர்வாழ்வில் சமூகத்தின் பங்கு

யாழ்ப்பாணத்தில் பலருக்குச் செயற்கைக் கால் பொருத்துவதற்கு அல்லது கக்கத்தண்டம் வழங்குவதற்குரிய முக்கிய காரணமாக இருப்பது மிதிவெடியாகும்.

முழங்காலுக்குக் கீழ் கால் அகற்றப்பட்ட ஒருவர் செயற்கை கால் பொருத்தப்பட்டதும் கணிசமான சதவீதத்தில் ஓரளவு பழைய நிலையையும் திறமையையும் பெற்று விடுகிறார்.

ஆனால் முழங்காலுக்கு மேல் கால் அகற்றப்பட்டவர் செயற்கைக்கால் பொருத்திய பின்னரும் செயற்றிறன் குறைவானவராகவே காணப்படுகிறார்.

யாழ்ப்பாணத்தில் இத்தகைய செயற்கை உறுப்புகளைப் பொருத்துவதற்கு ஒரேயொரு ஜெய்ப்பூர் செயற்கை உறுப்பு நிறுவனமே இயங்கி வருகிறது. பல இடர்களுக்கு மத்தியிலும் சேவையை வழங்கி வரும் இவ்வாறான நிறுவனங்களுக்கு சமுதாயத்திலிருந்து உரிய அளவில் உதவிகள் வழங்கப்படுவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கக் கூடியதாக இருக்கும்.

மிதிவெடியினால் வெவ்வேறு விதமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு ஏற்ற வகையில் புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும். இதில் சமுதாயத்திலுள்ள நிறுவனங்கள் முக்கிய பங்கேற்கவேண்டியது அவசியமாகும்.

அதேசமயம் — மேலும் பொதுமக்கள் பாதிக்கப்படாத வகையில் மிதிவெடிகள் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் —

புதைக்கப்பட்டவற்றை தேடி அகற்றும்படி சம்பந்தப்பட்டோருக்கு அழுத்தம் கொடுப்பதிலும் —

அவை பற்றிய சரியான ஆய்வுகளை மேற்கொள்ள உதவுவதிலும் —

சமூக நிறுவனங்கள் முக்கியமான பங்கினை ஆற்ற வேண்டியது அவசியமானதாகும்.

### சர்வதேச நிலைமை

அப்பாவிகளைக் காவு கொள்ளும் மிதிவெடிகள் உட்பட அனைத்து கண்ணிவெடிகளையும் தடை செய்ய வேண்டும் என்ற குரல் பூமிப்பந்தின் பல கோணங்களிலிருந்தும் எழுந்துள்ளன.

வல்லரசுகளுக்கு அணு ஆயுதங்கள் குறித்து கவலை. ஆயுதக் கட்டுப்பாடுகள் பற்றிய சர்வதேச அமைப்பிற்கு மற்றைய பேரழிவு ஆயுதங்கள் குறித்து கவலை.

ஆனால் சிறிது, சிறிதாக பல இடங்களிலும் பரந்து கிடந்து, அப்பாவி மக்களை பேரழிவுக்கு உட்படுத்திவரும் ஆபத்தான — துரோகத்தனமான — கொடூரமான —மிதிவெடிகளின் பரவுகை குறித்து அலட்டிக் கொள்வார் எவருமில்லை என்பதுதான் மிக மிக வேதனையான விடயமாகும்.

## யாழ்ப்பாணத்தில் மிதிவெடிகளால் ஏற்பட்ட பாதிப்புக்கள்

★ பாதிப்புற்றோரின் முழுமையான எண்ணிக்கை தெரியாது.

★ யாழ். ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலையில் வருடாந்தம் 60 பேர் என்ற கணக்கில் மிதிவெடியில் கால் இழந்தோருக்கு செயற்கைக்கால் பொருத்தப்பட்டிருக்கின்றது.

★ கடந்த ஒரு வருட காலத்தில் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் யுத்த காயங்களுடன் அனுமதிக்கப்பட்ட 296 பேரில் எழுபது வீதமானவர்கள் வெடிக்கும் கருவிகளினால் (மிதிவெடியில்) பாதிக்கப்பட்டவர்கள்.

★ கடந்த ஒரு வருடத்தில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்ட சடலங்களில் 65 வீதமானவை வெடிக்கும் கருவிகளால் ஏற்படுத்தப்பட்ட மரணங்கள்என்பது குறிப்பிடத்தக்கது.

இரசாயன ஆயுதங்கள், உயிரியல் ஆயுதங்கள் போன்றவற்றுக்கு எதிராக எழுந்துள்ள எதிர்ப்பியக்கம் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் போன்றவற்றுக்கு எதிராகக் கிளப்பப்படவில்லை என்பது சுட்டிக்காட்டப்படத்தக்கதாகும்.

அணு ஆயுதங்கள், இரசாயன ஆயுதங்கள், உயிரியல் ஆயுதங்கள் போன்றவை பேரழிவைத் தரும் என்பது உண்மைதான்.

ஆனால் என்றோ ஒரு நாள் பயன்படுத்தப்படும் போது அவை தரக்கூடிய பேரழிவை — இன்று உலகின் பல பகுதிகளிலும் பரந்து விதைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகள் — சிறுகச் சிறுக தினசரி தந்து கொண்டிருக்கின்றன.

தயாரிக்கப்பட்ட பின்னர் பயன்படுத்தப்படாமல் பேணப்படும் ஆயுதங்களுக்கு எதிராகக் கூச்சலிடும் நாடுகள், தத்தமது நாடுகளிலும் அயல் நாடுகளிலும் இவ்வாறு விதைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகள் குறித்து அலட்டாமல் இருப்பது அதிசயமல்ல.

ஏனெனில் அணு ஆயுதங்கள், இரசாயன — உயிரியல் ஆயுதங்கள் போன்று நேரடியாக ஒரு நாட்டுக்கு அச்சுறுத்தல் தருபவை அல்ல மிதிவெடிகள்.

மிதிவெடிகளால் சமூகத்தின் தனி அலகான தனி மனிதர்களே பாதிக்கப்படுகின்றார்கள். அவை இன்னொரு நாட்டுக்கு அச்சுறுத்தல் தருபவையாக இருப்பதில்லை.

எனவே மிதிவெடிகள் குறித்து சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து எதிர்ப்பியக்கம் நடத்தி அவற்றை ஒழிக்கும் என எதிர்பார்ப்பது பகல்கனவாகவே அமையும்.

மிதிவெடிகளால் பாதிக்கப்படக்கூடிய தனிமனிதர்களே தங்களது பொது அமைப்புகள் மூலம் அவற்றை ஒழிக்கச் செய்வதற்கான எதிர்ப்பு இயக்கத்தை வலுப்படுத்திச் செயற்படுத்த வேண்டும்.

என்றாலும் ஆஸ்திரேலியா, கனடா, பிரிட்டன் போன்ற நாடுகள் மிதிவெடிக்கு எதிரான போக்கைத் தீவிரமாகத் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளன.

பிரிட்டனில் புதிதாகப் பதவியேற்றிருக்கும் தொழில் கட்சி அரசு தனது தேர்தல் வாக்குறுதிப்படி மிதிவெடிகள் உட்பட அனைத்து நிலக்கண்ணிகளையும் பூண்டோடு ஒழிக்கும் திட்டத்தை முழு மும்மரமாகச் செயற்படுத்தத் தொடங்கியுள்ளது.

இத்தகைய வெடிகளின் உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி, கொண்டுசெல்லல், விநியோகம், விற்பனை அனைத்தையும் முற்றாகத் தடை செய்யப் போவதாகவும் —

பிரிட்டனில் உள்ள கண்ணிவெடிகள் அனைத்தையும் பூண்டோடு ஒழிக்கப்போவதாகவும் —

2005 ஆம் ஆண்டளவில் பிரிட்டனில் நிலக்கண்ணி, மிதிவெடி என்ற கதையே இருக்காது எனவும் —

புதிய பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் கூறுகின்றார்.

### பாதுகாப்பு முறைகள்

இவ்வளவு பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் மிதிவெடியிலிருந்து எவ்வாறு எம்மைக் காப்பாற்றலாம்? அதற்கு இரு வழிகள் உள்ளன.

(i) வெடித்த பின்பு பாதிப்புற்றவரின் நிலை மோசமடையாது காப்பாற்றுதல்.

(ii) வெடிக்கும் முன்பு எம்மை நாமே காப்பாற்றுதல்.

### மிதிவெடிச் சம்பவம் இடம்பெற்றதும்

★ மிதிவெடியால் பாதிக்கப்பட்டவர் மிதிவெடி வயல்கள் என நீங்கள் சந்தேகிக்கும் பகுதியில் அவர் மாட்டிக்கொண்டிருந்தால் நீங்கள் நிற்கும் இடத்திற்கு எவ்வகையிலாயினும் அவரை வரச்செய்ய முயலுங்கள். அவ்விடத்திற்கு நீங்கள் விரைந்து செல்வதால் நீங்களும் பாதிப்படையக் கூடும் என்பதை மனதிற் கொள்ளுங்கள்.

★ அவருக்குத் தகுந்த முதலுதவி அளியுங்கள். முக்கியமாமாக குருதிப்பெருக்கை உடன் நிறுத்துங்கள்.

★ எவ்வளவு விரைவாக வசதிகளுடன் கூடிய மருத்துவமனை ஒன்றுக்கு அவரை கொண்டு செல்ல முடியுமோ அவ்வளவு விரைவாகக் கொண்டுசெல்லுங்கள்.

### மிதிவெடிகளில் சிக்காமல் இருக்க

மிதிவெடிகளில் சிக்காமல் தவிர்ப்பதற்கு பின்வரும் நடை முறைகளைப் பின்பற்றுதல் நல்லது.

● சன நடமாட்டம் அற்ற எந்தவொரு புது இடத்திற்கும் தேவையின்றிச் செல்லாதீர்கள்

● மக்கள் முன்பு பாவித்த பாதைகளையே [illegible] தும் பாவிக்க முயற்சி செய்யுங்கள்.

● மிதிவெடி இருக்கும் என அறிவிக்கப்பட்ட இடங்களுக்கு அல்லது இருக்கலாம் என நீங்கள் சந்தேகிக்கும் இடங்களுக்கு செல்லாதீர்கள் (உதாரணம்:-காப்பரண்கள், மண் அணைகள், முட்கம்பி வேலிகள் ஆகியவை மற்றும் அவற்றை அண்டிய பிரதேசங்கள்).

● புதிதாக நிலங்களைத் துப்பரவு செய்கையில் மூன்று கூர்கொண்ட மண்கிண்டிகளினால் நிலங்களை கவனமாக பக்கவாட்டில் கிண்டி விடுங்கள்.

● புதிதாக காணப்படும் பொருள்கள்மற்றும்மிதிவெடி என சந்தேகிக்கப்படக் கூடிய பொருள்களை எக்காரணம் கொண்டும் கையாள முயற்சி செய்யாதீர்கள். அவைபற்றி கிராம அலுவலர்களுக்கு அறிவியுங்கள்.

● பிள்ளைகளுக்கு இது குறித்து அவ்வப்போது அறிவுறுத்துவது, எச்சரிக்கை செய்வது ஒவ்வொரு பெற்றோருடையகடமையுமாகும்.

ஒருவன் எவ்வளவுதான் தொடர்ந்து அவதானமாக இருப்பினும் வெடிப்பு ஏற்பட்டு விடுகிறது.

எனவே மிதிவெடிகளை எவ்வாறு அகற்றலாம்? அதற்கான வழிவகை என்ன?— என்பதைச் சிந்திப்பதே இன்று முக்கியமான—முன்னுரிமை கொடுக்கவேண்டிய விடயமாகின்றது.

(நன்றி;- யாழ் . பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவத் துறையின் மிதிவெடி விழிப்புணர்வுத் திட்டம்).

## பல் துலக்குவதற்கு "எலெக்ரிக் பிரஷ்"

வித, விதமான பற்பசை, பிரஷ் போன்றவற்றைப் பார்த்துப் பழகிய நமக்கு இப்போதைய புதிய வரவான — பற்றரியில் இயங்கும் — 'எலெட்க்ரிக் பிரஷ்' ஆச்சரியமாகத்தான் இருக்கப்போகின்றது.

'எலக்ட்ரிக் ஷேவிங்றேஸர்' மாதிரியே இதுவும். பிரஷ்ஷின் முனையில்உள்ள குஞ்சங்கள் பற்களைத் துலக்கும். ஈறுகளைக் சுத்தப்படுத்த இதனுடன் சிறிய பிரஷ்ஷும் வழங்கப்படும். இரண்டையும் தேவைக்கேற்ப மாற்றி மாற்றி உபயோகிக்க முடியும்.

ஜப்பானிய கம்பனி ஒன்று இதனைத் தயாரிக்கின்றது.

நல்ல — உபயோககரமான — சாதனம் தான். ஆனால் விலை தான் சற்றுக் கூட — ஆயிரத்து ஐந்நூறு ரூபா மட்டுமே!

இந்த வகை பிரஷ்கள் இந்தியாவில் தற்போது விற்பனைக்கு வந்து விட்டன.

இலங்கையில் அவை விரைவில் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த 'எலக்ட்ரிக் பிரஷ்' பற்களுக்கும், முரசுக்கும் தீங்கு எதனையும் செய்யுமா என்பதைப் பல் டாக்டர்கள் இனித்தான் கூறுவார்கள் என எதிர்பார்க்கலாம்.

# இந்த வார...

(VIII ஆம் பக்கத் தொடர்)
வர்கள் அல்லது நண்பர்கள் வீண்பழி சொன்னாலும் நீங்கள் நல்லதைச் செய்வதிலிருந்து பின்நிற்காதீர்கள். பொருள்களிலும் கொடுக்கல் வாங்கலிலும் அவதானமாக இருந்து கொள்ளுங்கள். உடல் நிலையில் களைப்பு, இரத்தக் கொதிப்பு சிலருக்கு ஏற்படலாம். ஆயினும் அதிகம் யோசிக்காது வைத்தியம் செய்துவரச் சுகமாகும். அடி காயங்கள் சிலருக்கு வரலாம். கொஞ்சம் அவதானமாக விலத்தி நடக்கவும்.

**விருச்சிகம்:** நீங்கள் போராடப்பிறந்தவர்கள். உங்கள் வளர்ச்சியில் மனம் புழுங்குபவர்கள், மறைமுகத் தாக்கங்களைக் கொடுப்பவர்கள் இக்காலத்தில் களைத்துப்போவார்கள். உங்களுக்கு வெற்றி கிடைக்கும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். சிலருக்கு கை, கால் தாக்கங்கள் கொடுக்கும். அவதானமாக இருந்து விலத்திக் கொள்ளுங்கள். வயிற்றில் சற்று நோய் ஏற்படலாம். உங்கள் தொழில் ஸ்தாபனத்தில் பெரியவர்கள் உதவிகள் கிடைக்கும். புத்திரரால் கவலைகள், செலவுகள் ஏற்படும். எதற்கும் நிதானமாகச் செயற்படுங்கள்.

**தனுசு:** நீங்கள் எதற்கும் எதிர்நீச்சல் அடித்து வெற்றி அடைவீர்கள். உலகத்தைப் பற்றிக் கடுமையாகச்சிந்தியாது போராடிப் போராடி முன்னேறி வருவீர்கள். புத்திரர்களுக்காகவும், சகோதரர்களுக்காகவும் எதையும் செய்வீர்கள். கௌரவக் குறைவான சம்பவங்கள் தொழில் ஸ்தானத்தில் ஏற்படச் செய்யும். பணம் ஒரு பக்கம் வரும். செலவுகளைக் கட்டுப்படுத்துங்கள். என்னதான் உதவிகளைச் செய்தாலும், அயலவர்களை நேசித்தாலும் அவர்கள் நன்றி உடையவர்களாக நடக்க மாட்டார்கள். புத்திரர்களுக்கு மாற்றங்கள், நன்மைகள் ஏற்படும். தூர இடங்கள் அல்லது வெளி நாடுகளிலிருந்து நற்செய்திகள் வரும்.

**மகரம்:** நீங்கள் அடிக்கடி எதையும் மாற்றும் இயல்பு கொண்டவர்கள். விதிவசப்பட்ட பலன்கள் தேடி ஓடி வரும். எதையும் தாங்கும் இதயத்துடன் ஏற்றுக் கொள்ளல் வேண்டும். சுழல்சக்கரம் கொண்ட உலகில் எதுவும் நிரந்தம் இல்லை. எவருக்கும் எல்லாம் சொந்தம் அல்ல என்பதை மறந்து கொள்ளக் கூடாது. எதிர்ப்பாலாருடன் கலகங்கள், தந்தை வழியினருக்கு நல்லதல்ல. கோயில் அல்லது தர்மச் செலவுகள் அதிகரிக்கும். உங்களைச் சிலர் நம்பிக்கை மோசம் செய்வார்கள். தொற்று நோய்கள் வரலாம். அவதானமாக இருக்கவும். வீட்டுச் செலவுகள் கட்டு மீறி இருக்கும். ஆயுத பயம் உண்டு. கவனமாக இருக்கவும். மறைமுக எதிரிகள் வஞ்சனை செய்யக் காத்து இருக்கின்றார்கள். தெய்வபக்தி, தர்மங்கள் உங்களின் பாதுகாப்பை அளந்து தரும்.

**கும்பம்:** நீங்கள் எதற்கும் சலனப்படக் கூடாது. உலகம் என்பது சுழல்சக்கர வாழ்க்கையைத் தரும் என்பதை மறந்து விடக் கூடாது. எதையும் நாம் சமாளித்து வாழப்பழகிக் கொள்ளல் வேண்டும். "புத்திமான் பலவான்" என்பதை நீங்கள் காட்ட வேண்டாமா? தொழில் ஸ்தானத்தில் போட்டி ஏற்படும். உடல் நிலையில் களைப்பு அடிக்கடி கொடுக்கும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். குடும்பத்தில் வாக்குவாதம் ஏற்படும். தர்மச்செலவு அதிகரிக்கும். அடிக்கடி அலைச்சல் ஏற்பட்டாலும் விடாது முயற்சி செய்வதனால் காரிய சித்திகள் ஏற்படும். விஷபீடைகள் ஏற்படும். கவனமாக இருக்கவும். தெய்வவழிபாடு நன்மை தரும்.

**மீனம்:** உங்களுக்கு தொழில் ஸ்தானத்தில் ஏற்படும் மாற்றங்களால் குடும்பத்தில் அபிப்பிராயபேதங்கள் ஏற்படும். உங்கள் செல்வாக்கு வீண்பகையை ஏற்படுத்தும். வீடு--நிலம் மாற்ற யோசனைகள் வரும். விஷபீடைகள். பொருள் செலவுகள் சர்வசாதாரணமாகும். மறைமுக எதிரிகளாலும், ஆயுதங்களாலும் பயமும், வீண்தொல்லைகளும் ஏற்படச் செய்யும். ஆயினும் தெய்வ வழிபாடு செய்து வர விரோதிகள் நீங்குவர். உங்கள் முயற்சியும் புகழும் மேலோங்கும். தொழில் முயற்சியில் மாற்றங்களால் நன்மைகள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காற்றுக்கென்ன வேலி?

மனிதனால் அடக்கவே முடியாத விஷயங்களைப் பட்டியலிட்டால் அந்த பட்டியலில் 'வாய்வுத் தொல்லை'க்கு பிரதானமாக ஓர் இடம் உண்டு! நான்கு பெரிய மனிதர்கள் மத்தியில் பேசிக் கொண்டிருக்கும் போது தான் இது வந்து தர்மசங்கடப்படுத்தும்.

இன்னும் சிலபேரை நீங்கள் பார்த்திருக்கக்கூடும். முகத்தை அஷ்டகோணலாக வைத்துக் கொண்டு சதா நெளிந்து கொண்டே இருப்பார்கள். 'என்ன விஷயம்?' என்று கேட்டால் தலையிலிருந்து கால் வரை ஏதாவது ஒரு பிரதேசத்தை சுட்டிக் காட்டி 'இங்கே வாய்வு பிடிப்பு... அதனால் குத்தல், குடைச்சல்' என்று சொல்வார்கள்.

உண்மை என்ன தெரியுமா? உடம்பிலே சுவாசப்பை, உணவுப்பாதை (தொண்டைக் குழியிலிருந்து ஆசனவாய் வரை) என்று இரண்டு இடங்களில் மட்டும்தான் காற்று இருக்கிறது. இந்த இரண்டு இடத்தையும் தாண்டி காற்று உடம்பின் மற்ற பாகங்களுக்குள் போகாது. போனால் அப்புறம் சும்மா இருக்க முடியாது. சுவாசப்பையையோ, உணவுப் பாதையையோ மீறி ஓட்டை ஏற்படுத்திக் கொண்டு காற்று கசிந்தால் உடம்பை விட்டு வெளியே போக அதற்கு வேறு வழி கிடையாது. அதனால் கசிந்து வரும் காற்று இதயம், சுவாசப்பை என்று உள் அவயவங்களைத்தான் அழுத்த ஆரம்பிக்கும். இது மரணத்தில் கூட முடியலாம். ஆனால், இது போன்ற குழப்பங்கள் குண்டடிபடுதல் போன்ற அசாதரணமான விபத்துக்களால் மட்டுமே உண்டாகும்.

இந்த வாய்வுத் தொல்லை குறித்து நமக்கு இருக்கும் அறிவு குறைச்சல். அதனால்தான் தலைவலி, கைகால் சுளுக்கு போன்ற உபாதைகளுக்கு எல்லாம்கூட அதன் தலையில் பழியைப் போடுகிறோம்!

நாம் சுவாசிக்கும்போது காற்று சுவாசப்பைக்குப்




போகிறது. இது தனிவழி. இதற்கும் வயிற்றுக்கும் நேரடித் தொடர்பு ஏதும் இல்லை!

ஆனால், வயிற்றுக்குள் ... இன்னும் தெளிவாகச் சொன்னால் உணவுப் பாதைக்குள் காற்று எப்படி வருகிறது? இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

முதலாவது நாம் சாப்பிடும் போது, உணவோடு காற்றும் சேர்ந்தே உணவுப் பாதைக்குள் செல்கிறது!

இரண்டாவது இரைப்பைக்குள் போய் விழும் உணவை அமிலங்கள் தாக்கும்போது அங்கே பல இரசாயன மாற்றங்கள் நடந்து ஐதரசன், சல்பைட், மீத்தேன், கரியமிலவாயு என்று பலதரப்பட்ட வாயுக்கள் உண்டாகின்றன! இந்த வாயுக்கள் இரைப்பையைத் தாண்டி சிறுகுடல், பெருங்குடல் எல்லாம் கடந்து ஆசனவாய் வழியாக சத்தத்தோடு பொது இடத்தில் வெளியேறும்போதுதான் சுற்றி இருப்பவர்களுக்கும் நமக்கும் ஒரு சேர சங்கடம் ஏற்படுகிறது.

வாயு விடாத மனிதர்களே இல்லை!

வயிற்றுவலி வந்த சிலர், அதற்கு வாய்வுதான் காரணம் என்று தாங்களாகவே ஒரு முடிவுக்கு வந்து வயிற்றில் கடம் வாசித்து, வாய்வை வெளியேற்றுகிறேன் பேர்வழி என்று தமாஷான சேட்டைகள் செய்வார்கள். ஆனால், நிஜம் என்னவென்றால், என்னதான் கடம் வாசித்தாலும், முக்கினாலும் உங்கள் முயற்சியால் அதை வெளியேற்ற முடியாது; அது வாகப் போனால்தான் உண்டு.

அதேபோல ஆசனவாய் வழியாக வெளியேறும் வாயுவை உங்களால் தடுக்கவும் முடியாது. சில நேரங்களில் அப்படி நடப்பது 'கோ — இன்ஸிடென்ஸ்'... தற்செயல்.

(நன்றி: ஆனந்த விகடன்)

# அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவில்....

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பொன்னிலங்கா புரி புண்ணிய ஈழம்
மன்னிய யாழ் நகர் மருவிய புத்தூர்
வலிகாமம் தன்னில் வகையாய் வாழ்ந்தது
அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவில்,
எந்தையர் கதைகள் ஏராளம் சொல்லும்.
வள்ளல் மழவர் நடந்தது இந்நிலம்.
உள்ளம் மகிழ்ந்தே களித்தது இத்தரை.

மணியகாரன் 'கிட்டங்கி' கூட,
அணி அணியாகக் கதைகள் கூறும்.
நாற்பத்தைந்து உலக யுத்தத்தில்
வெள்ளையன் ஆமியும் இருந்தே போனது.
காப்பிலி ஆமியும் கடந்தே போனது.
இடையில் சில நாள் கதையினைக் கேட்டால்,
பட்டுப் பூச்சிப் பண்ணையும் அமைந்தது.
கடைசியாக இந்தியன் ஆமியும் இங்கே வந்தது.
விசாலமான கிட்டங்கி மாளிகை நிமிர்ந்து நின்றே,
சாவகச்சேரி சந்திக்கு கூட சந்தடி தந்தது.
'விநாயகம் ஸ்ரோர்ஸ்'. நளபாகம் தரும்
சாப்பாட்டுக் கடைகள், சாய்ப்பு கடைகள்,
சுற்று மதில்கள் நிறைந்த மாளிகைகள்.
அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவில்
எத்தனை மரங்கள்! எத்தனை பசுமை!
புத்தம் புதிய பூம் பற்றைகள் உயர்ந்தே
மெத்தை வீட்டினைச் சுற்றவும் நின்றன.

இனிய தென்றல் உலாவிடும் போது
குனிந்து நிமிரும் கும்மாளப் பெண்போல்
வானுயர் தென்னைகள் வளைந்தே ஆடும்.
தேனுயர் மா பலா சிந்து பாடும்.
புயலில் கூடத் தாக்குப் பிடித்தவை.
அயலே இன்றி அழிந்ததும் ஏனோ?
அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவின் அமைதி
இற்றைத்திங்கள் இவ்வெண்ணிலவில்
அழிந்ததும் ஏனோ? அழிவுகள் ஈதோ?
எங்களின் வீடுகள் எங்கே போயின?
எங்களின் இனிமைகள் எங்கே போயின?

இடிந்த 'பண்டும்' அழிந்த பனைகளும்
ஒடிந்த எம் உள்ளத்தை ஓரம் கட்டுது.
'ஐயாயிரங்களும் அரை குறைகளும்'
இற்றைத்திங்கள் நினைவைக் கலக்கியே
அற்றைத் திங்கள் நினைவை மீட்டுது!

- புத்தூர் விஸ்வம்

# கனவி.... என் ப்ரிய ஸகி...

கனவி ... என் ப்ரிய ஸகி......
மானிடக் கைகள் படைத்த
மந்திரக் கோலடி நீ!
என் மூச்சின் எல்லையினுள்...
உன் முகவரியைத் தானும்
முழுதாக அறிவேனோ?
ஏக்கத்தில் நெஞ்சம்
இமைக்க மறுக்கிறது.
உன் அடியும் முடியும்
அறிந்து கொள்ள......
என் நாளெல்லாம் சிவராத்திரி
ஆனாலும் போதுமோ!
விரல் மொழி விளங்கிடும்
விந்தைப் பெண்ணே......
ஐந்துவிரல்களால்எழுதத்தானே
அன்றென் அன்னை
கற்றுக் கொடுத்தாள் — என்
பத்துவிரல்களும்
சொல்லும் கதையில்
சித்துக்காட்டுவாய்
எந்தன் சினேகிதி.
அட்சரம் பிசகினால்
அலறியடிப்பாய் .........
சொற்பதம் தவறினால்
சொல்லியழுவாய்......
அரைப்புள்ளி தானும்
அதிகமாய் இருந்தால் —
செயலுக்குத்
தடைசொல்லும் நீயென்ன
நக்கீரன் மகளோ?
மௌனச் செயலுக்கு — என்
மனதறிந்த உதாரணமே ......
உலகின் வேரை ஊடறுத்து
உன் பாதம் நீள்கையிலே...
அண்டத்தின் கூரை தாண்டி
அதோ உந்தன் நெற்றி!
ஆனாலும் ......
என் மண்ணோடு மட்டும்
உனக்கேனிந்த மனஸ்தாபம்?
கிட்டாத வசதிகளில்
பத்தோடு பதினொன்றாய் ......
உன்னையும்
விட்டுவிடச் சத்தியமாய்
நெஞ்சம் சகிக்கவில்லை.
ஆதலினால் ......
அவதரிக்கும் கணத்திலேயே
சற்று அவசரமாய்......
இங்கேயும் எட்டிப்பார்!...
அறியாமை
இருள்நீக்கி ஒளியேற்று!

ச. ஆனந்தி

# இது பரு(வ)க் கோளாறு

''டீன் - ஏஜ்'' பெண்களில் பலருக்கு அதிகமான அளவு முகப்பரு ஏற்படுகிறது. இது பருவ வயதுக் கோளாறு.

''அதிகமான அளவு 'செக்ஸ்' ஆசை இருப்பவர்களுக்குத்தான் அதிகமாக முகப்பருக்கள் தோன்றும்'' என்று சிலர் சொல்கிறார்கள்.

இதை நினைத்து பல டீன் - ஏஜ் பெண்கள் குழம்புவதுண்டு,

''ஐயையோ! எனக்கு அப்படி எல்லாம் 'செக்ஸ்' ஆசை எதுவும் கிடையாது. ஆனால் முகப்பரு நிறைய இருக்கிறதே! தோழிகள் என்னைப் பார்த்து தவறாக அல்லவா பேசுவார்கள்?'' என்று வருந்துவார்கள்.

உண்மையில் செக்ஸ் ஆசைக்கும் முகப்பருவுக்கும் எந்த தொடர்புமே கிடையாது. பெண்கள் தோழிகளை கிண்டல் செய்யவே இம்மாதிரிப் பேசுகிறார்கள்.

முகப்பரு 100 இல் 80 பெண்களுக்கு ஏற்படுகிறது. 14 முதல் 25 வயதுக்குள் முகப்பரு தோன்றுகிறது.

முகப்பரு வந்தால், சிகிச்சையில் குணப்படுத்தலாம். அதேநேரத்தில் முகப்பரு வராமலும் தடுக்கலாம். எப்படி?

## வராமல் தடுக்க

★ இனிப்புப் பலகாரங்கள், சொக்லேட், நெய்—எண்ணெயில் வறுத்த உணவுகள், செயற்கை பானங்கள் அதிகம் சாப்பிட்டால் முகப்பரு தோன்றும். முகப்பரு, வரக்கூடாது என்று விரும்புவோர் இத்தகைய உணவுகளை சாப்பிடக்கூடாது; அல்லது குறைக்கவாவது செய்ய வேண்டும்.

★ மென்மையான உணவுகளை சாப்பிட வேண்டும். தண்ணீர் நிறைய குடிப்பது நல்லது. காய், கறி, கீரை வகைகள், சாலட் வகைகளை உணவில் அதிகம் சேர்க்க வேண்டும்.

★ தினமும் இரண்டு முறை முகத்தை கழுவ வேண்டும். இளஞ்சூடு நீரில் உயர்ந்த ரக சோப்பை பயன்படுத்தி முகத்தை கழுவுவதே சிறந்தது.

★ முகத்தில் எண்ணெய்த் தன்மையை அருவாக்கும் விதத்தில் உள்ள ''மேக் - அப்'' போடக்கூடாது.

★ கூந்தலில் அதிக அளவு எண்ணெய் இருந்தால், முகப்பரு எளிதில் தோன்றும். அதனால் கூந்தலில் அதிக எண்ணெய்த் தன்மை இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

★ வீரியம் குறைந்த 'ஷாம்பு' பயன்படுத்தி தலையை வாரத்தில் இரண்டு முறை கழுவுவது சிறந்தது.

★ சோப் மற்றும் ''மேக் - அப்'' பொருள்களை அதிகம் உபயோகித்தால், முகப்பரு எளிதாக தோன்றிவிடக் கூடும்.

★ உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கவேண்டும். குண்டாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். சீரான உடற்பயிற்சிகள் செய்து உடலை கட்டுக்குள் வைத்திருந்தால், முகப்பரு ஏற்படுவதைத் தடுக்கலாம்.

★ மனதை எப்போதும் நிம்மதியாக வைத்திருக்க வேண்டும். மனநெருக்கடிகளும் மனதில் தீராத வேதனைகளும் இருந்தால் முகப்பரு வருவதை தவிர்க்க முடியாது.

★ முகப்பரு வருவதை தவிர்க்க விரும்பும் பெண்கள் இரவில் நன்றாகத் தூங்க வேண்டும்.

★ முகப்பருவின் தொல்லை அதிகப்பட்டுப் போனால், டாக்டரிடம் ஆலோசனை பெறுங்கள்.

★ முகப்பருவை கிள் [illegible] கூடாது. ★

# உமை நாம் திட்டோம்!

| | | | |
|---|---|---|---|
| புற்றில் | இருக்கும் | புழுகறை | யாரும் |
| ஒற்றுமை | கண்டு | ஒன்றாய் | வாழக் |
| குற்றுப் | போலக் | குறுகிய | தீவில் |
| பற்றிய | தேனிப் | பாசிச | வாதம்? |
| சாதி | பேதம் | சாகடி | என்ற |
| போதி | மரத்துப் | புத்தன் | நீதி |
| பேதங் | கண்டேன் | பிறழ்பட | லாச்சு. |
| கோதண் | டத்தான் | குடும்பம் | பற்றிய |
| காதை | கரைத்துக் | குடித்த | தமிழர் |
| சோதரர்க் | குள்ளேன் | சோலி | சுரட்டு |
| வாதுகள் | வதைகள்? | உடனே | நிறுத்து! |
| இந்துக் | கடலின் | இளமாங் | கனியேன் |
| கொந்துப் | பட்டுக் | குரூர | மாச்சு? |
| அரச | மரத்தின் | அமைதி | இலைகளை |
| உரசிக் | குண்டேன் | உதிர | வைக்குது? |
| ஏலம் | விற்ற | எங்கள் | நாடு |
| ஏலத் | திற்கேன் | ''ஏகே'' | விற்குது? |
| காலம் | ஏனெம் | கானக் | குயில்களை |
| ஓலம் | பாட | உத்தர | விட்டது? |
| ஒப்பந் | தங்கள் | ஒன்றா? | பலவா? |
| உப்பங் | கழியில் | ஊற்றிய | மழைபோல் |
| செப்ப | மிடாது | சிதைத்தது | நிலையை |
| கப்பங் | கேட்டனர் | கண்ணிய | மாக. |
| இந்த | நாட்டில் | அகிற்புகை | நுகர |
| வந்த | அனுமார் | வடிவாய் | மணந்து |
| கந்தகப் | புகையைக் | கண்டத | னாலே |
| வந்த | வழிவால் | சுருட்டி | மீண்டார். |
| வெல்லக் | கட்டியை | விரும்பும் | பிள்ளை |
| ''எல்லெம் | ஜியை'' | எடுத்துப் | பிடித்துக் |
| கொல்வேன் | என்னும் | கோலம் | இங்கு |
| எல்லாத் | திற்கும் | எவரோ | மூலம்? |
| தாயின் | சேலைத் | தலைப்புள் | உறங்கும் |
| சேயிழை | மாதர் | சிவப்புக் | குருதி |
| தோயத் | தம்மில் | தோட்டா | பாயச் |
| சாயும் | அவலம் | சாதா | ரணமா? |
| தேயிலை | விற்றுத் | தேடிய | பணத்தில் |
| தாய்களின் | குருதிச் | சாயம் | குடித்தல்; |
| காயம் | மாற்றக் | களிம்பிது | என்று |
| சேய்களின் | வாழ்வைச் | சிதைத்துப் | பூசல், |
| இப்படி | நாறு | தீர்வுத் | திட்டம் |
| செப்பினீர் | நன்று | உமைநாம் | திட்டோம் |
| மாதன | முத்தா | மரபில் | வந்த |
| சோதரர் | அல்லவா | சொல்லுக | இனும்பல! |

-ச. முகுந்தன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏசு தேர்ந்த....

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)

போழுதே அவருக்கு ஆட்பட்டுவிட்டான். ஏசுநாதருடைய காலத்துக்குப் பிறகு அவருடைய ஜீவிய சரித்திரத்தை விரிவாக எழுதியவர்களுள் மத்தேயுவும் ஒருவர் ஆவார்.

பிலிப் (Philip) என்பவன் ஏசுநாதருடைய சிஷ்யர்களுள் ஒருவன். தேச சஞ்சாரம் செய்துகொண்டிருந்த அண்ணல் ஓர் இடத்தில் இவனைச் சந்தித்தார். பார்த்ததும் இவனுடைய மனபரிபாகம் அவருக்கு விளங்கிவிட்டது. ''என்னைப் பின் தொடர்ந்து வா'' என்று அவர் ஆணையிட்டார். தாயைத் தொடர்ந்துபிள்ளை போவது போன்று தன் தலைவனைத் தொடர்ந்து பிலிப் போய்விட்டான்.

## நசரோத்தில் தோன்றிய நம்பி

மற்றொரு சிஷ்யனை ஏசுவிடம் கொண்டுவந்து சேர்ப்பதற்குப் பிலிப் பொறுப்பாளியானான். ஓர் அத்தி மரத்தடியேல் நத்தானியேல் (Nathanael) என்ற நல்லான் ஒருவன் அமர்ந்திருந்தான். அவன் அருகில் சென்று பிலிப் பகர்வானாயினன்,

''உனது அருள் குருநாதனைக் காண நீ வரமாட்டாயா?''

''யார் என் அருள் குருநாதன்?'' என்றான் நத்தானியேல்,

''நாசரேத்து கிராமத்தில் வளர்ந்த நம்பி அவர்'' என்று பிலிப் பதில் சொன்னான்,

''அந்தப் பாழ் ஊரில் நம்பி ஒருவர் தோன்றுவது சாத்தியமாகுமா?'' என்று நத்தானியேல் வினவினான்.

''நீ நேரில் வந்து பார்த்து விஷயத்தைத் தெரிந்து கொள்'' என்றான் பிலிப். இருவரும் நம்பியாகிய ஏசுவிடம் புறப்பட்டுப் போனார்கள்.

''மனத்தகத்து மாசு படியாத மேன்மகன் ஒருவன் அதோ வருகிறான்'' என்றார் ஏசுநாதர்.

''அது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' என்று நத்தானியேல் கேட்டான்.

''அத்திமரத்தடியில் உங்கள் இருவர்க்குமிடையில் இன்னின்ன சம்பாஷணைகளெல்லாம் நிகழவில்லையா? அந்தச் சம்பாஷணை நிகழ்வதற்கு முன்பே நீ எனக்குரியவன் என்பதை பரமன் அருளால் நான் அறிந்துகொண்டேன்'' என்றார் ஏசு பெம்மான்.

''அப்படியாகில் நீங்கள் இறைவனுடைய திருக்குமாரனே!'' என்று நத்தானியேல் வியந்தான்.

''இன்னும் பல அற்புதங்களை நீ காணப்போகின்றாய், அதற்குள் அவசரப்பட்டு முடிவுகட்டவேண்டாம்'' என்று ஏசுநாதர் இயம்பினார். நத்தானியேல் அவருடைய சிஷ்யர்களில் ஒருவன் ஆகிவிட்டான்.

## தீர்க்கதரிசி

ஏசுநாதருக்கு வாய்த்த சிஷ்யர்களுள் தோமஸ் (Thomas) என்பவன் ஒருவன். தோமஸின் மனப்பான்மையைக் தெரிந்துகொள்ளவது நமக்கு எளிதாகிறது. தன் மனதில் இருந்ததை உள்ளபடி சொல்லும் இயல்பு அவனுக்கு இருந்தது. கேட்டதையெல்லாம் நம்பிக் கொள்ளும் பாங்கு அவனிடத்தில் இல்லை. ஏசுநாதர் தமது சிஷ்யர்களுடன் கடைசி விருந்து அருந்திக் கொண்டிருந்தார். தமக்கு வருதற்கிருந்த விபத்துக்களையெல்லாம் அப்பொழுது அவர் மறைமுகமாக எடுத்தோதினார். அப்பொழுது தோமஸிடமிருந்து பிறந்த தடை அவனுடைய மனப்பாங்குக்கு எடுத்துக்காட்டு ஆகிறது.

''நாதா, நீங்கள் பகர்வது ஒன்றும் எங்களுக்கு விளங்கவில்லை. நீங்கள் எங்கே போகின்றீர்கள்? போவதற்கு உங்களுக்குப் பாதையெது?'' என்று அவன் கேட்டான்.

ஏசுநாதர் மௌனமுற்று இருந்துவிட்டார். அவன் கேட்ட இந்தக் கேள்விக்கு விரிவான விடை தரவேண்டிய அவசியம் அவருக்குத் தோன்றவில்லை. ஆனால் ஒரே நாளில் அவர் உடலை உகுத்தவிதம், பரமனைச் சார்ந்திருந்த பெருமை ஆகிய யாவும் மேலும் நிகழ்ந்த நிகழ்ச்சியினின்று வெளியாயின.

தீர்க்கதரிசி ஒருவர்க்கு ஒரு ஜீவனுடைய முக்கால நிலையும் தெரியும். கண்ணாடிப் பெட்டிக்குள் உள்ள பொருள்களை நாம் காண்பது போன்று ஒரு ஜீவனுடைய மன அமைப்பை நிறைஞானி முற்றிலும் அறிந்து கொள்கிறார் அத்தகைய நிறை ஆற்றல் ஏசுநாதருக்கு இருந்தது. தமது சிஷ்ய கூட்டத்தை அவர் திரட்டியெடுத்தது அவருடைய நிறைஞானத்துக்குச் சான்று ஆகும். அத்தகைய சிஷ்யர்களுள் மிக முக்கிய மானவர்கள என்று பன்னிரண்டு பேரைப் பொறுக்கியெடுத்தார். அவர்களுக்குத் தனிப் பயிற்சியும் தனியான தெய்வீக ஆற்றல்களும் வந்தமைந்தன.

## நோய் போன்ற சிஷ்யன்

அந்தப் பன்னிரண்டு பேர்களாள் ஒருவன் யூதாஸ் (Judas) என்பவன். அவனுடைய இயல்பையும் ஏசுநாதர் நன்கு அறிந்திருந்தார். இறுதியில் தன்னை ஆட்கொண்டவர்க்கே துரோகியாக அவன் வந்து அமந்தான். நோய் ஒன்று உடலிலே தோன்றி, உடலிலே நிலைத்திருந்து, பிறகு உடலை அழிப்பது போன்று யூதாஸ் ஏசுநாதரின் திருக்கூட்டத்தில் வந்து வாய்த்தான். தமது பூலோக லீலை முற்றுப் பெறுவதற்கு அவனே காரண பூதமாக வந்து அமைவான் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். அப்படியிருந்தும் அவர் அவனுக்குத் தமது திருக்கூட்டத்தில் இடம் கொடுத்திருந்தது அவருடைய கருணை. தீமையே செய்கின்றவர்களுக்கும் கைமாறு கருதாது நலன் செய்வது கருணாகரனது இயல்பு ஆகும்.

யூதாஸ் என்னும் எதிர் காலத்து துரோகியிடத்தில் பணப்பற்று மிக இருந்தது. அதை ஏசுநாதர் நன்கு அறிந்திருந்தார். அவனைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே பொது மக்களுக்கும் பல இடங்களில் அவர் அரியதொரு உபதேசம் செய்து வந்தார். இந்த மண்ணுலகில் இருக்கும் பொருள்கள் மனிதனுக்கு உண்மையான செல்வம் ஆகமாட்டா. இவையாவும் அழிந்துபோம் தன்மையுடையவைகள். மனிதன் எதைத் தனது செல்வம் என்று கருதுகிறானோ அதிலேயே அவனுடைய மனது புதைந்து கிடக்கிறது. உலகப் பொருளைச் செல்வமென்று கருதுபவனின் மனது உலகப் பொருள்களிலேயே புதைந்து கிடக்கிறது. கடவுளின் அருளைச் செல்வமென்று கருதுபவன், கடவுள் அருளிலேயே தனது மனதைச் செலுத்துகிறான். அழியும் செல்வம் உலகப் பொருள். அழியாத செல்வம் கடவுளின் அருள். பொருளை நாடுபவன் அருளை நாடுவதில்லை. அருளை நாடுபவன் பொருளில் பற்றுவைப்பதில்லை. இப்படி ஏசுநாதர் பல தடவைகளில் பகர்ந்தார். யூதாஸ் இக்கோட்பாட்டை எவ்வளவு தூரம் ஏற்றுக்கொண்டான் என்பதை அவனுடைய இறுதிச் செயல் விளக்கிற்று. அவனுடைய மனதைவிட்டுப் பொருளாசை போகவே யில்லை.

## தனிச்சிறப்பு

தமது சிஷ்யர்களை ஏசுநாதர் தேர்ந்து எடுத்ததில் தனிச்சிறப்புகள் உள்ளன.

மனிதனுக்குக் கிடைக்கும் வாய்ப்புக்குள் கல்வி மிக முக்கியமானது. மனிதனை அது எவ்வளவு தூரம் பண்படுத்துகிறது என்பது சொல்லாமலே விளங்கும், கல்வியின் மூலம் மனிதன் மிக மேன்மையடைகிறான். ஆனால் தமது சிஷ்ய கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் கல்விமான்களாக இருந்தாக வேண்டும் என்று ஏசு கருதவில்லை. அவருடை சிஷ்யர்களில் பலர் கல்வியிலும் கேள்வியிலும் மிகக் கீழ்நிலையில் இருந்தார்கள் என்று இயம்பலாம்.

குலமும் குடும்ப அந்தஸ்தும் அவருடைய அருள் இயக்கத்தில் ஏதேனும் இடம் பெற்றனவா என்பது அடுத்த கேள்வி இல்லை. தமக்கு சிஷ்யர்களாக வாய்த்தவர்கள் எக்குடியில் பிறந்தவர்கள், எக்குலத்தைச் சேர்ந்தவர்கள் என்னும் கேள்விகளை அவர் ஒரு நாளும் கிளப்பவில்லை.

தொழிலை முன்னிட்டு அவர் மனிதர்களை மதிப்புப் போட்டாரா என்பது அடுத்த கேள்வி. அதுவும் இல்லை. தொழிலையும் அவர்பொருள் படுத்தவில்லை, வலைவீசி, மீன்பிடித்து உயிர்வாழ்ந்திருந்த செம்படவர்கள் பலர் அவருடைய சிஷ்யர்கள் ஆனார்கள். மனிதன் மேலோன் ஆவது தொழிலை முன்னிட்டும் அல்ல.

அப்படியானால் எதை அளவையாக வைத்துக்கொண்டு ஏசுநாதர் மக்களின் தகுதியை மதிப்புப் போட்டார்?

மனிதனுடைய மனபரிபாகம் எத்தகையது என்பதைத்தான் அவர் கவனித்தார். நல்ல மனமுடையவன் நல்லான் ஆகின்றான். நல்ல மனமுடையவன் ஆவது கல்வியை முன்னிட்டுமல்ல; உயர்குடிப் பிறப்பை முன்னிட்டுமல்ல; மேலாம் தொழிலை முன்னிட்டுமல்ல; நல்லெண்ணத்தினின்றே நல்ல மனம் உரு எடுக்கின்றது. நல்ல மனமுடையவர்கள் தங்கள் வாழ்க்கையைக் கடவுள் வழிபாட்டுக்கும் கடவுள் தொண்டுக்கும் என்று ஒப்படைப்பார்களாகில் அவர்கள் கடவுள் அருளுக்குப் பாத்திரமாகிறார்கள். அன்னவர்களுக்கு அலாதியான அந்தஸ்தும், ஒப்பற்ற ஆற்றலும், நூல்களிலிருந்து அகப்படாத நுண்ணறிவும் வந்துவிடுகின்றன. இது மேலாம் வாழ்க்கையைப் பற்றிய மர்மம். ஏசு நாதருடைய சிஷ்யர்கள் இதற்கு நல்ல சான்று ஆவார்கள்.

## இயக்கம் ஆரம்பம்

மேலாம் இயக்கம் ஒன்றை உலகத்திலேயே தொடக்கி வைக்கின்ற உத்தமர் ஒருவர் அத்தகைய இயக்கம் நீடூழி நிலைத்திருந்துவிரிவடைவதற்கான ஏற்பாட்டையும் செய்கிறார். குரு சிஷ்ய பரம்பரை ஒன்றே அதற்கு உற்ற உபாயம். குருவுடைய மேலாம் கருத்துக்களெல்லாம் சிஷ்யர்களிடத்து ஒப்படைக்கப்படுகின்றன. இதை மற்றொரு பாங்கில் பகருமிடத்து மதஸ்தாபகர் ஒருவர் மண்ணுலகில் முதலில் ஆலயம் கட்டுவதில்லை. மக்களுடைய உள்ளத்திலேயே அவர் ஆலயம் கட்டுகிறார். தகுதிவாய்ந்த நல்ல சிஷ்யர்கள் நல்ல ஆலயங்களெனக் கருதப்படுகின்றனர். உடல், பொருள், ஆவி அனைத்தையும் தம்மிடத்து ஒப்படைத்துவிட்ட நல்ல சிஷ்ய கூட்டத்தை ஏசுநாதர் திரட்டியெடுத்தார். அவர்கள் மூலம் தமது பேரியக்கம் உலகில் பரவிக் கொண்டே போகும் என்ற உறுதிப்பாடும் அவருக்கிருந்தது.

தமது சிஷ்யர்களை தர்ம பிரசாரத்தைத் தரணியில் [illegible] என்பதையும் ஏசுநாதர் காட்டியுள்ளார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கழகங்களுக்கு இடையிலான

# கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை ஆரம்பம்!

எட்டாவது ஆண்டாக யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் வி. க. நடத்தும் 'டொனால்ட் கணேஷ்குமார் வெற்றிக் கிண்ண" கிரிக்கெட், போட்டி நாளை ஆரம்பமாகின்றது.

யாழ்ப்பாணத்தில் 'லீக்' அடிப்படையில் முதன் முறையாக நடத்தப்படும் இப்போட்டியில் 9 கழக அணிகள் பங்கு பற்றுகின்றன. ஐம்பது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட இச்சுற்றுப் போட்டியின் 21 ஆட்டங்களையும் ஒன்றரை மாதத்துக்குள் நடத்தி முடிக்கத் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

இச்சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்களுக்கு முந்திய போட்டிகள் இரண்டு சுற்றுக்களைக் கொண்டதாக இருக்கும்.

பங்கு பற்றும் ஒன்பது அணிகளும் முதலில் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவில்

## விளையாட்டுத் துறை

உள்ள மூன்று அணிகளும் முதல் சுற்றில் தங்களுக்குள் மோதிக் கொள்ளும். அந்த ஆட்டங்களில் அவை பெற்றுக் கொள்ளும் பெறுபேறுகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டு முதல் சுற்றில் ஒவ்வொரு குழுவிலும் அணிகளின் நிலை வரிசைப்படுத்தப்படும்.

இவ்வாறு முதல் சுற்றில் ஒவ்வொரு குழுவிலும் முதலாம் இடம் பெறும் அணிகள் தமக்குள்ளும், இரண்டாம் இடம் பெறும் அணிகள் தமக்குள்ளும், மூன்றாம் இடம் பெறும் அணிகள் தமக்குள்ளும் இரண்டாவது சுற்றுஆட்டங்களில் மோதும்.

பின்னர் ஒவ்வொரு அணியும் முதல், இரண்டாம் சுற்றுகளில் தாங்கள் பங்குபற்றிய நான்கு ஆட்டங்களிலும் பெற்ற பெறுபேறுகளின் புள்ளி அடிப்படையில் வரிசைப்படுத்தப்படும்.

இந்த வரிசையில் முதல் நான்கு இடங்களைப் பெறும் அணிகள் விலகல் முறையிலான அரையிறுதி ஆட்டங்களில் கலந்து கொள்ள, அதனடிப்படையில் இறுதியாட்டத்தில் பங்குபற்றும் இரு அணிகளும் தெரிவு செய்யப்படும்.

இத்தகைய சுற்றுப்போட்டி ஒழுங்கமைப்பினால்—

சுற்றுப்போட்டிக்கான அணி ஒழுங்குத் தேர்வில் அணிகள் அதிர்ஷ்டத்தை மட்டும் நம்பியிராமல், திறமை அடிப்படையில் தகுதி பெற சகல கழகங்களுக்கும் சம வாய்ப்பு அளிக்கப்படுவதாக சுற்றுப் போட்டியை நடத்தும் சென்றலைட்ஸ் கழகத்தின் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

ஆட்டங்களின் போது அணிகளுக்கு புள்ளி வழங்கும் முறை வருமாறு:-

★ ஒவ்வொரு ஓட்டத்திற்கும் — 0.01 புள்ளி

★ வீழ்த்தும் ஒவ்வொரு விக்கெட்டுக்கும் — 0.1 புள்ளி.

★ ஓர் ஆட்டத்தில் பெறும் வெற்றிக்கு — 1.0 புள்ளி.

முதல் சுற்றில் அணிகளின் ஒழுங்கு வருமாறு:-

★ குழு A:- மானிப்பாய் பரிஷ் வி. க., கொக்குவில் மத்திய ச. ச. நிலைய வி. க. (கே. ஸி. ஸி. ஸி.), யூனியன்ஸ் வி. க,

★ குழு B:- சென்றலைட்ஸ் வி. க., யாழ். பல்கலைக்கழக அணி, ஜொனியன்ஸ் வி. க.

★ குழு C;- ஜொலி ஸ்ரார்ஸ் வி. க., பற்றிஸியன் வி. க., கிறாஸ் கொப்பர்ஸ் வி. க.

பெரும் பணச் செலவில் நடத்தப்படும் இச்சுற்றுப் போட்டிக்கு ஒத்துழைப்பு வழங்க யாழ். நகர வர்த்தகர்கள் பலர் முன் வந்துள்ளனர்.

ஒவ்வொரு ஆட்டத்தின் நாயகனுக்கும் தலா ஆயிரம் ரூபா பணப்பரிசில் வழங்கப் படவுள்ளது. இது தவிர, இறுதியாட்டத்தில் திறமையான வீரர்களுக்கு இரண்டாயிரம் ரூபாவும் ஆட்டத் தொடரின் நாயகனுககு மூவாயிரம் ரூபாவும் பரிசளிக்கப்படவுள்ளது.

இதனால் இச்சுற்றுப் போட்டியில் தொடர்ந்து திறமையாக விளையாடக் கூடிய ஒரு வீரர் பத்தாயிரம் ரூபாவரை பணப்பரிசில் பெற வாய்ப்புள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளும், ஊக்குவிப்பும் யாழ். நகரில் எதிர் காலத்தில் கிரிக்கெட் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் வழியமைப்பதாக அமையும் என எதிர்பார்க்கலாம்,

இச்சுற்றுப் போட்டியில் நாளை காலை 9. 30 மணி முதல் நடைபெறும் ஆரம்ப ஆட்டங்களின் விவரம் வருமாறு:.

★ யாழ். குகன் ஸ்ரோர்ஸ் ஆதரவுடன் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் வி.க. அணி மோதும்.

★ யாழ். முருகன் ஸ்ரோர்ஸ் ஆதரவுடன் யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறும். ஆட்டத்தில் ஜொலி ஸ்ரார்ஸ் வி. க. அணியை எதிர்த்து கிறாஸ் கொப்பர்ஸ் வி. க. அணி மோதும். ★

---

## கம்போடியாவை...

(II ஆம் பக்கத் தொடர்)

தானிகள் கூறுகின்றனர். ஹூன்சென்னின் கம்போடிய மக்கள் கட்சி கிராமப்புறங்களில் அமோக ஆதரவு பெற்றுள்ளது.

### சமரசவாய்ப்பு முற்றாக இழப்பு

கம்போடியாவில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமை சமரசத்துக்கான வாய்ப்புக்களை முற்றாக இல்லாமல் செய்து விட்டது.

பாரிஸில் ஒப்பந்தம் கைச்சாத்தாகி 1993 இல் புதிய அரசாங்கம் பதவி ஏற்ற போது நெருக்கடிக்குள் சிக்கி தீர்வுகண்ட உலக நாடுகளுக்கு ஓர் உதாரணமாக கம்போடியா விளங்கியது.

தற்போது ஐ.நா. ஏற்பாட்டில் ஏனைய நாடுகளில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் போன்று கம்போடிய ஒப்பந்தமும் நெருக்கடியை எதிர் நோக்குகிறது.